வெளியீடு எண். 330.

சாத்திரங்களும் தோத்திரங்களும்

தருமபுர ஆதீனம்
1954

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-ஆவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

ஜன்மநக்ஷத்ரவிழா மலர்

ஜய ஹு ஐப்பசி மீ கூ உ

25—10—1954

வெளியீடு எண் 330

ஸ்ரீ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

ஞானசாத்திரங்களும் தோத்திரங்களும்

இவை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

பணித்தருளியவாறு

தருமபுர ஆதீனப் புலவரும்
பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவருமாகிய
சித்தாந்தரத்நாகரம், வித்துவான்,

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

ஆராய்ச்சி முன்னுரையுடன்.

திருக்கடவூர்த் தேவஸ்தானம் கட்டளை விசாரணை,

வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால்

வெளியிடப்பெற்றன.

1954

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருவே துணை

முன்னுரை

1 திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்

இது தருமைக் குருமுதல்வரால் அருளப்பெற்றது.

திரிபதார்த்தம் - முப்பொருள். திரி - மூன்று. பதம் - சொல். அர்த்தம் - பொருள், வஸ்து. சொற்பொருள் வாச்சியார்த்தம் லட்சியார்த்தம் என்று இருவகைப்படும். உதாரணம்: சொல் - நெல். இங்கு, நெல் என்று சொன்னால் விளங்குவது வாச்சியார்த்தம். நெல்லைக் காட்டக் காணப்படும் அது லட்சியார்த்தமாம். இத் திரிபதார்த்தம் லட்சியார்த்தமாய்ப் பாசம் பசு பதி என்னும் முப்பொருளையும் குறித்தது.

ரூபாதி - ரூபம் முதலியன. தத்துவரூபத்தை எட்டாக வகுத்துத் தரிசனம் சுத்தி இரண்டும் கூட்டிப் பத்தாக்கியதால் ரூபாதி எனப்பட்டன. அவை சுபாவம் முதலியன. அவை முப்பொருளும் பற்றிய தசகாரியத்தின் பேதங்களாய் அகவற்பாவால் ஆனதால் தசகாரிய அகவல் ஆயிற்று. ஆகவே திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் என்று இதற்குப்பெயர் எய்திற்று. ஒவ்வொன்றற்கும் பத்துள்ளதால் தசகாரியம் எனவுமாம்.

இத் தசகாரிய அகவலில் பாசம், பசு, பதி எனப்படும் முப்பொருளுள், பாசத்திற்குரிய 1. சுபாவம், 2. வியாத்தி, 3. வியாபகம், 4. குணம், 5. விசேடம், 6. ரூபகம், 7. ரூபம், 8. சொரூபம், 9. தரிசனம், 10. சுத்தி என்னும் பத்தும் முதலில் விளக்கப்பட்டன.

அடுத்து, பசுவின் சுபாவம் முதலிய பத்தும் உணர்த்தப் பட்டன. அது பாசம் நீங்கி, ஆன்மா என்னும் பெயர்க்கு உரியதாய், சிவப்பேறு எய்தியக்கால், அச்சிவம் அவ்வான்மா வால் அடையப் பெறுவதும் ஆன்மா அச்சிவத்தை அடை

வதும் ஆகும் 'ஆன்மலாபம்' என்று வழங்கப் பெறுவதும் அப்பத்தொடு சேர்த்துக் கூறப்பட்டது. படவே 'ஆயவை பன்னொன்று' என்றருளலாயிற்று. முடிவில், பதிக்கு உரியன பதினொன்று காட்டப்பட்டன. படிநும், பத்தாவதும் பதினொன்றுவதும் ஆன்மாவிற்கும் சிவத்திற்கும் வேறுபட்டிருத்தல் விளங்கும். பாசத்திற்கும் ஆன்மாவிற்கும் பத்தாவதாகச், 'சுத்தி' என்பது உண்டு. சுத்தி என்பது இங்கு நீங்குவதைக் குறிக்கின்றது, சிவசுத்தி என்று ஒன்று இல்லை. அதற்குக் காரணம் சிவம் ஆன்மாவைவிட்டு என்றும் நீங்குவதில்லாமையே. ஆன்மா பாசத்தையும் நீங்கிச் சிவத்தையும் நீங்கினால் அது பட்டபாடனைத்தும் வீணாகிப்போம். ஆன்மலாபம் என்று ஒன்று இல்லையாய்ப்போம். ஆன்மா, பேற்றைப் பெருதொழியவோ பெற்று இழக்கவோ பாடுபடல் உண்டோ? உயிர்க்கு உயிராயிருந்த சிவத்தைப் பெறுதலே ஆன்மலாபம் ஆகும். சிவத்தைப் பெறுதற்கு முன்னரே சிவத்தொடு கூடுதல் இன்றியமையாதது. அதனால், சிவதரிசனத்தின் பின் சிவயோகம் ஆயிற்று. அச்சிவயோகத்தால் சிவத்தை அநுபவிக்கின்றது. அச்சிவாநுபவமே சிவபோகம். அச்சிவபோகமே ஆன்மலாபம். ஆன்மாவிற்கு உரியனவற்றுள் (பத்துக்குமேல்) ஆன்மலாபம் என்ற ஒன்றே, சிவனுக்கு உரியனவற்றுள் பதினொன்றுவதாகச் சிவனது போகம் எனப்பட்டது. சிவபோகம் ஆன்மலாபம் இரண்டும் பெயரால் வேறுபடினும் நிலையில் ஒன்றே. அங்குக் காரியம் ஒன்றும் இல்லை. அதனால், தசகாரியம் (பத்துச்செயல்) என்றது பொருந்துமாறு விளங்கும்.

1. ¹தத்துவரூபம், ²தத்துவதரிசனம், ³தத்துவசுத்தி.

2. ⁴ஆன்மரூபம், ⁵ஆன்மதரிசனம், ⁶ஆன்மசுத்தி.

3. ⁷சிவரூபம், ⁸சிவதரிசனம், ⁹சிவயோகம், ¹⁰சிவபோகம்

என்பவை தசகாரியங்களாகும். ஆயினும், இதில் தத்துவரூபமும், ஆன்மரூபமும், சிவரூபமும் தனித்தனி எட்டாக்கி விளக்கப்பட்டன. அவ்வெட்டுமே சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், ரூபகம், ரூபம், சொரூபம் ஆகும். பசு, பாசம் இரண்டற்கும் தரிசனம் சுத்தி என்பவற்றோடு சுபாவம் முதலிய எட்டும்சேர்ந்த தொகையே தசம் (பத்து) ஆகும். ஆன்மாவிற்குச் சிவப்பேருகிய ஆன்மலாபம் ஒன்றுசேரப் பதினொன்றாகும்.

பதிக்குச் சிவரூபத்தின் பிரிவான எட்டும் தரிசனம், யோகம், போகம் என்னும் மூன்றும் சேரப் பதினொன்றாயின. ஆயினும், தசகாரியத்தின் பகுப்பேயாதல்பற்றி, வழுவாகாமையை அறியலாம். பெறுவானாகிய ஆன்மாவிற்குப் பேறாகியது சிவம். அதனால், அச்சிவம் ஆன்மாவிற்கு இலாபம் ஆயிற்று. சிவஞானபோதம் சூத்திரம் கக-இல் உணர்த்தப்படுவது இதுவே.

பின்வரும் பத்து விளக்கத்துள்ளும் குறித்த மூன்று எண்களும் 1. பாசம், 2. ஆன்மா, 3. சிவம் ஆகிய முப்பொருளையும் முறையே உணர்த்த நின்றவை. அவற்றின் வேறுபாட்டை, சுபாவம் முதலியவற்றால் உணர்தல்வேண்டும். அவ்வுணர்ச்சியே இத் திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவலைக் கற்றுத் தெளிவுறும்வண்ணம் துணைநிற்கும்.

1 சுபாவம்

1. அறிவில்லாமை (சடம்)

2. தத்துவப்பொருளொடு கூடி அதுவாதல்.

3. தத்துவத் தொடர்பற்று நிற்றல்.

2 வியாத்தி

1. ஆணவம் முதலிய ஐந்தும் உயிர்க்கு மலமாயிருத்தல்.

2. தத்துவம் அனைத்திலும் அவை உள்ள அளவும் கலந்து விடயத்திற் பற்றுடையதாயிருத்தல்.

3. எல்லா இடத்திலும் எல்லாவுயிரிலும் தடையின்றியிருத்தல்.

3 வியாபகம்

1. (அ) கன்மம், சஞ்சிதம் பிராரத்தம் என்ற இருவகையிலும் புண்ணியபாவங்களாயிருத்தல்.

(ஆ) ஏனைய ஆணவம், மாயை, மாமாயை, திரோதம் நான்கும் ஒவ்வொன்றேயாகும். ஆயினும், அவை வெவ்வேறு வகையில் உயிரைப் பந்தம் செய்கின்றன.

ஆணவம் ஒன்றே ஆயினும் எல்லாவுயிர்களிடத்திலும் கலந்துநிற்கும்.

மாயை ஒன்றேயாய் வடிவுற நின்ருலும், தநுகரணபுவன போகங்களாய் நிற்கும்.

மாமாயை சுத்ததத்துவமும் சகலசாத்திரங்களுமாகிநிற்கும்.

திரோதானம் உயிரை மறைத்துக்கொண்டு நிற்கும்.

4 குணம்

1. சடமாயிருத்தல்.

2. அறியாமையை அடைதல்.

3. என்றும் அறிவு குறையாதிருத்தல்.

5 விசேடம்

1. தொழிற்படுதல், தொழில் செய்தல் (நஞ்சு சடமாறு லும் உட்கொண்ட உயிரைக் கொல்லுந் தொழில் அந்நஞ்சினுல் ஆகின்றது.)

2. அறியாமை குறுகியிருக்க மலபரிபாகம் உற்றபோது திருவருள் உணர்த்த உணர்வாய்விடுதல்.

3. சித்துக்குச் சித்தாயிருத்தலும் அசித்துக்களைத் தொழிற் படுத்தலும்.

6 ரூபகம்

1. பாசத்துவம் பிரிவற ஒன்ருய்ப் பரந்துநிற்றல்.

2. உடம்பிற்கு வேருய் உயிர் உண்டு என்று தன் உண்மையை உணர்தல்.

3. அறிவுக்கு அறிவாய் நிற்றல்.

7 ரூபம்

1. பாசம் உண்டு என்னும்படி தேகரூபமாய் உயிர்களைப் பந்தித்து நிற்றல்.

2. பசு இச்சா ஞான க்ரியாரூபம் உடைமை.

3. உயிர்களைக் காக்கும் இச்சை, உணர்த்தும் ஞானம், போகங்களை நுகர்விக்கும் கிரியை ஆகிய மூன்றும் பதிக்கு ரூபம்.

8 சொரூபம்

1. (அ) ஆணவம்: செம்பிற் களிம்புபோல உயிரில் மன்னி மறைப்பித்தல்.

(ஆ) மாயை: நஞ்சுபோல மிக்க மயக்கம் செய்தல்.

(இ) கன்மம்: தண்டிப்பவன் தண்டனைபோலத் தன் பயனை ஊட்டி வருத்துதல்.

(ஈ) மாமாயை: தேர்ப்பாகன் போலச் செலுத்தி நிற்றல்.

(உ) திரோதானம்: ஆணவமாகிய இருளுக்குத் துணையான இருள்போல எங்கும் பிரியாது நிற்றல்.

2. வானவில் போலப் பொய்யாகும் இவ்வுடம்பு மெய் போலத் தோன்றும். இது பொய் என உணர்த்த உணர்தல்.

3. ஒன்றேடும் தோயாதிருத்தல்,

9 தெரிசனம்

1. பொய்யைப் பொய் என்று அறியாமல், தானே பிரமம் என்று மயங்கிச், சுகதுக்கங்களை உயிர் அடைவதற்குத் துணையாய் நிற்றல்.

2. வியாபக அறிவுடைமை.

3. நிர்விகற்பமாய் எங்கும் பூரணமாய் நின்ற நிலையை அறிதல்.

10 சுத்தி

1. பாசநீக்கம்: (பாசம், தன்னை உயிர் திருவருளால் நீக்கத் தான் நீங்குதல்.)

2. பசுகரணம் சிவகரணமாதல்:- (தன் இச்சாஞானக்ரியா விகாரம் அற்றுச், சிவனுடைய இச்சாஞானக்ரியா சத்தியைப் பெற்றிருத்தல்.

3. சிவயோகம்:- ஆன்மாக்கள், தன்னைக் கூடும்வண்ணம் காட்சி அருளி (சிவதரிசநம்) இணங்கிநிற்றல் (சிவயோகம்.)

11 ஆன்மலாபம் – சிவபோகம்

" மும்மலங்களும் நீங்கி, எல்லையில்லாத
சிவாநந்த போகம் புசித்தல். "

இவ்வாறு இத்தசகாரிய அகவலுள் விளக்கப்பட்ட பொருளெல்லாம் தருமைக் குருமுதல்வர்க்குத், தேசிக சிகாமணியாகிய கமலை ஞானப்ரகாசரால் அருளப்பெற்றவை. இதனை இஞ் ஞானசாத்திரத்தின் முடிவில் உள்ள நான்கடிகளும் உணர்த்துதல் காண்க.

2 சிவாநந்தபோதசாரம்

இது திருவாரூர்ச் சிதம்பரநாத ஞானப்ரகாசர் (கமலை ஞானப்ரகாசர்) அருளிய 'சிவானந்தபோதம்' என்னும் ஞான சாத்திரத்தின் சாரமாகச் செய்தருளப்பெற்றது. அதனால், சிவானந்த போதசாரம் எனலாயிற்று, இதனை அருளியவர் (தருமபுர ஆதீனத்து முனிவருள் ஒருவராய்விளங்கிய) சிவாநந்த முனிவர். அவர் எட்டாவது பட்டத்து எழுந்தருளிய திருச் சிற்றம்பல தேசிகர் திருவடிகளை வழிபட்டவர். பத்தாவது பட்டத்து விளங்கிய சிவாநந்ததேசிகர் ஆட்சிக்காலத்தில் ஜீவந் முக்தராய்த் திகழ்ந்தவர். இவர் இயற்றியருளிய சிவாநந்தமாலை, சம்பிரதாயதீபம் என்பவற்றில் இவ்வுண்மையை அறியலாம். சுவர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பல முனிவரும் தாயுமானவரும் சிவானந்த முனிவரும் ஒருகாலத்தவர் என்று முற்பதிப்பின் முன்னுரை உணர்த்துகின்றது. பக்கம் 13 பார்க்க.

சிவாநந்த போத சாரம் எனப்படும் இஞ் ஞான நூற் பொருள், பண்டு சைவாசார சிலர் பலருடைய அநுபவத்தில் இருந்தது. இன்று இது முற்றும் விளங்காதநிலையில் இருப்பது குறிக்கத்தக்கது.

இக்காலத்தில் இஃது அநுபவத்திலுள்ளதென்றோ அறிந்ததென்றோ கூறுவாரிலர். இதன் மணம் எவ்விடத்திலும் தோன்றவில்லை, இதுபற்றி அடியேன் உள்ளம் சைவத்தின் இக் காலநிலையை எண்ணி எண்ணிக் கவல்வதுண்டு. என்கவலையை ஒரு சிறிது இவ்வெளியீடு விலக்கிற்று. இஃது அநுபவத்தில் பலர்க்கு எய்தும் நாளில்தான் அது முற்ற விலகும். அடியேன் இந்நூற் பொருளநுபவத்தைப்பெற, உபதேசித்தருளியவர்கள், சூரியனூர் கோயிலாதீனத்து முனிவரும், இலக்கண சுவாமிகள் என வழங்கப் பெற்றவரும், சிவஞான மாபாடியத்தை வெளியிட்டவரும் ஆகிய ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் ஆவார்கள். அத்திருவருட்பேற்றால், தருமபுர ஆதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவடிகளுக்கு ஆட்பட்டேன். ஆட்பட்ட அந்நலமே, இந்நூல் முதலியவற்றை நன்குநோக்கிப் பதிப்பிக்கும் ஞானத்தொண்டு செய்வித்தது. மடாலயங்களின் அவசியமும் பயனும் இதனாலும் இனிது விளங்கும்.

இந்நூற் பொருளைத் தெளியவுணர்ந்து அநுபவத்தில் கொண்டுவர விரும்பினால், 'துகளறுபோதம்' என்னும் ஞான நூலைக் குருபதேச மார்க்கத்தில் உணர்தல்வேண்டும். அதன் விளக்கமே இது. இதன் விளக்கமே 'சித்தாந்தசாரம்' ஆகும். ஆதலின், அவ்விரண்டும் இதனொடு சேர்க்கலாயின.

இந்நூற்பொருள், கேவலாவத்தையையும் சகலாவத்தையையும் நீங்கிச் சுத்தாவத்தையில் நின்று, சிவஞானத்தால் ஆற்றும் தசகாரியத்துள், சிவயோகம் சிவபோகம் என்னும் இரண்டன் விரியாக நிகழும் ஞானுவதாபேதம் ஆகும். அவ்வவத்தை மூன்றில், கேவலமாவது:- இச்சா ஞானக்கிரியைகளின் நிகழ்ச்சி சிறிதும் இன்றி ஆன்மா மாத்திரம் உள்ளநிலை. அஃது அறியாமைமட்டும் உள்ளநிலை, சகலமாவது,- பின்பு, தநு கரணம் முதலியவற்றோடுங்கூடி, அவ் விச்சா ஞானக்கிரியைகள் ஒரு சிறிது விளங்கும் நிலை, இஃது அறிவும் அறியாமையும் கலந்த

நிலை, சுத்தமாவது:- பின்னர், மலங்களெல்லாம் விலகச் சிவத் தொடுகூடி, அவ் விச்சாஞானக் கிரியைகள் எங்குமாய் வியாபித்து விளங்கும் நிலை. இஃது அறிவுநிலை. அறியாமை முற்றும் அற்ற தூய நிலையாதலின் 'சுத்தம்' எனப்பட்டது. இவ்வுண்மை,

"கேவல சகல சுத்தம் என்றுமூன் றவத்தை ஆன்மா
மேவுவன், கேவலம்தன் னுண்மை. மெய் பொறிகளெல்லாம்
காவலன் கொடுத்த போது சகலனும். மலங்க ளெல்லாம்
ஓவின போது சுத்தம் உடையன்உற் பவம்துடைத்தே"

"இருவினைச் செயல்கள் ஒப்பின் ஈசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்தம் ஆமே"

என்னும் (சிவஞான சித்தியார் சுபக்கம், 227, 230) திருவிருத் தங்களால் நன்கு உணரப்படும்.

1. உண்மைச் சரியையில் [1]சரியை [2]கிரியை [3]யோகம் [4]ஞானம்.

2. உண்மைக் கிரியையில் [5]சரியை [6]கிரியை [7]யோகம் [8]ஞானம்.

3. உண்மை யோகத்தில் [9]சரியை [10]கிரியை [11]யோகம் [12]ஞானம். என்னும் பன்னிரு வகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்களும் அவற்றின் பயன் களும் வெவ்வேறாகும்.

4. உண்மை ஞானத்தில் [13]சரியை [14]கிரியை [15]யோகம் என்னும் மூவகையினின்றும் பல வேறுவகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்களும் அவற்றின் பயன்களும் வெவ்வேறாகும். அவை முறையே சாலோக முதலிய பதமுத்திப் பேறும் அபர முத்திப் பேறும் ஆகும். 16 ஆவது உண்மை ஞானத்தில் ஞானம் ஆகும். அதுவும் பலவேறு வகைப்பட்டு விரியும். அப்பலவேறு வகையுள் முடிவாகிய ஞானம் ஒன்றே பரமுத்தியைப் பயக்கும்.

உண்மை ஞானநுபவம் உடைய ஜீவன்முக்தியில், முடிவு நிலையின்வழுவி மீண்டும் தலைப்படற்கண் நிகழும் அவதரங்களே இதிற்கூறிய முப்பதும் என்று உணர்க. இம்முப்பது அவதரங்கள் வேறு, தசகாரியங்கள் வேறு, ஒன்றென்று பேசிவரும் நவீனர்க்கு இதன் உண்மை விளங்குவதரிது, முப்பது அவதரத்தையும் தசகாரியத்தில் அடக்கிச் சொல்லுவன்' என்னும் அதுவே, அவை வெவ்வேறு ஆதலை உணர்த்தும். தசகாரியத்தையும் ஞானம்பற்றல், தான் பணியைநீத்தல், ஞேயத்தழுந்தல் என்று மூன்றில் அடக்கியதால், அம்மூன்றும் அப்பத்தும் ஒன்றே என்பர்போலும் அந்நவீனர். பெத்தம் முத்தி என்ற இரண்டன் விரிவே என்றலும் எளிதாமே! இம்மயக்கத்திற்குச் சிறிதும் இடம்கொடாதே, இச்சிவாநந்த போத சாரம்,

'முப்பது வகைப்படும் முத்திநல்நெறியினைச்
செப்புவன் அமைத்துத் தெசகா ரியத்தில்'

என்று தொடங்கிற்று. இதன் உரையில், 'உயிர் பஞ்ச மலங்களும் *பஞ்சசத்திகளும் கழன்று, சிவாநந்த அநுபவத்தைப் பெற்று அதனுள்ளே அழுந்தி, அவ்வின்பமேயாய் இருக்கும் மோட்சவழி' என்று விளக்கியவாறும் இங்கு உணரத்தக்கது. தசகாரியக் கட்டளைகளினும் வேருய்த், 'துகளறு போதக் கட்டளை' என்று தனியாக ஒரு நூல் உள்ளதும் அறிதற்பாலது. அவ்வாறு வேறு தோன்றியதன் காரணம் யாது?

"ஆன்மாப், போதவிகாரங்கள் நீங்கி அருந்தா நின்ற ஆனந்தம்" (பக்கம், 29) என்றதால் போதவிகாரங்கள் நீக்கும் வழியே இதில் உணர்த்தப்பட்டது என்பது தெளிவாயிற்று. 'அவதரத்தைக் காரியத்தில் அடக்கிச் சொல்லுவன்' (பக்கம், 17) என்றதால் அவதரமும் காரியமும் வெவ்வேறுதல் விளங்கிற்று, 'அடக்கிச் சொல்லுவன்' என்றதில், அடக்குதல் (பிறவினை) வெளிப்பட்டது. அடங்குதல் (தன்வினை) இயல்பில் இல்லையாம்.

தசகாரியம் சுத்தாவத்தையின்கண் நிகழ்வன. அச் சுத்தாவத்தை சகலாவத்தையை நீங்கிய பின்னர் ஆவது, இம்முப்பதவ

*1. பராசத்தி. 2. ஆதிசத்தி. 3. இச்சாசத்தி. 4. ஞானசத்தி. 5. கிரியாசத்தி.

தரமும் அச் சுத்தாவத்தையுள் நிகழும் முத்திச் சகல தரிசனத் திணைத் தொடக்கத்தில் உடையன. தசகாரியம் முத்திபெறத் தக்க ஆன்மாக்கள் எல்லாவற்றிற்கும் பொது. இம் முப்பதவ தரங்களும் சமாதிநிலை எய்தியவர்கள் அந்நிலை தவறும்போ தெல்லாம் மீண்டும் மீண்டும் அதனைத் தலைப்பட நிற்கும் வழி (நெறி)யின. அதனால்தான் 'முத்தி நன்னெறி' எனப்பட்டது' நன்னெறி என்றாலே அமைவதாயிருக்கவும் முத்தி என்று அடை புணர்த்து அதன் விசேடம் உணர்த்தியவாறு உணர்க, இந் நூலின் முடிவில்,

'மெய்யுறு சமாதியை விடுத்தும் அவ்வருளினுள்
வையகம் காண்பது மறித்துக் காட்சியே'

என்றதால், சமாதிநிலை தவறுதலும், மீண்டும் அது பெறுதலும் அப்பேற்றை எய்தப் பைம்மறித்துக் காணுங் காட்சியும் ஜீவந் முக்தி எய்தியவர்பால் உள்ளமை விளங்கும்.

சித்தாந்த சாரத்தில், 'மூவாத முத்திநெறி முப்பது அவதாரமும்' என்றும், 'அருளில் உயிர்கூடும் நெறி முப்பது அவதாரமாம்' என்றும், 'சொல்லிய இந்நிலை (சமாதிநிலை) கலங்கில் அஞ்செழுத்தை விதியால் சொரூபசுபாவம் தெரிந்து உச்சாரணத்தின் வழியே புல்லிய ஞானச் சுடரைத் தூண்டி நேயத்தால் பொருந்தி ...பரைநிறைவில்...சிவமாம்' என்றும் வருவனவும் இவ்வுண்மையை வலியுறுத்தித் தெளிவுறுத்துதலை உணர்க.

3 துகளறுபோதம்

துகள் - போதவிகாரம், அறு - அற்ற, போதம் - பரஞானம். அஃது இங்கு அதைப்போதிக்கும் நூலைக் குறித்தது. இதன் பொருளைத் தெளிவிக்கும் 'துகளறு போதக் கட்டளை' என்னும் வேறொரு நூலும் உளது. அதைக்கொண்டு இதை உணரலாம்.

இது காழிப் பழுதைகட்டிச் சிற்றம்பலநாடிகளால் செய் தருளப்பெற்றது. அவர் கங்கை மெய்கண்டார்க்கு மாணாக்கர் என்று சிவாநந்தபோத சாரத்தின் முன்னுரையாலும் அறிய லாம்.

இது திருவருள் விளையும் திறம் உணர்த்துவது. அத்திறமே முப்பதவதரமென்று முற்குறித்ததாகும்.

இந்நூலின் தலைப்புக்கள், எல்லாப் பதிப்புக்களிலும் பிறழ்ந்திருக்கின்றன. அப்பிறழ்ச்சியும் வெவ்வேறுயுளது. இந்நூலின்கண் உள்ள அவதரம் இருபத்தெட்டு என்பாரும் முப்பது என்பாருமாக இருதிறத்தர் உளர். அவற்றை இங்குக் குறித்தல் இன்றியமையாததாகும்.

		இருபத்தெட்டு		முப்பது
1.	சாக்கிரம்	12	...	19
2.	சொப்பனம்	6	...	1
3.	சுழுத்தி	1	...	1
4.	துரியம்	3	...	8
5.	துரியாதீதம்	6	...	1
		28		30

அவ்விருதிறத்தார் கொள்கையும் வெவ்வேறு வெண்பாவால் விளக்கப்பட்டமை இதன் 37-ஆவது பக்கத்தில் அறியலாம். இவ்வெளியீட்டில், (பக்கம். 35. 37) இரண்டு அகவற்பாக்கள் உள்ளன. அவற்றுள் முதலாவது, துகளறுபோதம் என்னும் ஞானநூலின் இருபத்தெட்டு அவதரங்களையும் பதின்மூன்றும் பதினைந்துமாகப் பிரித்து, இருபத்தெட்டு என்னும் வரையறையை முதலிலும் முடிவிலும் கொண்டுணர்த்துகின்றது. அதில், 'பரையோகம்' காணப்பட்டிலது. அஃது இக்காலத்து அநுட்டானத்தில் இல்லாது போனவாறே, அவ்வகவற்பாடலிலுமில்லாது அகன்றது வருத்தம் விளைவிப்பதாகும். அங்கு, யாப்பமைதியும் கெட்டுநிற்கின்றது. எதுகையும் மோனையும் சிறப்புற அமைத்துப் பாடிய அவ்வருளாசிரியர் பாட்டில் அவ்வாறு அமைதி கெட்டிருத்தல் கருதத்தக்கது. வேறு யாண்டேனும் அப்பாடலின் தொல்லமைதி கிடைப்பின் நினைவு கூர்தற்குத் துணையாகும். பதியவதரத்தில், பதினைந்து எனப்பட்டவற்றுள், ஒன்று குறைதலும் அது 'பரையோகம்' ஆதலும் இந்நூலொடு அவ்விரண்டகவற்பாக்களையும் ஒருங்குவைத்து நோக்கி ஆராய்வார் தெளிவுறுவர்.

இவ்வெளியீட்டில் இருபத்தெட்டு அவதாரம் என்னும் கொள்கையை உணர்த்தும் அகவற்பாட்டில் உள்ளவாறே வெண்பாப்பகுப்பு அமைந்திருத்தல் குறிக்கத்தக்கது. 47-ஆவது வெண்பாவின் தலைப்பாக இருக்கத்தக்க 'முத்திசாக்கிரம்' என்பது, அதன்கீழ் இருப்பது ஏட்டில் எழுதியவர் செயலாயிருக்கலாம். ஆயினும், அது பதினேழாவது அவதரமாகவே கொள்ளப்பட்டதென்றுணர்க. அதற்குரியனவே 47, 48 ஆம் இருவெண்பாவும் என்பது, துகளறுபோதப் பாடற் பகுப்பு உணர்த்தும் அகவற்பாவுள் 'சாக்கிரம் இரண்டும்' என்றதால் விளங்கும்.

இந்நூலின் செய்யுள் காப்புடன் நூறாகும். பிறபதிப்புக்களின் முடிவில் உள்ள திருவெண்பா கொடிப் பாட்டுள் ஒன்றுதல் வெளிப்படையாகும். இந்நூலுக்குப் பழையவுரை இதுவரையில் வெளியிடப்படவில்லை. 1898 இல் நாகபட்டினம் வேதாசலம் பிள்ளை (மறைமலை அடிகள்) அவர்கள் புத்துரை எழுதி வெளியிட்டார்கள், அதன் இயல்பை 17 ஆவது வெண்பாவின் உரையாலும் அறியலாம்.

யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவர் எழுதிய புத்துரையும் உண்டு. துகளறு போதக் கட்டளையினும் விளக்கம் செய்வது ஒன்றும் இல்லை.

இந்நூலே சிவாநந்தபோதம், சிவாநந்தபோதசாரம், சித்தாந்தசாரம் முதலியவற்றிற்கு ஆதாரமான தலைமையுடையது. இதன் விளக்கமே அவை எல்லாம். இதனோடு அவற்றை வைத்து உணர்வார்க்கு அவ்வுண்மை நன்கு புலனாகும்.

4 சித்தாந்த சாரம்

இதன் சிறப்பு முதலியவற்றைப் பழைய முன்னுரையால் அறியலாம். ஆயினும், 'பரைவியாத்தம்' உணர்த்தும் இருபத்தொன்றாவது திருவிருத்தத்தில் உள்ளதற்கு ஏற்ப, ஏழாவது எட்டாவது திருவிருத்தங்களுள், உணர்த்தப்படும் முப்பது அவதரங்களின் இடையில், அப் 'பரையில் வியாத்தி' குறிக்கப்பட்டிலது. அதனால் முப்பதுக்கு ஒன்று குறைகின்றது.

குறையவே, இவ்வுண்மை புலப்படாமற்போயிற்று. போகவே, 32-ஆவது பக்கத்தில் 16; 17 க்கு இடையில் பரையில் வியாத்தி என்று குறிக்காமல் விடலாயிற்று. ஆகவே, அங்கு (சித்தாந்த சாரம். 8 இல்) பகர்ஞாறுதீதம் பரைதரிசனம் வியாத்தம் என்னும் அமைதி இன்றியமையாதது ஆகும் என்க.

இந்நூல் முப்பது அவதரத்தையும் இனிது விளக்குகின்றது. முப்பொருளியல்புகளையும் தெளிவிக்கின்றது. தசகாரியத்தில் அடக்கிச்சொல்லும் முறையையும் உணர்த்துகின்றது. இது வடிவில் சிறியதெனினும் அருளை உணர்த்தும் நெறியில் மிகப் பெரியது ஆகும். ஆதலின், உண்மை ஞானமுத்தியை அடைய விரும்பும் அன்பர் அறிஞர் பலரும் இதனை நன்கு கற்றுப் பேரின்பப் பயன் எய்துக.

தாயுமானவர் திருப்பாடற்றிரட்டில் 'தன்னுண்மை', 'அருளியல்பு', 'பொருளியல்பு', 'ஆனந்த இயல்பு' என்னுந் தலைப்புக்களின்கீழ் உள்ள கண்ணிகளாலும் இம் முப்பது அவதரங்களின் விளக்கத்தைப் பெறலாம்.

உண்மைநெறிவிளக்கத்தின் உரையில், பாசஅவதரம் ஏழு, பசுஅவதரம் பதினைந்து, பதிஅவதரம் எட்டு என்றும் ஞான தரிசனமாம் சாக்கிரத்தில் பதிமூன்று, பரைதரிசனமாம் சொப்பனத்தில் நான்கு, சுத்தபராயோகமாம் சுழுத்தியில் நான்கு, பரமாநந்த யோகமாம் துரியத்தில் ஆறு, பரமாநந்தபோகமாம் துரியாதீதத்தில் மூன்று, ஆக 5 அவத்தையுள் 5 அவதரமாய் அடங்கிவரும் என்றும் உள்ளது.

5 தோத்திரங்கள்

இவ்வெளியீட்டின் பிற்பகுதியாகிய தோத்திரப்பாடல்கள் எல்லாரும் நாள்தோறும் பாராயணம் செய்து திருவருளைப் பெறுதற்குத் துணையாயிருப்பன. அவற்றை அருளிய தருமபுர ஆதீனத்துப் பத்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் போல, அவையும் திருவருட்பொலிவொடு திகழ்கின்றன. பாடிப்பாடி இன்பம் நுகர்வதன்றி, வேறு எழுதவோ சொல்லவோ முயல்வது

திருவருட்சுவையைக் கொடாது. அவற்றின் கருத்துக்களை உற்றுணர்ந்தால், சைவ சித்தாந்தச் செந்நெறி யொழுக்கம் இனிது புலனாகின்றது.

அளவில்லாத பாக்களைப்பாடி அருளிய அக்குருமூர்த்திகள் செய்த அற்புதங்களுக்கும் அளவில்லை. தருமபுர மடாலயத்தின் பெருமைகளுள் அவர்க்கே பெரும்பகுதி சேர்கின்றது. வானத்திற்பறந்து சென்ற சித்தர் நிழலை மண்ணில் நோக்கிச் சுட்டுவிரலசைத்து வரவழைத்து ஆட்கொண்டருளிய மாண்புடையவர். அச்சித்தர்க்குத் திருநீறளித்துச் சுகக்கேட்டை நீக்கியருளியவர். சேதிமாநகரத்து வேளாளர் ஒருவர் தம் மருமகளுக்குச் சிவதீட்சை செய்தருளும்படி வேண்டினர். அவ்வாறே அநுக்கிரகம் செய்தருளினார். சிவதீட்சைபெற்றதும் அக்குமரி ஞானக்கிழவி ஆன அற்புதத்தை,

"மதுரா புரிச்சொக்க ஞானப்ர காசன் மடாலயத்தில்
சதுரான காரியம் செய்தது என்னே! இந்தத் தாரணியில்
முதிரா இளம்பிஞ்சை நற்கனி ஆக்கும் முறைமை என்ன
எதிரா மலம் அறுத்து என்னையும் ஆட்கொண்டிருந்தனனே"

என்று அவ்வம்மையார் பாடி வணங்கியதால் அறியலாகும்.

இறந்த தந்தைக்குப் பேரின்பவீடு எய்துவிக்க வேண்டி, தன் மனைவியுடன் தம்மைத் தரிசிக்கவந்த ஒருவனது சிந்தையை ஞானக்கண்ணால் நோக்கி, 'நீவிர் இருவீரும் ஞானபுரீசுவரரை வழிபட்டு வம்மின்' என்று பணித்தருளினார், நம் அருளாசிரியர். அவ்வாறே வழிபட்டு வந்தனர். வந்ததும், 'நும் எண்ணம் நிறைவுற்றது. இறந்தவுயிர் பிறப்பையும் இறந்து பேரின்பம் உற்றது' என்றருளினார். அவ்விருவரும் அதுகேட்டுப் பெருவியப்புற்று, ஆராத காதலுடன் வழிபட்டு மீளாத கருத்துடன் மீண்டனர்.

மதுரையில் சொக்கேசர் வழிபாடு முடித்து, திருமடத்தில் எழுந்தருளியிருக்கும்போதில், தொழுநோயினன் ஒருவன் வந்து வணங்கினின்றான். அவன்பால் திருக்கடைக்கண் செலுத்தி, 'நீ காளையார் தீர்த்தத்தில் முழுகிவா' என்றருளினார். அதுவே குருவருளாணை எனக்கொண்டு சென்று முழுகி எழுந்தான். நோயும் நீங்கி விளங்கினான்,

திருச்செந்திற் பெருமான் தரிசனத்திற்காகச் சிவிகையூர்ந்து சென்றபோது, போற்றிய (தடுத்த) போற்றி மார்க்குப் போற்றி (காவல்) ஆக, அருச்சகர் திருவுருவில் வெளிப்பட்ட ஆறுமுக நாயனார், சிவஞானதேசிகர் பெருமைகளைப் பிரமாணங்களுடன் விளக்கியருளினார். மேலும் வன்பு காட்டியதால் அப்போற்றி கட்குப் பேசாவரமே அப்போது எய்திய பயனாயிற்று. ஆகவே, குற்றம் உணர்ந்து, தாங்களே தீவட்டி (தீ - நெருப்பு, வட்டு - கந்தை, எண்ணெய் ஊறிய வட்டுக்களைப் பற்றி எரியுந்தீ, வட்டுடையது - வட்டி) எடுத்துச் சென்றனர். நம் அருட்குரு மூர்த்திகள் செந்திலாண்டவனை வழிபட்டு மீண்டு வந்தருளும் போது, விழுந்து வணங்கி வேண்டிக்கொண்ட போற்றிகள் பேசும்வரம் பெற்று மகிழ்ந்து, திருநீறு வாங்கிப் பூசி நின்றார்கள்.

மலைநாட்டில் துங்கன் என்னும் அரசனுக்குத் தோன்றிய தனிமகளைப் பற்றிய பிரமராக்ஷசம் எத்தனையோ மந்திரத்தாலும் தந்திரத்தாலும் மருந்தாலும் தீராது நின்றது. அவன் தம் கீர்த்தியைத் தெரிந்துவந்து வேண்டிக்கொள்ள, திருநீற்றால் தீர்த்தருளினார். அவ்வரசன் செய்துவைத்த கட்டளைகள் பல, உரிமையொடுவிட்ட நிலங்கள் பற்பல.

தலயாத்திரை முடித்து மீண்டும் தருமபுரம்சேர்ந்து, மடாலயத்தில் வீற்றிருந்த காலத்தில் ஒருநாள் திருவுலா வந்தார்கள். அப்போது, பிரமராக்ஷசம் ஒன்று வந்து திருவடிகளில் வணங்கிற்று. உடனே பழைய ராக்ஷசம் என்று உணர்ந்து, 'யாது வேண்டும் உனக்கு' என்ன, 'இவ்வுருவைத் தீர்த்தருளவேண்டும்' எனவேண்ட, அங்ஙனமே ஆக்கி அதற்குத் தமது அநுட்டானங்களுள் ஒருவேளைய அநுட்டானத்தைத் தத்தம் செய்துவிட்டார்கள். அது பின் தேவரூபம் எய்தி வான் அடைந்தது.

அதுமுதல், இங்குப் பட்டம் பெற்று விளங்கி வரும் குருமூர்த்திகள் ஒரு காலசந்தியாவந்தனத்தை மிச்சமாகச் செய்து வரும் வழக்கம் ஏற்பட்டு, இன்றும் நடைபெறுகின்றது.

இக்குருமூர்த்திகளிடம் அநுக்கிரகம் பெற்றவர்கள் சச்சிதானந்த தேசிகர், தமிழாகர முனிவர், சிதம்பரநாத முனிவர், திருக்கடவூர் பஞ்சாக்கர முனிவர், புன்கூர்ச் சிவப்பிரகாச

முனிவர், சங்கரகுமார முனிவர், சிவானந்த முனிவர், முத்துக் குமாரத் தம்பிரான், அக்ஷயலிங்க சுவாமிகள், தில்லைநாயகத் தம்பிரான், காவை அம்பலவாண முனிவர், சைவ எல்லப்ப நாவலர் முதலியோர்கள்.

இவர்கள் காசி முதலிய தலங்களில் சென்று, ஆங்காங்குத் திகழும் மூர்த்திகளைப் பாடிப் போற்றிய தோத்திரப் பதிகங்கள் பலவற்றுள் ஆறே இவ்வெளியீட்டில் உள்ளன. மற்றவை பின்னர் வெளியிடப்பெறும். இவற்றை மநநம் பண்ணி, எண்ணிய எண்ணியாங்கு எய்துவது திருவருள் வேட்கை உற்றார்க்குக் கடனாகும்.

இச் சாத்திரங்களையும் தோத்திரங்களையும் தங்கள் ஜன்ம நக்ஷத்ரத் திருவிழா மலராக வெளியிடப் பணித்தருளிய எங்கள் குருமணியாகிய 25 ஆவது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது பெருங்கருணைக்கு அடியேன் என்ன கைம்மாறு செய்யவல்லேன்? இதுபோன்ற ஞானப்பணிகளை வழங்கி, பின்னைப் பிறவிக்கு முன்னை வழி காட்டியருளும் வண்ணம் அவர்கள் திருவடிமலர்களை முப்பொறித் தூய்மையுடன் வழி படுவதொன்றே அடியேன் செய்யலாவது.

வாழிய தருமைக் கோயில் வாழிய குருநற் பாதம்
வாழிய சொக்க லிங்கம் வாழிய சைவ வேதம்
வாழிய ஞான நூல்கள் வாழிய தேவா ரங்கள்
வாழிய உயிர்க ளெல்லாம் வாழிய உலகம் எங்கும்.

தருமபுரம்,
21—11—54.

அடியார்க்கு அடியன்,
முத்து. சு. மாணிக்கவாசகன்,
தருமபுர ஆதீனப் புலவன்.

பொருளடக்கம்

சாத்திரங்கள்.

1. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் 1
2. சிவானந்த போத சாரம் ... 7
3. துகளறு போதம் ... 33
4. சிவானந்தசாரம் ... 55

தோத்திரங்கள்.

1. காசித்துண்டி விநாயகர் திருவருட்பா 69
2. காசிக்கதிர்காம வேலவர் ,, 77
3. செல்வமுத்துக்குமாரசாமி ,, 83
4. காசி விசுவநாதர் ,, 89
5. சிதம்பர நடேசர் ,, 95
6. தக்ஷிணாமூர்த்தி ,, 102

பிழை திருத்தம்

1. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	26	நின்று	நின்ற

2. சிவாநந்தபோதசாரம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
10	9	தசகாரியமாகக்	தசகாரியமாகச்
12	17	அநுட்டானகல்	அநுட்டான அகவல்
	31	தேசிகருனிய	தேசிகருளிய
16 உரை	6	அவதாரம்	அவதரம்
18 தலைப்பு	2	பூதப்பழிப்பு	பூதப்பழிப்பு-பாச அவதரம்
21 தலைப்பு	8	கேவலம்	கேவலம்·பசு - அவதரம்
22	2	கூற	கூறப்
25 தலைப்பு	20	சுத்தபராயோகம்	சுத்தபராயோகம் சுத்தபராபோகம்
27 தலைப்பு	23	பிரப்பை	பிரபை
28 தலைப்பு	26	சிவயோகமாம்	சிவயோகம்
29 தலைப்பு	29	சிவயோகம்	சிவபோகம்
31	9	கேலநிலை	கேவலநிலை
,,	18	பரையில் வியர்த்தி	பரையில்வியாத்தி
32 ,,	,,	சாத்திரத்தில்	சாரத்தில்
		பசுவவதாரம்	பசுஅவதரம்
,,			17 பரையில் வியாத்தி

3. சித்தாந்த சாரம்

பக்கம்	பாட்டு	பிழை	திருத்தம்
62	11	உறுவதுவாம்	உறுவதுமாம்
63	14	மறைத்த	மறைத்தது

துகளறுபோதத்தில் 17-ஆவது முத்திசாக்கிரம் என்று இருத்தற்குரியது. அது பழம் பதிப்பிலுள்ளவாறே 48-ஆவது பாட்டின்மிசை அமைக்கப்பட்டுள்ளது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அருளிய

திரிபதார்த்த ரூபாதி

தசகாரிய அகவல்

காப்பு

சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நங்குருநா தன்.

நூல்

பாச தசகாரியம்

பதிபசு பாசத் தொகுதச காரியம்
விதிபெற வுரைப்பன் விரும்பிக் கேண்மின்.
[1]பாச சுபாவம் [2]பாச வியாத்தி
[3]பாச வியாபகம் [4]பாசத் தின்குணம்
[5]பாச விசேடம் [6]பாச ரூபகம்
[7]பாச ரூபம் [8]பாச சொரூபம்
[9]பாச தெரிசனம் [10]பாச சுத்தியென்று

ஆகிய ஒருபது வகைவிரி அறியின்.
[1]நீடு **சுபாவம்** நிறைஅறி வின்மை
[2]நாடு **வியாத்தி** நவில் ஆணவமலம்
மாயை காமியம் மாமாயை திரோதம்
மேய ஐவகை. [3]**வியாபகம் உரைக்கில்,**
ஆணவம் ஒன்றாய் அனைத்துயி ரிடத்தும்
காணு வியாத்தியாய்க் கலந்து நிற்கும்.
மாயை ஒன்றாய் வடிவற நிற்க
ஆய தனுமுதல் ஆகியும் நிற்கும்.
கன்மம் ஒன்றாய்க் காசற நிற்கப்
பண்ணிய சஞ்சித பாவ புண்ணியம்
பொருந்திய பிராரத்த புண்ணிய பாவம்
விரும்பிய நால்வகை விளங்கியும் நிற்கும்.
ஒப்பில் மாமாயை ஒன்றாய் நிற்கத்
தப்பறு சுத்த தத்துவம் ஆகியும்
சகல சாத்திரந் தானுமாய் நிற்கும்:
இகலறு திரோதம் இருக்க வொன்றாய்
மருவும் உயிரினை மறைப்பித்து நிற்கும்.
[4]திருந்திய **குணமது** செடமா யிருக்கை.
[5]**விசேட மது**தான் மெய்ச்சட மாகிலும்
விசேட மாகிய வினைசெயப் படுதல்.
[6]இகலறு **ரூபகம்** இத்தன்மை யெல்லாம்
பகலற வொன்றாய்ப் பரந்து நிற்கும்.
[7]பாசம் உளளனப் பற்றி நிற்றல்
ஆசறு **ரூபம்** அதுதான் அடுத்துத்
தேக வடிவாய்த் திகைப்புற நிற்கை
[8]வாகை **சொரூபம்** மன்னுயிர் தனக்கு
வடிவில் காளிதம் மன்னுதல் போலச்
சடமது ஆகிலும் தான்மறைப் பிக்கும்.
உடலில் கொண்ட வுருவிடம் போல

மடமை நனியாய் மயக்கு விக்கும்.
தவிராத் தண்டந் தானது போல
உயராப் பொசிப்பாய் ஊட்டுடு வருத்தும்.
தேரில் பாகன் செலுத்துதல் போலப்
பேரா நின்று பிரேரிப் பிக்கும்.
இருளுக்கு இருள்போல் எங்கும் ஒக்கப்
பிரிவற நிற்கும் பேர்அந்த காரம்
ஆகியும் நிற்கும். [9] ஆசறு **தெரிசனம்**
பாகற நின்று படும்உயிர் பொய்யை
மிச்சை யென்று வினவாது. அன்றி
நிச்சய மாக நீள்வடிவு அறியாப்
பிரமம் தானே. பிறிதில்லை யென்றும்
அருளைச் சிவனை அறியா தாகி
இதமும் அகிதமும் இனிதுற அயின்று
சிதம்அற நிற்குந் தெரிசனம் இதுவே.
[10] **சுத்தி**யாவது தொல்லை யிறைமையும்
நித்த பாசமும் நேர்பணி யில்லை
யென்னும் அதுவும் இவைஉயிர் அல்ல
மன்னுயிர் வேறுஎன மதிப்பது கடனே.

ஆன்ம தசகாரியம்

[1] ஆத்ம சுபாவம் [2] ஆத்ம வியாத்தி
[3] ஆத்ம வியாபகம் [4] ஆத்மா வின்குணம்
[5] ஆத்ம விசேடம் [6] ஆத்ம ரூபகம்
[7] ஆத்ம ரூபம் [8] ஆத்ம சொரூபம்
[9] ஆத்ம தெரிசனம் [10] ஆத்தும சுத்தி
[11] ஆத்தும லாபம் ஆயவை **பன்னொன்று.**
[1] **ஆத்தும சுபாவம்** அனவரத முமே

சாற்று தத்துவம் தானுய்க் கூடுதல்.
[2]**வியாத்தி** தத்துவ அவாவுள் ளளவும்
வியாத்தம் ஆகி விடயத் திருத்தல்.
[3]**வியாபகம்** தத்துவம் மிக்குள் ளளவும்
வியாபகம் தானுய் மேவிடும் உயிரே.
[4]**குணமும்** மடமாம். [5]கோதில் **விசேடம்**
குணம்அறி யாமை குறுகி யிருக்க
இருள்மல பக்குவம் எய்திய போதில்
அருள்இறை உணர்த்த அறிவாய் விடுதல்.
[6]உற்ற **ரூபகம்** உடம்பே யொழிய
மற்றுஉயிர் உண்டுஎன வாய்மை பொருந்துதல்.
[7]**உரூபம்** இச்சை உயர்ஞானம் தொழில்
சொரூபம் ஆகித் துனிஉற் றிருத்தல்.
இச்சை பதார்த்தம் இராகம் ஆதல்.
நிச்சய **ஞானம்** நிகழ்பண் டங்களில்
பகுத்தறி வாகை. பகருங் **கிரியை**
மிகுத்த பதார்த்தம் மிகஅப கரிக்கை.
[8]**சொரூபம்** மெய்போல் தோன்று தேகாதி
உருவம் இந்திர வுயர்தனுப் போலும்
பொய்என வுணர்த்துப் பொருந்துதல் தானே.
[9]மெய்யுயிர்த் **தெரிசனம்** விரிவறி வாகை.
[10]**சுத்தி** யுரைக்கில் தொழில் அறிவு இச்சை
மத்த வுணர்வும் மட்டற விட்டே
உணர்வும் அசைவும் ஒன்றுஅற நிற்றல்.
[11]புணர்வு **இலாபம்** புகலுங் காலே
நிரஞ்சனம் ஆகி நின்று அவதரத்தில்
உரம் அற விளைந்த வுயர் ஆநந்த
போகம் புணர்ந்து பொருந்துதல் தான்என
ஆகமம் எல்லாம் அறைந்தன மாதோ.

5

சிவ தச காரியம்

[1]சிவ சுபாவம் [2]சிவ வியாத்தி
[3]சிவ வியாபகம் [4]சிவத்தின் றன்குணம்
[5]சிவ விசேடம் [6]சிவ வுருபகம்
[7]சிவ வுருபம் [8]சிவ சொரூபம்
[9]சிவ தெரிசனம் [10]சிவ வியோகம்
[11]சிவனது போகம் தெரித்தபன் **னொன்றில்**
[1]**சுபாவம்** தத்துவத் துரிசற நிற்கை.
[2]விபாவ **வியாத்தி** விரிபுவ னத்திலும்
சகல வுயிரிலும் தடையற நிற்கை.
[3]இகல்அறு **வியாபகம்** எங்கும் நிறைந்தே
விமல நிராமயம் மேவிய நிலையில்
தமதில் இரண்டறத் தங்கி அடங்கிய
உயிர் ஈடேற்றும் உபாய காரணமாய்ப்
பயில்திரு மேனி படிமிசைக் கோடல்.
[4]**குணம்** எந்நாளும் குன்று அறிவாம்.
[5]புணரும் **விசேடம்** பொருந்த வுரைக்கில்
அறிவுக்கு அறிவும் அன்றி அசேதனம்
பிறிவறத்தொழிற்செயல்பெற்றிஉண்டாக்குகை.
[6]தீதறு **ரூபகம்** திகழ்அறிவுக்குக்
கோதறும் உயிராய்க் கூடா நிற்பன்
பரமம் ஆகிய பரன்எனத் தோன்றுதல்.
[7]விரியும் **உருபம்** விளங்கப் புகலில்
இச்சா ஞானம் இருந்தொழில் ஆன
நிச்சய ரூபமாய் நிலைபெற நிற்கை.
இச்சை உயிர்களை இரட்சிப் பதுவாய்
மிச்சையில் ஆசை விரிவது தானே.
ஞானம் அகில ஞாலம் உயிர்கள்
யான்அங் கைக்கனி மதித்தன மான

வொருகா லத்தில் உணர்ந்தே யிருத்தல்.
கிரியா சத்தி கிளர்உயிர் களையும்
தேகம் இந்தியங்கள் திகழ்வுறக் கூட்டிப்
போக கன்மங்களைப் பொசிப்பித்து நிற்கும்.
[8]**சொரூபம்** ஒன்றொடும் தோயா திருத்தல்.
[9]இகலறு **தெரிசனம்** எழில்நிரு விகற்பம்
எங்கும் பூரண எழில்உற நின்ற
சங்கம்இல் வடிவைத் தான்அறக் காண்கை.
[10]**யோகம்** செப்பில் உயர் ஆநந்த
யோகம் ஆக ஒழிவுஅறத் தோன்றல்.
[11]**போகம் முன்னைப் புகன்ற இலாபம்**
ஆகஆகமம் அறைந்தது இதுஎனத்
தேசிக சிகாமணி தென்கம **லாபுரி**
நாசமில் சீர்த்தி **ஞானப் பிரகாசன்**
அருளிய அட்ட வணையின் அடைவே
பெரிதும் பயன்உறப் பேசினன் அறியே.

திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்
முற்றும்.

ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
திருவடி வாழ்க!

சிவாநந்த போத சாரம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

சிவாநந்தமுனிவர்

அருளிய

சிவாநந்த போத சாரம்

முன்னுரை

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே யெழுநீ
அன்னம் ஆடிடும் தண்கயத் கருமையி னங்கண்
சொன்ன ஆகம நெறியெலாம் தெளிவுறத் துணிந்து
பன்னு ஞானசம் பந்தரைப் பரவுதற் பொருட்டே.

திருவம் பலகலை ஞானம் திகழ்தரச் செந்தமிழ்க்கந்
திருவம் பலசொலி யுள்ளித் தருமைத் திருந்துமுனி
திருவம் பலனோர் சிவா நந்த போதச் சிறப்புறநந்
திருவம் பலகுரு தேசிகர் தாட்டுணை சிந்திப்பமே.

சிவாநந்த போதசாரம் என்னும் இந்நூல் அநாதிமுத்த முதல்வன் அநாதி பெத்த ஆன்மாக்களின் பொருட்டு அநாதியே திருவாய் மலர்ந்தருளிய வேதத்தை மூலமாகக்கொண்ட சிவாகம பூதசார ஞானசாஸ்திரத்துள் கூறப்பட்ட தசகாரியம் என்னும் பத்தவதரத்தையும் முப்பதவதரத்துள் வைத்துச் சிவபோகத்தைத் தெள்ளிதின் உணர்த்துவது. திரிபதார்த்தத்து ரூபம் சொரூபம் சுபாவம் விசேஷம் வியாப்தி வியாபகம் குணம் வண்ணம் தரிசனம் சுத்தியாகிய இப்பத்தினையும் கூறப்புகுவார், பதியிலக்கணத்தில் சிவன் பரை இச்சை ஞானம் கிரியைகட்கும், பசு விலக்கணத்தில் ஆன்மாவிற்கும், பாச விலக்கணத்தில் ஆணவம் சுத்தமாயை அசுத்தமாயை கன்மம் திரோதானங்

கட்கும், பஞ்சபூதப் பழிப்பில் பூதாதிகட்கும், பொறியற உணர்தலில் பொறி சர்ந்தாதி கன்மேந்திரியங்கட்கும் அந்தக்கரண சுத்தியில் கரணங்கட்கும், கலாதிஞான நிராகரணத்தில் கலாதிகட்கும், சுத்ததத்துவ தூஷணத்தில் சுத்த தத்துவங்கட்கும், தத்துவ சுத்தியில் புறக்கருவிகட்கும் அந்த ரூபாதி தசகாரியங்களை விரித்துரைப்பர். இந்நாலுள் முப்பது அவதரமும் தசகாரியத்தில் அடங்கும் நிலையும், ஐந்துமலங்கள் நீங்கி ஆன்மா சிவத்துள் இரண்டற அடங்கும் நெறியும், முப்பதவதரத்தைத் தசகாரியமாகக் சொன்னதற்குத் தொகையும், பாச வவதரம் பசு வவதரம் பதி யவதரங்களின் தொகையும், கேவல சகலங் கழுன்று சுத்தாவத்தையில் இவைநிற்கும் தொகையும், முப்பதவதரந்தைத் தசகாரியத்தில் ஏழாய் அடக்கிச் சொன்ன வகையும், மலரடிக்கீழ் வைத்துத் தானாக்கி யருளும் சிவரூபமும், பாத நிழற்கீழ் நிற்பித்து ஒப்பச் செய்தருளும் சிவதரிசனமும், ஏகனாகி நின்று அடக்கி யருளும் சிவயோகமும், மலரடிக்கீழிருத்தி ஆநந்த சொரூபியாக்கும் சிவபோகமும், முதல்வன் உயிரைத் தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபங்களால் நிர்விகாரி யாக்கும் நின்மல சாக்கிரமும், ஆன்ம ரூபம் சிவதரிசனங்களால் தன்வண்ணஞ் செய்யும் அச்சொப்பனமும், அந்தத் தசகாரியத்துள் ஒருகாரியமுமின்றித் திருவருள் செய்யும் பஞ்ச கிருத்தியத்தை யான் செய்வேன் என்று கருதல் மாத்திரம் நிகழ ஒப்பச் செய்யும் அச்சுழுத்தியும், ஆன்மசுத்தி சிவதரிசனம் சிவயோகங்களால் அடங்கி நிற்பிக்கும் அத்துரியமும், சிவபோகத்தால் சிவாநந்தம் பெறுவிக்கும் அத்துரியாதீதமும், தசகாரியத்தை ஏழினுளடக்கிய முத்தி எழுவகையும் விளக்கப்படும்.

ஒருசார் ஆசிரியர் பாசவகையில் பூதப் பழிப்பு முதல் எட்டினையும், ஆன்மநெறியில் அதன்பின் ஐந்தினையும், பரைவகையில் அதன்பின் ஆறினையும், அதீதவகையில் அதன்பின் பதினொன்றினையும் தொகுத்துக் கூறுவதையும், பூதப்பழிப்பு முதல் பதின்மூன்றினைப் பதிமுதுநிலை கன்மநிலை ஆன்மஉண்மை ஆன்மவியல் எனச் சிவஞானபோதத்து முதல் நான்கு சூத்திரப் பொருளாகவும், அப்பால் எட்டினை ஆன்மவியலெனை ஐந்தாஞ் சூத்திரப் பொருளாகவும், அப்பால் இரண்டினை ஆன்மநிலை அருளென ஆறும் ஏழாஞ் சூத்திரப் பொருளாகவும்,

அப்பால் ஆறினை ஆன்மலாபமேலிடென எட்டாஞ்சூத்திரப் பொருளாகவும், அப்பால், உலகப்பழிப்பை இரண்டாக் காணுமையென ஒன்பதாஞ் சூத்திரப் பொருளாகவும், உடல் பற்றுவிடலெனப் பதினொராஞ் சூத்திரப் பொருளாகவும், குருலிங்க சங்கம வழிபாடெனப் பன்னிரண்டாஞ் சூத்திரப் பொருளாகவும் கூறுவதற்கும், ஒருசார் உரையாளர்பன்னிரண்டு சூத்திரங்கட்குத் தசகாரியத்தைப் பிறிதோராற்றுற் கூறுவ தற்கும் சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்தைப் பதியுண்மை முதலாகச் சிவஞானமுனிவர் விரித்துக் கூறுவதற்கும், தக்ஷிணாமூர்த்தி தேசிகர்

முதற் கருத்துச் சங்கரனே முதலென்ன மொழிந்திடல்........
........ஈராறில் மூன்றுருவுமேத்தியன்பு செய்திடலே''

என்று வகுத்துக் கூறுவதற்கும், மற்றொருசார் ஆசிரியர் பெத்த சகலம் கருவிகள் நீங்காதிருப்பது. முத்தி சகலம் கருவிகள் தோன்றி நிற்பது. தத்துவாதீதம் கருவிகள் நீங்க நிற்பது என்று கூறுவதற்கும், பெத்த கேவலம் அதனின் மாறுபட்ட முத்தி கேவலம், பெத்த சுத்தம் அதனின் மாறுபட்ட மேலாலவத்தை, கேவலத்தின் மலமேயாகச் சகலத்தின் கருவியோடு கூடி நிற்ப அவை கழிந்து சுத்தத்தில் நிர்மலமாய் விளங்குவது முறைமை யாம் என்று கூறுவதற்கும், துகளறுபோதம், தத்துவப்பிரகாசம் முத்திநிலை முப்பதவதாம் முதலிய நூல்களின் ஆசிரியர் இவற்றை வகுத்தும் விரித்தும் கூறுவதற்கும், இந்நூல் ஆசிரியர் இவற்றைத் தொகுத்துக் கூறுவதற்கும் உள்ள ஒற்றுமை நயங் களை அனுபவ வாயிலாக அறிதல் வேண்டும்; அவ்வாறு அறிந்த வர்க்கே சிவானுபவம் சுவானுபூதிகமாம்,

இந்நூல் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்துச் சாஸ்திரங்களுள் ஒன்று என்பதும், இதனை யருளியவர் சிவாநந்த முனிவரென்பதும், இம் முனிவர் அவ்வாதீனத்து எட்டாவது பட்டத்து இலங்கிய திருச்சிற்றம்பல தேசிகரை ஆசிரயித்தவ ரென்பதும் இதன் ஏட்டுப் பிரதிகளை நோக்குவார்க்குப் புல னுகும். இந்தச் சிவாநந்த முனிவர் பத்தாவது பட்டத்து எழுந்தருளிய சிவஞான தேசிகர் காலத்தும் ஜீவன் முத்தராய் இருந்தாரென்பது இவரியற்றிய சிவாநந்தமாலை சம்பிரதாய தீபத்தால் விளங்கும். விளங்கவே இம் முனிபுங்கவர் அவ்வாதீன கர்த்தர் மூவரது அனுபவநிலையையும் அவர்கள் தமக்குணர்த்திய

அருள் நிலையையும் பெற்றோராகி, மெய்கண்ட தேவர் அருளிச்செய்த சிவஞானபோதத்தையும், அவர் மாணவர் அருணந்தி சிவாசாரியர் அருளிச்செய்த சிவஞானசித்தியாரையும், அவர் மாணவரின் மாணவர் உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்த சிவப்பிரகாசத்தையும், அவர் ஞானபரம்பரையில் வந்த சீகாழி மச்சுச்செட்டி அருணமச்சிவாயர் அருளிய உபதேச வார்த்தைகளையும், கங்கை மெய்கண்டார் அவர் மாணுக்கர் காழிப் பழுதைக்கட்டிச் சிற்றம்பல நாடிகள் அருளிச்செய்த துகளறு போதம், சிவப்பிரகாசக் கருத்துரைச் சூத்திரம் முதலியவற்றையும், அவர் சீடராகிய காழித் தத்துவப் பிரகாசரது தத்துவப் பிரகாசத்தையும், சிற்றம்பல நாடிகளது பிரதம மாணுக்கராகிய காழிப் பழுதைகட்டி ஞானப்பிரகாசரது மாணுக்கர் திருவாரூர்ச் சிதம்பரநாத ஞானப்பிரகாசர் அருளிச்செய்த (ஞானபாதத்திற்குச்) சிவாநந்த போதம், ஞானப்பள்ளு அத்துவாக் கட்டளை; (யோகபாதத்திற்குப்) பிராசாத மாலை (கிரியாபாதத்திற்குச்) சிவபூசையகவல்; (சரியாபாதத்திற்கு) அநுட்டானகவல், புட்பவிதி, பூமாலை, புராணசாரமாகத் திருவானைக்காப் புராணசாரமும் திருமழபாடிப் புராணசாரமும், திருவண்ணாமலை ஒருதுறைக்கோவை யென்னும் பிரபந்தமும், ஆயிரப்பிரபந்தமும், வடமொழியிலே தியாகராஜர் திருவிளையாடற்சம்பவமும் முதலியவற்றையும், அவரது முதல் மாணுக்கர் தருமபுர ஆதீனத்தை நிறுவிய குருஞானசம்பந்த தேசிக மூர்த்திகள் (1400 கி. பி.) இயற்றியருளிய சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, பரமாநந்த விளக்கம், முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதிதெசகாரிய அகவல், சொக்கநாதக் கலித்துறை முதலிய நூல்களையும், தருமபுர ஆதீனத்து ஆறுவது பட்டத்திலிருந்த திருஞானசம்பந்த தேசிகரது மாணுக்கராகிய *வெள்ளியம்பலவாணத் தம்பிரான் இயற்றிய முத்தி நிச்சய வுரைகள், ஞானாவரண விளக்கம், மிருகேந்திரம் முதலிய நூல்களையும், ஒன்பதாவது பட்டத்துத் திருநாவுக்கரசு தேசிகருளிய சித்தாந்த நிச்சயத்தையும், மற்றும் அவ்வாதீனத்திற்குரிய ஞானப்பிரகாசதெசகாரியம், பதிபசுபாசப் பனுவல், ஞானாவரண விளக்கக் குறள், பரமத சங்கற்ப பரமோபதேச நிராகரணம், பரமத திமிரபானு, சிவாநுபோக சாரம் முதலிய

---

*இவர் 4-வது முதல் 6-வது குருமூர்த்திகள் காலம் வரை தம்பிரானக இருந்தவர்.

நூல்களையும், பிற சம்பிரதாய நூல்களையும் கேட்டுணர்ந்து இந்நூலை இயற்றினர். இவரோடு கற்றோராகிய சுவர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பல முனிவர் அறிவானந்த சமுத்திரம், திரிபதார்த்த தீபிகை என்னும் நூல்களையும், வேதாரணியம் தாயுமானவர் திருப்பாடற்றிரட்டையும் இந்நூலாசிரியர் காலத்தே இயற்றியருளினார்கள்.

திருநெல்வேலி ம-ா-ா ஸ்ரீ S. அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M. A. L. T., (Reader in Tamil, Institute of Oriental Research, Madras University) இச் சிவானந்தபோத சாரத்தின் ஏட்டுப் பிரதியொன்று பல அரிய ஏடுகளின் இடையே தமது திருமாளிகையிலிருந்ததனை உரையுடன் எழுதி மிக்க அன்போடு எனக்கு அனுப்பினார்கள். அவர்கட்குச் சம்பிரதாய நூல்களிலிருக்கும் பேரவாவும் ஆர்வமும் யாவராலும் பெரிதும் பாராட்டத்தக்கன. இப்பிரதியை என் பிரதியோடு ஒப்பு நோக்க எனக்கு அவர்கள் திருவுளம்பற்றியதற்காக மிக்க நன்றி செலுத்துகிறேன்.

இந்தப் பிரதியைத் தருமபுர வாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கு நான் சமர்ப்பித்தபோது, அப்பெருந்தகையார் தமது ஆதீனப் பிரதிகளோடு சீர்தூக்கிப் பரிசோதித்து, இதனைப் பிரசுரிக்கும் வண்ணம் எனக்கு அநுமதி தந்தருளினார்கள். சைவ நூல்களைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் என்னும் நால்வகைப் பயிற்சியாலும் சைவசமய வுபதேச விருத்தியும் சைவதத்துவ நூல்களின் விருத்தியும் இடையறாது செய்து வருவதே சைவாதீனத்தின் நோக்கமென்று உணர்ந்த இக்குருபரர், அடியேன் மேன்மேலும் இத்தகைத் தொண்டைச் செய்து வருவதற்காக எனக்கு மன வெழுச்சியையும் அருள் நோக்கத்தையும் மீதுறச் செய்யுமாறு பரமகருணாநிதியைத் தாழ்மையோடும் பிரார்த்திக்கின்றேன்.

தெருளாளர்க் கன்றித் திகழாத போகம்
மருளாளன் காட்சி மருவும்—அருளாத
வன்றோர்க் கொடிவருடு மாடத் தருமபுரத்
தின்றோர்ந் தறிந்தே னியான்.

ஸ்ரீகாழி
2—10—30.

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

ஸ்ரீ சிவாநந்த முனிவர்

அருளிய

சிவாநந்த போத சாரம்

நூல்

முப்பது வகைப்படும் முத்திநல் நெறியினைச்
செப்புவன் அமைத்துத் தேசகா ரியத்தில்,
பொறையில்ஐம் பூதமும் பொய்யென அருளால்
முறையுற நீங்கும் முத்திச் சகலமும்,
பஞ்ச பூதப் பழிப்புறும் உடலும்,
அஞ்சு புலன்றனை அறிந்திடும் பொறிகளும்,
செறிந்திடும் புலனைத் தெரிந்திடில் தனித்தனி
அறிந்திட அறியா அந்தக் கரணமும்
அக்கர ணங்கள் அகல அகன்றிடும்
தக்க கலாதி தத்துவக் குழுவும்,
அத்தகு கலாதிகள் அகல அகன்றிடும்
சுத்த தத்துவமும் தொடர்ந்தெழும் உயிர்ப்பும்
வடிவுறக் கண்டு மலமெனத் தெளிந்து
நெடிதுற ஆங்கவை நீங்கல்இவ் வேழும்
தத்துவ ரூபம் தத்துவ தரிசனம்
தத்துவ சுத்தி தன்னு ளடங்கும்.
மாயையும் கன்மமும் மாமா யையும்என
ஆயஇம் மூன்றும் அகன்றிடும் இவணே.
தத்துவா தீதந் தன்னில் மைக்குழம்பினை
ஒத்திடும் மலஇருள் உறுவது கேவலம்.

அற்படு கேவலத்து அந்தகா ரத்துஉயிர்
நிற்பது கேவல நிலையது ஆகும்.
இருள்மலம் நீங்குதற்கு எண்ணுதல் திரோதம்
அருள்வடி வான அவதரம் ஆகும்.
அங்கு உயிர்காண்பதற்கு ஆதரவு உறும்இடம்
சங்கரன் இச்சா சத்தியின் தரிசனம்.
மருவுஉயிர் வெளிப்பட வல்இருள் நீக்கம்
தருவது கிரியா சத்திய தாகும்.
அந்தஆ ருயிர்தனக்கு அறிவின் வியாத்தி
தந்தது ஞான சத்திய தாகும்.
முழுதும்நின் றுணர்த்தும் மூவகைச் சத்தியும்
நழுவிநின் றிடுவது ஞானா தீதம்.
புணர்ந்தவல் இருளினைப் புரைபுரை தொறும்சென்று
உணர்ந்திடும் அறிவுஆன்ம ரூபம தாகும்
கேவல வல்இருள் கீழ்ப்படத் தான்முழுது
ஆவதே ஆன்ம தெரிசனம் ஆகும்.
நயந்திடும் இச்சா ஞானக் கிரியையில்
பயின்றிடா நிலையது பரைதெரி சனமே.
திரப்படு பரையினில் சேதன வியாபகப்
பரப்பினைக் கண்டது பரையின் வியாத்தி.
விரவிய பரையின் வியாபகத் துடன்உயிர்
பரவிநின் றிடுவது பரையினில் யோகம்.
ஆங்குறு பரையின் அநுபவ நிலைமையைப்
பாங்குறப் பெறுவது பரையினில் போகம்.
முற்பரை யோகம் முழுப்பரை சாக்கிரம்.
தற்பரை போகம் சாக்கிரா தீதம்.
ஓர்ந்திட நின்ற வுணர்வது முழுதும்
சோர்ந்திடல் ஆன்ம சுத்திய தாகும்
இருள்கெடக் கதிரொளி யெழுந்தது போல்உளத்து
அருள்எழ ஆணவம் அகன்றதும் இவணே.
அறிவகல் அதீதத்து அநுபவம் சிறிதுஆங்கு
உறுவதுவே சுக ரூபம தாகும்.
ஆன்றஅச் சுகத்துக்கு ஆதாரம் ஆம் குணி
தோன்ற நிற்பதுவே சுகாதீத மாகும்.

அகண்டமும் சுகவடிவு ஆம் சிவமயம் எனச்
சகந்தனைக் காண்பது தான் சிவரூபம்.
எங்கும் கலந்த இறைவன்றன் தொழிலையும்
அங்கங்கு அறிவது அருஞ்சிவ தரிசனம்.
மருள் அதி கார மலம்அகன் றிடவே
அருளது மேலிடும் அவதரம் இவணே.
அற்புத அருளால் அத்துவிதம் பெறச்
சிற்பரத்து இயைவது சிவயோகம் ஆகும்.
நற்பர சிவத்துஉற நண்ணுபே ரின்பம்
சிற்பரா நந்த தெரிசனம் ஆகும்.
பெறுபரா நந்தப் பெருக்கினில் கலந்தாங்கு
உறுவது ஆநந்த யோகம தாகும்.
அருந்தும் ஆநந்த அவச மேலிடு
பொருந்திய நிலைசிவ போகம தாகும்.
மெய்யுறு சமாதியை விடுத்தும்அவ் வருளினுள்
வையகம் காண்பது மறித்துக் காட்சியே.

இதன் பொருள் :

முப்பது அவசரத்தையும் தசகாரியத்தில் அடக்குதல்

முப்பது வகைப்படு முத்தி நல்நெறியினைச்
செப்புவன் அமைத்துத் தெசகாரியத்தில்—எ-து 1

உயிர் பஞ்ச மலங்களும் பஞ்ச சத்திகளும் கழன்று சிவாநந்த அநுபவத்தைப்பெற்று அதனுள்ளேஅழுந்தி அவ்வின்பமேயாய்இருக்கும் மோட்சவழியாகிய 1. பூதப்பழிப்பு, 2. பொறியறவுணர்தல், 3. அந்தக்கரணசுத்தி, 4. கலாதி ஞான நிராகரணம், 5. சுத்த தத்துவ தாடணம், 6. தத்துவாதீதம், 7. சகல தெரிசனம் ஆகப் பாச அவதாரம் ஏழும், 8. கேவலம், 9. கேவல தெரிசனம், 10. கேவலாதீதம், 11. தன்னுண்மை, 12. சைதன்னிய தெரிசனம், 13. ஞானதெரிசனம், 14. பரைதெரிசனம்,

15. பரையில் வியாத்தம், 16. பராயோகம், 17. பராபோகம், 18. சுத்த பராயோகம், 19. முத்தி சாக்கிரம், 20. சாக்கிராதீதம், 21. பரையில் அதீதம், ஆகப் பசு அவதரம் பதினொன்றும், 22. சுத்தாவத்தை, 23. சுகரூபம், 24 சுகாதீதம், 25. சிவப்பேறு, 26. பரமாநந்த தெரிசனம், 27. பரமாநந்த யோகம், 28 பரமாநந்த போகம், 29. பரமாநந்த மேலிடு, 30. பரமாநந்தஅவசம் ஆகப் பதி அவதரம் ஒன்பதும் கூடிய முப்பது அவசரத்தையும் 1. முத்திச்சகலம், 2. பூதப்பழிப்பு, 3. பொறியறவுணர்தல், 4. அந்தக்கரணசுத்தி, 5. கலாதி ஞான நிராகரணம், 6. சுத்த தத்துவ தாடணம், 7. பிராணவாயு நீக்கம், 8. கேவலம் 9. கேவல நிலை, 10 திரோதான சத்தியின் தெரிசனம், 11. இச்சாசத்தியின் தெரிசனம், 12. கிரியாசத்தியின் தெரிசனம், 13. ஞான சத்தியின் தெரிசனம், 14. ஞானதீதம், 15. ஆன்மரூபம், 16. ஆன்ம தெரிசனம், 17. பரைதெரிசனம், 18. பரையில் வியாத்தி, 19. பரையோகம், 20. பரைபோகம், 21. ஆன்மசுத்தி, 22. சுகரூபம், 23. சுகாதீதம், 24. சிவரூபம், 25. சிவதெரிசனம், 26. சிவயோகம், 27. சிற்பராநந்த தெரிசனம், 28. சிற்பராநந்தயோகம், 29. சிவபோகம், 30. உலகப் பழிப்பு எனத் தசகாரியத்தி லடக்கிச் சொல்லுவன் என்க.

சிவபோகத்தின் வரும் உலகப் பழிப்பும் சிவபோகத்துள் அடங்குமோ என்னில், சிவபோகம் பொசித்த சாத்தியாளர் பரமே பார்த்திருப்பரன்றிப் பதார்த்தங்களைப் பாரார். ஆகையால் உலகப் பழிப்பும் சிவபோகத்துள்ளே அடங்கும் என்க.

இதற்குப் பிரமாணம்:—

நனவாதி அந்தத்தில் நாடுசுகந் தன்னைக்
கனவாதி அந்தத்தில் கண்டு—நனவாதி
தோற்றிடும்போ தந்தச் சுகரூபம் கண்டவர்கள்*
மாற்றிடுவர் என்றும் மலம். (சிவபோகசாரம். 21.)

1. முத்திச்சகலம்

பொறையில் ஐம்பூதமும் பொய்என அருளால்
முறையுற நீங்கும் முத்திச் சகலமும்—எ-து 2

---

* கண்டவரே என்றும் பாடம்.

உயிரைத் தன் அகந்துப் பொறுத்தல் செய்யாத சிறுமை யை உடைய ஆகாரம் முதலிய ஐம்பூதங்களையும் பொய் என்று குருவருளால் அவதரங்களை முறையாகப் பொருந்தும்படி நீங்கும் முத்திச் சகலமும் என்க.

நூல்களிலே, காரண அவத்தைகள் மூன்றையும், கேவலம் முதலாக வழங்குவது தானும், காரிய அவத்தைகள் பதினைந்தை யும் பெத்தம் முத்தியென இரண்டு விதமாக முப்பதாக்கி அவற்றினைச் சகல முதலாக வழங்குவது தானும் எதனுல் என்னில், காரண அவத்தைகள் கேவலத்தினின்றும் சகலத்தை யும் சுத்தத்தையும் முறையே பொருந்துதலானும் பெத்த முத்தி களாம் காரிய அவத்தைகள் சகலத்தினின்றும் கேவலத்தையும் சுத்தத்தையும் முறையே பொருந்துதலானும் என்க.

இப்படி அவத்தைகளை முப்பத்துமூன்றாகக் கொண்டு வழங்குவதற்குப் பிரமாணம் துகளறுபோதத்திலும் அதற்கு வழிநூல் ஆம் தத்துவப்பிரகாசத்திலும் வருவது கண்டுகொள்க.

இவ் அவதரத்தைத் துகளறுபோதத்தில் தத்துவாதீதத்தின் பின் கூறியது என்னை எனின், தத்துவங்களைத் தெரிசித்து அதீதப்பட்டு நின்றுழி, இவ்வாறு அவதரப்பட்டு நிற்கும் முறைமை சகலம் அன்றிக் கூடாது எனச் சகலம் தெரிசனப் படுதலின் தத்துவாதீதத்தின் பின் சகலதெரிசனம் கூறப்பட்டது என்க.

முத்திச் சகலம் எனினும் சகல தெரிசனம் எனினும் ஒக்கும்.

2. பூதப்பழிப்பு

பஞ்சப்பூதப் பழிப்புறும் உடலும்—எ-து 3

புறப் பிரபஞ்ச பூதங்கள் அங்கியம் ஆகிய சடம் என்று பழிக்கப் பட்டால் போலப் பழிக்கப்படும் உடலகத்து ஐம் பூதங்களும் என்க.

---

* சடமாகிய பூதங்கள் என்றவாறு.

புறப் பிரபஞ்ச பூதம் காரணம். உடலிற் பூதம் காரியம்.

காரணம் ரு, காரியம் உரு.

3. பொறியறி வுணர்தல்

அஞ்சு புலன்றனை அறிந்திடும் பொறிகளும்—எ - து 4

சத்தாதியாகிய ஐம்புலனையும் தனித்தனி அறிந்திடும் சோத்திராதி ஆகிய ஐம்பொறிகளும் என்க.

இவற்றின் வழிய ஆகிய கன்மேந்திரியங்கள் ஐந்தையும் இவற்றுள் அடக்கிக் கொள்க.

4. அந்தக்கரணசுத்தி

செறிந்திடும் புலனைத் தெரிந்திடில் தனித்தனி
அறிந்திட அறியா அந்தக் கரணமும்—எ - து 5

பொறிகள் வழியாகப் பலவிதமாய்ச் செறிந்திடத்தகும் புலனைப்பற்றி நிச்சயித்து எழுந்து அழுந்தும் பொருட்டு, அகார உகார மகார விந்து நாதங்களை யுடையன அன்றித் தனித்தனி தாமே அறிந்திட மாட்டாத மனமாதியாகிய அந்தக் கரணங்களும் என்க.

5. கலாதி ஞான நிராகரணம்

அக் கரணங்கள் அகல அகன்றிடும்
தக்க கலாதி தத்துவக் குழுவும்—எ - து 6

கலாதி யிச்சா ஞானக் கிரியைகளினாலே ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியைகள் நிலைபெற்று விளங்குதற்கு இடம் ஆகிய அவ்அந்தக் கரணங்கள் நீங்கவே அவற்றோடு ஒருங்கு நீங்குவன ஆகிய தகுதி பொருந்திய கலை ஆதியாயுள்ள தத்துவக் கூட்டமும் என்க.

"புலன் நுகர் காலைப் பொருந்துதத்துவங்களில் கலாதிகள் நீங்காக் கஞ்சுகம்" ஆதலின் தக்ககலாதி எனச் சாற்றினர் என்க.

6. சுத்த தத்துவ தூடணம்

அத்தகு கலாதிகள் அகல அகன்றிடும்
சுத்த தத்துவமும்—எ - து 7

அந்தத் தகுதி பொருந்திய கலாதிகள் நீங்கவே பிரேரகம் ஒழிந்து அவற்றோடு ஒருங்கு நீங்குவன ஆகிய சுத்தவித்தை முதலிய சுத்த தத்துவங்களும் என்க.

7. பிராணவாயு நீக்கம் (தத்துவாதீதம்)

தொடர்ந்தெழும் உயிர்ப்பும்—எ - து 8

அவ் ஐந்து வகையாகத் தத்துவம் முப்பத்தாறும் நீங்கி நிற்புழி விரைந்து எழாநின்ற பிராணவாயுவும் என்க.

பிருதிவிமுதல் நாதபரியந்தம் நாம் அல்லவென்று நீங்கி நிற்புழியும் பிராணவாயுவே நாம் என்று நிற்றலில் பிராணவாயு நீக்கம் என ஓர் அவதரம் கூறப்பட்டது. எனவே தத்துவாதீதம் எனினும் பிராணவாயு நீக்கம் எனினும் அவதரம் ஒன்றே. ஆதலால் துகளறுபோதத்தில் தத்துவாதீதம் என்றும் இந்நூலில் பிராணவாயு நீக்கம் என்றும் கூறப்பட்டது என்பது பெறுதும்.

அவ்வேழும் பாச அவதரம் மூன்றில் அடங்கும் எனல்

வடிவுறக் கண்டு மலமெனத் தெளிந்து
நெடிதுற ஆங்கவை நீங்கல் இவ் வேழும்
தத்துவ ரூபம் தத்துவ தெரிசனம்
தத்துவ சுத்தி தன்னுள் அடங்கும்—எ - து 9

இங்ஙன முத்திச் சகலமுதல் கூறிய இவையிற்றின் தோற்ற வொடுக்கங்களையும் தொழில்களையும் ஐயந்திரிவு விகற்பமின்றிக்

கண்டு இவையும் மாயேய மலம் ஆகிய சேடம் எனத் தெளிந்து, தெளிந்தவிடத்து அவற்றை அந்நியம் என்று மிகுதியும் நீங்கலாகிய இவ் வேழும் தசகாரியத்தில் தத்துவரூபம் தத்துவ தெரிசனம் தத்துவசுத்தி என்று சொல்லப்பட்ட **பாசஅவதாரம்** மூன்றனுள் அடங்கும் என்க.

நெடிதுற நீங்கலாவது முற்றத் துறத்தல்.

அந்த அவதாரத்தில் நீங்கும் மலம்

மாயையும் கன்மமும் மாமாயையும் என
ஆயஇம் மூன்றும் அகன்றிடும் இவணே—எ - து 10

இத் தத்துவங்கட்குக் காரணமாகிய அசுத்த மாயையும் கன்மமும் சுத்தமாயையும் என்று ஆகிய இம் மூன்றும் முன் சொன்ன முறையே அவதரப்பட்டு அவை நீங்கும் இடத்துத் தாமே நீங்கும் என்க.

8. கேவலம்

தத்துவா தீதம் தன்னில் மைக்குழம்பினை
ஒத்திடும் மலஇருள் உறுவது கேவலம்—எ - து 11

இவ்வாறு எல்லாத் தத்துவங்களையும் நீங்கி நின்றவிடத்து மைக்குழம்பைப் போலும் இருள்மலத்தைப் பொருந்துவது கேவலம் ஆம் என்க.

9. கேவலநிலை (கேவல தரிசனம்)

அற்படு கேவலத்து அந்தகா ரத்துஉயிர்
நிற்பது கேவல நிலையது ஆகும்—எ-து 12

மலமாகிய இராக்காலத் துண்டான கேவலமாகிய இருளில் ஆன்மா இதுவோ கேவலம் என அதனைத் தெரிசித்து நிற்பது கேவல நிலையாம் என்க.

கேவலநிலையாவது கேவலத்தைத் தெரிசித்து நிற்கு நிலை. இது துகளறுபோதத்தில் கேவல தெரிசனம் எனக் கூறப் பட்டது.

10. திரோதானசத்தியின் தரிசனம் (கேவலாதீதம்)

இருள்மலம் நீங்குதற்கு எண்ணுதல் திரோதம்
அருள்வடி வான அவதரம் ஆகும்—எ-து 13

முன்சொன்ன இருள்மலமாகிய கேவலத்தை நீங்குதற்கு ஆன்மாச் சிந்தித்தலே "முற்சினமருவு திரோதாயி கருணை" (சிவப்பிரகாசம் 48.) யான அவதரம் ஆம் என்க.

இது துகளறுபோதத்தில் கேவலாதீதம் என்று கூறப் பட்டது

சிவனுடைய இச்சாஞானக்கிரியா தெரிசனம்

இனி "முற்சினமருவு திரோதாயி கருணை" யான அவதரத் தில் ஆன்மா முன் கலாதி யிச்சா ஞானக் கிரியைகளினலே பெத்தத்தில் கேவலம் நீங்கிச் சகலத்தில் விசுவ வியாபாரப் படுமாறுபோல முத்தியில் சிவனுடைய இச்சா ஞானக் கிரியை களினலே இங்ஙனம் அவதரப்பட்ட கேவலம் நீங்கி மேற்பட்டு விளங்கும் இச்சா ஞானக் கிரியா சொரூபமாகிய ஆன்மரூபம் அவதரப்படவேண்டுதலின் சிவனுடைய இச்சா ஞானக்கிரியை களின் தெரிசனம் கூறுகின்றது. இம்மூன்றும் துகளறுபோதத் தில் ஞானதெரிசனமென வொன்ருக்கிப் பிற்கூறப்பட்டன. அது சகல தெரிசனத்தைப் பிற்கூறியது போலும்.

11. இச்சாசத்தியின் தெரிசனம்

அங்குஉயிர் காண்பதற்கு ஆதரவு உறும்இடம்
சங்கரன் இச்சா சத்தியின் தரிசனம்—எ-து 14

இருள்மலம் நீங்குதற்கு எண்ணின இடத்துக் கேவலம் நீங்கி ஆன்மரூபம் காண்டற்கு விருப்பம் உறும் அவதரம் சிவனு டைய இச்சாசத்தியின் தெரிசனம் ஆம் என்க.

12. கிரியாசத்தியின் தெரிசனம்

மருவுஉயிர் வெளிப்பட வல்இருள் நீக்கம்
தருவது கிரியா சத்திய தாகும்—எ - து 15

அங்ஙனம் விருப்பம் மருவின ஆன்மாத் தனது ரூபம் காணும் பொருட்டுக் கேவலமாகிய மிகுந்த இருளை நீக்கம் செய்வது சிவனுடைய கிரியாசத்தியின் தெரிசனம் ஆம் என்க.

13. ஞானசத்தியின் தெரிசனம்

அந்த ஆருயிர் தனக்கு அறிவின் வியாத்தி
தந்தது ஞான சத்திய தாகும்—எ - து. 16

தனது ரூபம் காண்கின்ற அந்த அரிய வுயிர்க்குச் சிவ ஞானத்திலே கலப்பைத் தந்தது சிவனுடைய ஞான சத்தியின் தெரிசனம் ஆம் என்க,

14 ஞானாதீதம்

முழுதுநின் றுணர்த்தும் மூவகைச் சத்தியும்
நழுவிநின் றிடுவது ஞானா தீதம்—எ - து. 17

இவ்வாறு ஆன்மாக்கள்தோறும் பூரணமாய் நிலைபெற்று நின்று உணர்த்துவனவாகிய சிவனுடைய இச்சாஞானக் கிரியை யென்னு மூவகைச் சத்தியையும் தனித்தனி தெரிசித்தலை விட்டு அம்மூவகைச் சத்தியையும் ஒருதொகையாகக் கொள்ளப்படும் அந்தச் சிவஞானத்தினுள் ஒடுங்கி அதன் வசமாய்த் தனது இச்சா ஞானக் கிரியைகளின் விகாரம் அற்று நின்றிடுவது ஞானாதீதம் ஆம் என்க.

இதனைத் துகளறுபோதத்தில் ஞான தெரிசனத்துள் அடக்கிக் கூறுமாறு அதில் உய்த்து உணர்ந்து கொள்க.

15. ஆன்மரூபம்

புணர்ந்தவல் இருளினைப் புரைபுரை தொறும்சென்று
உணர்ந்திடும்அறிவு ஆன்ம ரூபமதாகும்—எ-து. 18

அது நாம் அது நாம் எனப் புலன்கடைப் புழைதொறும் நுழைந்து சென்று பின்பு அது நாமல்ல அது நாமல்ல வென்று மேற்பட்டுப் பொருந்திய கேவலம் ஆகிய மிகுந்த இருளினை இன்றளவும் மறைத்த இருள் இதுவோ என வியந்து உணர்ந்திடும் ஞானம் ஆன்மரூபம் ஆம் என்க.

16. ஆன்மதெரிசனம்

கேவல வல்இருள் கீழ்ப்படத் தான்முழுது
ஆவதே ஆன்ம தெரிசனம் ஆகும்—எ-து. 19

அந்த ஞானத்தை நானென நின்ற ஆன்மரூபம் எனும் கேவலமாம் அறியாமை கீழ்ப்பட்டு ஒழிய ஆன்மாவினது இச்சா ஞானக்கிரியை ஆகிய பசுகரணங்கள் சிவனது கரணமாகிய இச்சா ஞானக்கிரியை முழுதும் ஆவதே ஆன்மதெரிசனம் ஆம் என்க.

17. பரை தெரிசனம்

நயந்திடும் இச்சா ஞானக் கிரியையுள்
பயின்றிடா நிலையது பரைதெரி சனமே—எ-து 20

விடியற்காலத்து அருணவுதயம்போல ஆன்மாக்களிடத்துக் கடாட்சம் பொருந்தும் சிவனுடைய இச்சாஞானக் கிரியைக்குள் போதம் சிவியாது உச்சிக் காலத்துக் கதிரோன் ஒளி எங்கும் நிரந்தரமாய்க் குலவுதல்போல எங்கும் பொதுவாக நிறைந்து நிலவும் பரையின்கண்ணே நிலைபெறுவது பரை தெரிசனம்ஆம் என்க.

18. பரையில் வியாத்தி

நிரப்படு பரையினின் வேறுள வியாபகப்
பரப்பினைக் கண்டது பரையின் வியாத்தி—எ-து 21

நிச்சயப்படா நின்ற பரை நிறைவிலே ஆன்மாத் தனது வியாபகப் பரப்பைக் கண்டு அறிந்தது பரையில் வியாத்தி ஆம் என்க.

19. பரையோகம்

விரவிய பரையின் வியாபகத் துடன்உயிர்
பரவின் றிடுவது பரையினில் யோகம்—எ-து 22

அங்ஙனம் வியாத்தியான பரையினது வியாபகத்துடனே ஆன்மா அடிமைத்திறம் வழுவாது நின்றிடுவது **பரையினில்** **யோகம்** ஆம் என்க.

20. பரைபோகம்

ஆங்குஉறு பரையின் அநுபவ நிலைமையைப்
பாங்குஉறப் பெறுவது பரையினிற் போகம்—எ-து 23

அங்ஙனம் அடிமைத்திறம் வழுவாது நிற்கும் பரையின் கண்ணே அதிலுள்ள இன்பநிலைமையை ஐயம்திரிவு விகற்பம் இன்றி விளங்கப் பெறுவது **பரையினிற் போகமாம்** என்க.

துகளறுபோதத்தில் சுத்தபராயோகம் என்று கூறப்பட்ட அவதரமும் இதனுள் அடங்கும் என்க. இது அன்றி முத்தி **சாக்கிரமும் சாக்கிராதீதமும்** எங்கு அடங்குமோ வென்னில்,

முத்தி சாக்கிரம் பரையோகம் எனல்

முற்பரை யோகம் முழுப்பரை சாக்கிரம்—எ-து 24

முன் சொன்ன பரையோகமே வெற்ற வெறுந் தற்பரை யாகிய முத்தி சாக்கிரமும் என்க.

சாக்கிராதீதம் பரைபோகம் எனல

தற்பரை போகம் சாக்கிராதீதம்—எ-து 25

அந்த மேலான பரைபோகமே சாக்கிராதீதமும் என்க

21. ஆன்மசுத்தி

இனித் துகளறுபோதத்தில் பரையில் அதீதம் என்றும் சுத்தாவத்தை என்றும் கூறப்பட்ட அவதரம் இரண்டிலும் அடங்கும் ஆன்ம சுத்தி கூறுகின்றது.

ஓர்ந்திட நின்ற வுணர்வது முழுதுஞ்
சேர்ந்திடல் ஆன்ம சுத்தியது ஆகும்—எ-து 26

கேவலம் முதல் கூறப்பட்ட அவதரங்களை முறையே உணர்த்த உணர்ந்து அது அதுவாய் நின்ற போதம் சற்றும் பதைப்பு அற்றதே ஆன்மசுத்தியாம் என்க.

எனவே ஆன்மா எதையெதை யுணர்ந்ததோ அதுஅது மயமாய்த் தான் என்று ஒரு முதல் அற்றுப் போதம் அடங்கி நிற்றலே ஆன்ம சுத்தியென்பது ஆயிற்று.

அந்த அவதரத்தில் நீங்கும் மலம்

இருள்கெடக் கதிரொளி யெழுந்தது போல்உளத்து
அருள்எழ ஆணவம் அகன்றதும் இவணே—எ-து 27

விடிதலுக்கு மிக விருண்ட குமரி யிருட்டானது நீங்க விடியற் காலத்து அருண வுதயமாய் உச்சிக்காலத்து எங்கும் நிரந்தரமாய்க் கதிரோன் ஒளி யெழுந்து நிற்றல்போல் ஆன்மாக்கள் உள்ளத்து என்றும் நீங்காது ஒளித்திருந்த அருளானது ஞான தெரிசனம் முதல் பையப்பையப் பெருகியெழா நிற்ப, மடிதலுக்கு ஆருயிருண்ட அறியாமையாகிய ஆணவம் பையப்பையக் குறைந்து நீங்கினதும் இங்ஙனம் ஆன்ம சுத்திப் பட்ட அவதரத்திலே என்க.

எனவே மாயேயமும் மாயையும் கன்மமும் மாமாயையும் ஆணவமும் என்று சொல்லப்பட்ட பஞ்சமலங்களும் நீங்கின முறை கண்டு கொள்க.

இங்ஙனம் கேவல அவதாம் முதல் இதுகாறும் பசுவவதாம். இனிப் பதியவதாங் கூறுகின்றது.

22. சுகரூபம் பதி அவதாம்

அறிவகல் அதீதத் தனுபவஞ் சிறிதாங்கு
உறுவது வேசுக ரூபமதாகும்—எ-து 28

ஆன்ம போதம் பதைப்பு அற்று அகலா நின்ற பரையில் அதீதத்துச் சிறிதாகிய இன்பத்தை இதற்கு மேல் இல்லையென அவ்விடத்து ஆன்மாப் பொருந்துவது சுகரூபம் ஆம் என்க.

23. சுகாதீதம்

ஆன்ற அச் சுகத்துக்கு ஆதாரம் ஆம் குறி
தோன்றநிற் பதுவே சுகாதீதம் ஆகும்—எ-து 29

இதற்குமேல் இல்லை யென்னும்படி நிறைந்த அச் சுகப் பிரப்பைக்குத் தாரகமாகிய சிவ முதல் தோன்ற அதில் அழுந்தி நிற்பது சுகாதீதம் ஆம் என்க.

24. சிவரூபம்

அகண்டமும் சுகவடி வாம் சிவ மயம்எனச்
சகந்தனைக் காண்பது தான்சிவ ரூபம்—எ-து 30

சட சித்துக்கள் முழுவதும் சுகப் பிரபையே தனக்கு வடிவாகவுடைய சிவம் கலத்தலால் சிவமயம் எனப் பிரபஞ்சத் தைக் காண்பது சிவரூபம்ஆம் என்க.

25. சிவதெரிசனம்

எங்கும் கலந்த இறைவன்றுந் தொழிலையும்
அங்கங்கு அறிவது அருஞ்சிவ தெரிசனம்—எ-து. 31

சட சித்துக்களிலேயும் கலந்த நிலவனது பஞ்ச கிருத்தியங்களையும் அவனாலே பஞ்ச கிருத்தியப்படும் அந்த அந்தச் சட சித்துக்களிடத்திலே தனித் தனி பகுத்தறிவது மேலான சிவ தெரிசனம்ஆம் என்க.

ஆணவம் அகல அருள் பொருந்தும் அவதரம் சிவதரிசனத்தில் எனல்.

மருள்அதி கார மலம்அகன் றிடவே
அருளது மேலிடும் அவதரம் இவணே—எ-து 32

ஆன்மாக்களிடத்து மருண் மேலிடு செய்யும் ஆணவம் நீங்கும் பொருட்டு நின்மல சத்தியாகிய அருள் பொருந்தும் அவதரம் இந்தச் சிவதெரிசனத்திலே என்க.

ஆன்மசுத்தியில் ஆணவஅகற்சி கூறி அவ்வாணவ அகற்சிக்குக் காரணம் அருள் வந்து பொருந்துவதாம் என்று இங்ஙனம் கூறியது சிவதெரிசனமும் ஆன்மசுத்தியும் ஓரிடத்து ஆகலான் என்க.

26. சிவயோகம்

அற்புத அருளால்அத் துவி தம்பெறச்
சிற்பரத்து இயைவது சிவயோகம் ஆகும்—எ-து 33

அந்த நின்மல அருளால் அச் சிவபோகம் ஆகிய அத்துவிதத்தைப்பெறும் பொருட்டு அகண்ட பரிபூரணமான சிவத்திலே கூடிக் கலந்து உள்ளும் புறம்பும் ஒருதன்மையாய் இருப்பது சிவயோகமாம் ஆம் என்க.

இந்தச் சிவரூபம் சிவதெரிசனம் சிவயோகம் மூன்றும் துகளறுபோதத்தில் சிவப்பேறு என ஓர் அவதரம் ஆகக் கூறப்பட்டன.

27. சிற்பராநந்த தெரிசனம்.

நற்பர சிவத்துற நண்ணும்பே ரின்பஞ்
சிற்பராநந்த தெரிசனம் ஆகும்—எ-து 34

இவ்வாறு ஞானமாம் சிவஞான வெளியில் அநந்நியம் பொருந்தவே அப்பொழுது பொருந்தாநின்ற பெரிய இன்பம் சிற்பராநந்த தெரிசனம் ஆம் என்க.

28. சிற்பராநந்த யோகம்,

பெருபராநந்தப் பெருநதியினில் கலந்தாங்கு
உறுவது ஆநந்த யோகமதாகும்—எ-து 35

ஆன்மலாபம் பெறுகின்ற சிற்பராநந்த சமுத்திரத்தில் கலந்து அவ்விடத்தில் ஏகமாய்ப் பொருந்துவது சிற்பராநந்த யோகம் ஆம் என்க

29 சிவயோகம்

அருந்தும் ஆநந்த அவசம் மேலீடு
பொருந்திய நிலை சிவயோகமது ஆகும்—எ-து 36

வண்டானது அலர்ந்த நாட் பூவின் மதுவை ஆவலுடன் நிறைய வுண்டு அப்பூவை அலையாமல் நின்று அதிலே உறைகின்றேம் என்பதும் தெரியாமல் மயங்கும் நிலைபோல் ஆன்மாப் போத விகாரங்கள் நீங்கி அருந்தாநின்ற ஆநந்தத்திலே அவசம் உற்று அதில் அழுந்தினபொழுது இவனை விழுங்கித் திரும்ப விடாத ஆநந்தமேலீடு பொருந்திய நிலை சிவயோகம் ஆம் என்க.

30 உலகப் பழிப்பு

மெய்யுறு சமாதியை விடுத்தும் அவ் வருளினுள்
வையகம் காண்பது பழித்துக் காட்சியே—எ-து 37

இங்ஙனம் தசகாரியத்தில் அமைத்துக் கூறிய பதி பசு பாச அவத்தைகள் முப்பதில் பதியவத்தையில் கூறுகின்ற சுகம் ஆநந்தம் என்னும் இரண்டு அருளும் பொருந்து சமாதிநிலை தவறினும் விதிப்படிப் பஞ்சாக்கரத்தை உச்சரித்துப் பசு அவத்தையில் கூறுகின்ற விளக்கொளியும் சூரியனொளியும்போன்ற ஞானம் பரை இரண்டினில் ஞான விளக்கைத் தூண்டிக் கொண்டு அதினாலே மேலொளியாகிய பரை நிறைவால் அவ்வுலகத்தைக் காண்பது வையம்பழியாக மதித்துக் காணும் காட்சியாம் என்றவாறு.

உலகத்தைப் பைம்மறியாகப் பார்க்கில் பரை தெரிசனம் ஆதற்கும் அப்பரையைப் பைம்மறியாகப் பார்க்கில் சிவதெரி சனம் ஆதற்கும் பிரமாணம்:

"பைம்மறியாப் பார்க்கில் பரையாகும் அப்பரையைப், பைம்மறியாய்ப் பார்க்கில் பரம்" (சிற்றம்பல. வெண். 55) எனவும்,

> "நனவாதி அந்தத்தில் நாடுசுகந் தன்னைக்
> கனவாதி அந்தத்தில் கண்டு—நனவாதி
> தோற்றிடும்போ தந்தச் சுகரூபம் கண்டவர்கள்
> மாற்றிடுவர் என்றும் மலம்" (சிவபோகசாரம், 21)

எனவும் வருவது காண்க.

அவ்வருளெனச் சுட்டியது, பதிஅவதாரத்தில் கூறிய சுகம் ஆனந்தம் இரண்டும் பசு அவதாரத்தில் கூறிய ஞானம் பரை இரண்டும் ஆக நாலருளினுள் உலகத்தைப் பைம்மறியாக மறித்துக் காணும் காட்சி பரை ஆதலான் என்ன அறிக.

1 தத்துவரூபம், 2 தத்துவதெரிசனம், 3 தத்துவசுத்தி மூன்றில், 1 பூதப்பழிப்பு, 2 பொறியறவுணர்தல், 3 அந்தக் கரணசுத்தி, 4 கலாதிஞானநிராகரணம், 5 சுத்ததத்துவ தூடணம், 6 தத்துவாதீதம் 7 சகலதெரிசனமாம் ஏழவதரமும் அடங்கி வருமாறுபோல, ஏனை இருபத்துமூன்றவதாரமும், 1 சிவரூபம், 2 சிவதெரிசனம், 3 சிவயோகம். 4 சிவ போகம் நாலும் * இதில் அடங்கிவரும். 5 ஆன்மரூபம், 6 ஆன்மதெரிசனம், 7 ஆன்மசுத்தி மூன்றும் ஆக ஏழினும் அடங்கி வருமாறு குருவருளால் உணர்ந்து முப்பதையும் பத்தில் அமைத்துக்கொள்ளவும்.

சிவாநந்தபோத சார முற்றும்.

திருச்சிற்றம்பல தேசிகன் திருவடிகளே துணை.

இந்நான்கில் என்றவாறு. நான்கும் சிவனுடைமை என ஒன்றே ஆதலால் இதில் என ஒருமையாகக் கூறலாயிற்று.

இவை முற்பதிப்பிலிருந்த அட்டவணை

தருமபுரம் சிவஞானபோத சாரத்தில் முப்பதவதாரத்தையும் தேசகாரியமாய்ச் சொல்வதற்குத் தொகை.

1 முத்திச் சகலம்
2 பூதப் பழிப்பு
3 பொறியறவுணர்தல்
4 அந்தக்கரண சுத்தி
5 கலாஞான நிராகரணம்
6 சுத்ததத்துவ தாடணம்
7 பிராணவாயு நீக்கம்
8 கேவலம்
9 கேவலநிலை
10 திரோதானசத்தியின் தெரிசனம்
11 இச்சாசத்தியின் தெரிசனம்
12 கிரியாசத்தியின் தெரிசனம்
13 ஞானசத்தியின் தெரிசனம்
14 ஞாநுதிதர்
15 ஆன்மரூபம்
16 ஆன்மதெரிசனம்
17 பரைதெரிசனம்
18 பரையில்வியத்தி
19 பரையோகம்
20 பரைபோகம்
21 ஆன்மசுத்தி
22 சுரூபம்
23 சுகாதீதம்
24 சிவரூபம்
25 சிவதெரிசனம்
26 சிவயோகம்
27 சிற்பராநந்த தெரிசனம்
28 சிற்பராநந்த யோகம்
29 சிவபோகம்
30 உலகப்பழிப்பு

பாசவவதாரம்	7	சாக்கிரம்	15
பசுவவதாரம்	14	சொப்பனம்	9
பதியவதாரம்	9	சுழுத்தியிலில்லை	
		துரியத்தில்	4
		துரியாதீதத்தில்	1
		ஆக	29

உலகத்தைப் பழித்துப் பரையாகப் பார்க்கில் சொப்பனமும், சிவமாகப் பார்க்கில் துரியமுமாம்.

சித்தாந்த சாத்திரத்தில் முப்பது அவதாரத்தையும்
தெரசனியத்தில் ஏழாய் அடக்கிச் சொல்லியிருந்த வகை

1 பூதப்பழிப்பு
2 பொறியறவுணர்தல்
3 அந்தக்கரணசுத்தி
4 கலாதிஞானநிராகரணம்
5 சுத்த தத்துவ தாடணம்
6 தத்துவரூபம்
7 தத்துவதெரிசனம்
8 தத்துவசுத்தி
9 கேவலம்
10 கேவலதரிசனம்
11 கேவலாதீதம்
12 ஆன்மரூபம்
13 ஆன்மதெரிசனம்
14 ஞானதரிசனம்
15 ஞானாதீதம்
16 பரைதெரிசனம்
17 பரையோகம்
18 பரைபோகம்
19 பரைவிலதிதம்
20 சுத்தாவத்தை
21 சுகரூபம்
22 சுகாதீதம்
23 வெய்பேறு
24 ஆன்மசுத்தி
25 பரமாநந்த தரிசனம்
26 பரமாநந்தயோகம்
27 பரமாநந்தபோகம்
28 ஆன்மலாபம்
29 பரமாநந்த மேலிடு
30 உலகப்பழிப்பு

பாசவவதரம்	8	ஆன்மரூபம்வரை சாக்கிரம்
பசுவவதாரம்	12	பரைபோகம்வரை சொப்பனம்
பதியவதரம்	10	பரமாநந்தயோகம் துரியம்
		பரமாநந்தமேலிடு அதீதம்

முற்றிற்று.

குருஞானசம்பந்த சுவாமிகள் திருவடிகளே துணை.

துகளறு போதம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

நூகளாறு போதப் பொருள் வைப்புமுறை

திருவருள் விளையுந் திறம்பல வெளினும்
ஒருவகை யிருபத் தெட்டுடன் பிறவும்
ஆமவை பூதம் ஐந்தின் பழிப்பே
தாமிட மாகச் சார்பொறி யறுத்தல்
எழுவளி முயற்சியி னியைந்திடும் பொருள்களிற்
சுழல்வுறு மந்தக் கரண சுத்தியும்
பலகுணம் விடுக்கும் பகுதியைத் தோற்றும்
கலைமுத லேழும் கழன்ற நிலையும்
சுத்த தத்துவ தூடண மைந்தும்
தத்துவா தீதமுஞ் சார்முத்திச் சகலமும்
சகல தெரிசனந் தானருட் கேவலம்
திகழ்கே வலத்தின் தெரிசன மதீதம்
தன்னுண்மை யொடு சைதன்னிய தெரிசனம்
என்னும் பன்மூன் றெனவரு மவத்தையும்
உரைதரு ஞான தெரிசனத் தோடும்
பரைதெரி சனமே பரையில் வியாத்தி
நிருமல சாக்கிரஞ் சாக்கிரா தீதம்
பகர்சுத் தாவத் தைசுக ரூபத்
தோடு சொல்சுகா தீதம் பகர்சிவப்
பேறு பரமா னந்த தெரிசனம்
பரமா னந்த யோகம் போகம்
பரமா னந்த மேலீ டவசம்
ஆனவிப் பதினெந் தவத்தை கூடத்

தான் எழுநான்கு எனச் சாற்றிய பின்னர்
அஞ்செழுத் தியல்பும் அருளாங் தேசிகர்
தஞ்சிறப் பறிந்து சாரும் புதல்வர்
அவர்பணி நிற்றலு மாதியி லியற்றும்
தவநெறி மூன்றுஞ் சதமெனு மளவில்
துகளறு போதச் சுருதியிற் சென்ற
அகலிடத் தவருக் கருள்கூர்ந் துரைத்தனன்
கங்கைமெய் கண்ட கடவுளர் கருணையின்
இங்கெமக் கருளிய விறையோ னிருவகைத்
துறவும் பூண்ட தோன்றலோர் கணத்தின்
அறுபது முனிவர்க் கழகிய மன்றுள்
ஆடிய பாதம் அருள்சிற் றம்பல
நாடி யென்றுயர் ஞானதே சிகனே.

துகளறுபோதப் பாடற் பகுப்பு

பாயிர மூன்றும் பூத மேழும்
பொறியின் மூன்றுங் கரணங் கலாதி
சுத்த தத்துவம் தத்துவா தீதம்
சகலம் கேவலம் தரிசனம் அதீதம்
தன்னுண்மை யாம் ஒன்பதும் இவ்விரண்டாம்
சைதன்னிய மூன்றும் ஞான மாறும்
பரையி னுலும் வியாத்த மொன்றும்
யோக மொன்றும் சாக்கிர மிரண்டும்
அதீத மொன்றும் பரையா தீதம்
இரண்டும் சுத்த வவத்தை யொன்றும்
சுகசொ ரூபம் நாலும் அதீதம்
இரண்டும் சிவப்பே ருறும் பரமா
நந்தம் நாலும் யோகம் இரண்டும்
போகம் அஞ்சும் மூன்றுமே வீடாம்
அவசம் இரண்டும் அணுவும் அட்சரம்

குருதுதி சீடன் முத்தன் குருவழி
திருமேனி யருமை குருவே குருபணி
அதுவது ஒன்றும் யோகம் மூன்றும்
கிரியை நாலும் சரியை மூன்றும்
ஆக நூறும் அறைந்தனர் போதம். 1

அவதரம் இருபத்தெட்டும்
அவத்தை ஐந்தனுள் அடங்கும் வகை

சாக்கிரந்தான் ஈராறு சார்சொப் பனம்ஆறு
நீக்குஞ் சுழுத்தியொன்று நேர்துரியம்—நோக்கி
ஒருமூன் றதீதந்தான் ஒராறும் நாலேழ்
தருமே துகளறுபோ தம். 2

முப்பது அவதரமாக் கொண்டவர் ஐந்தவத்தையுள்
அடக்கும் வகை

சாக்கிரம் பத்தொன் பதுகனவு தான்ஒன்று
தூக்குசுழி ஒன்று துரியம் எட்டு—நீக்கித்
துரியாதீ தம்ஒன்று சுத்தவத்தை முப்பான்
சரியித் துகளறுபோ தம். 3

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

சீகாழிச் சிற்றம்பலநாடிகள் அருளிய

துகளறு போதம்

காப்பு

எல்லாம்பொய் என்றே எனைக்காட்டி எம்பிரான்
சொல்லாத பேரறிவு தான்சொல்லி—நல்லதொரு
அற்புதமாம ஆனந்தம் ஆங்கருத்தல் செப்புதற்குக்
கற்பகத்தின் தாளிணையென் கண்.

நூல்

பாயிரம்

பதிபசு பாசந் தெரிந்தந்தப் பாச
விதிவழியை வென்றதனின் வேரும்—கதிவழங்கும்
மெய்கண்டான் சந்தானம் மேவிச் சிவானந்தம்
கைகண்டார் காணார் கரு. 1

உற்ற சரியை ஒழியாத நற்கிரியை
குற்றமிலா யோகக் குறிநெறியும்—முற்றிப்
பிறந்தார்கள் தாம்அறியப் பேசுகே னன்றிப்
பிறந்தார் அறியாத பேறு. 2

எல்லாம் கழற்றி இறைவ னுடுங்கலக்க
வல்லார்கள் சொன்ன வழிபலவும்—சொல்லரிய
தம்பிரான் ஆகமத்தில் சாற்றும் அவதரமும்
எம்பிரான் தந்தான் எமக்கு. 3

1 பூதப்பழிப்பு

மண்ணுக் குயிராகி வந்நாத்துத் தான்தரிக்கும்
எண்ணும்உரோ மாதிஇதன் காரியமாம்—கண்ணில்
பிறவுங் கடினமாய்ப் பேசியது தானும்
துறவுமுதற் பூதத் தொழில் 4

நீர்க்குயிராய் நின்றே நெகிழ்ந்து குளிருமே
பார்க்கில்நீ ராதி பகர்கருமம்—கார்க்குரிய
வெள்ள முதலாகும் மெய்யுணரில் அப்புத்தான்
அள்ள விடப்படா தாம். 5

வன்னிக் குயிராகி வந்துசுட்டு ஒன்றுவிக்கும்
பன்னுபசி யாதி பயில்கருமம்—மன்னும்
விளக்காகிப் பந்தமாய் வேறாகி நிற்கும்
துளக்கமிலாத் தேயுத் தொழில். 6

தேடப் பிரித்துத் திரட்டுவிக்கும் செய்கருமம்
ஓடல்முதல் ஓவா உயிர்மருத்து—நாடில்இவை
அல்லவாம் வாயு அருட்குருவால் காண்பதன்றிச்
சொல்லவா ராதே தெரிந்து. 7

இரந்தரமாய் நின்றே இடங்கொடுக்கும் வானம்
பரந்த குரோதமுதல் பார்க்கின்—விரிந்த
கருமமாய் வேறாகும் காணலாம் உண்மைக்
குரவனால் என்றே குறி. 8

வட்டம் அறுகோணம் மாயாத முக்கோணம்
இட்ட பிறைசதுர மேவடிவம்—எட்டரிய
வேதன்மால் மிக்க விடையோன் மகேசனுடன்
ஆதி அதிதெய்வ மாம். 9

இப்படியே பூதத் தியல்பு தனைத்தெளிந்தே
அப்படிநீ நில்லாமல் ஆங்கறிந்திட்—டெப்படியும்
தோன்றாமல் தேசிகன்றான் சொன்னபடி கண்டிருந்தால்
ஊன்றாய் அதுவாம் உடம்பு. 10

2 பொறியறவுணர்தல்

பூத வுடம்பாய்ப் பொருந்தும் பொறிபுலன்கள்
நாதனரு ளாலேநீ நாடிஅவை—ஏதமெனத்
தத்தம் உருவுணரத் தான்அகலும் அப்போதே
சத்தமுத லாகிவிடும் தான். 11

சத்தாதி ஐந்தினையும் சந்தித்து நீஅகல
அத்தால் வரும்பயன்கள் ஆங்ககலும்—எத்தாலும்
காணுமல் அவ்விடயம் கைகழலக் கைகழலும்
நாணுப் பிறப்பின் நவை. 12

வாக்காதி அத்துடனே நீங்கவச ஞதிவிடும்
நீக்காத உட்கரணம் நீங்குமே—தாக்கி
மனது முதலாக வந்தவந்த போது
தனது செயல்உணரத் தான். 13

3 அந்தக்கரண சுத்தி

மன்னும் மகாரம் மனஞ்செலுத்தும் புத்தியினை
உன்னும் உகாரம் உபகரிக்கும்—முன்னுகும்
ஆங்காரந் தன்னை அகாரம் செலுத்தியிடும்
நீங்காத சித்தம்விந்து நேர். 14

அந்தக் கரணம் அகல அதிற்கூடுந்
தொந்தக் கலாதித் துரிசறுமே—பந்திக்கும்
சித்த மயலறுத்துத் தீர உனக்கேறல்
ஒத்த படியே உணர். 15

4 கலாதிஞான நிராகரணம்

பொங்கு புலனருந்தப் போதந் தருமாயை
தங்குகலை யாதி தருஞானம்—இங்கிதனை
நீங்குபடி மாணவக நின்போதம் ஒன்றிரண்டு
தூங்குபடி நில்லாய் துணிந்து. 16

காலம் நியதி கலையாதி தத்துவங்கள்
சாலஅறி விச்சைதொழில் தான்பூத்தல்—மூலமா
மாயை மயக்கல் வரைத்தல் விளைகூட்டல்
ஆயவிட லாமென் றறி. 17

5 சுத்த தத்துவ தூடணம்

ஆன அதனால் அழுந்தினால் ஆசதற்கேன்
ஈன வயிந்தவத்தின் எல்லைகாண்—ஊனமிலாப்
போகம் தருமானால் பொல்லாதோ புண்ணியத்தின்
ஆகம் துணையானோர்க் காம். 18

சுத்தவித்தை யாதிமுதற் சொன்னஏழ் தத்துவமும்
ஒத்து நடத்தியிடும் ஓவாமல்—வித்தைசெயல்
ஏறிக் குறைந்தொத்தல் எப்போதும் பார்த்திடவே
மாறிப் பிறந்தகலு மாறு. 19

6 தத்துவாதீதம்

மண்முதலா நாதாந்த மாய்வந்த தத்துவத்தின்
உண்மையறிந் தெல்லாம் ஒழிந்தாயே—எண்ணில்இவை
தத்துவா தீதமெனச் சாற்றுங்காண் **சைவமறை**
அத்துவா எல்லாம் அற. 20

இப்பரிசே **ஐந்துசுத்தி** எய்தியதால் எப்போதும்
செப்பரிய மாயாதி தீருமே—அப்பரிசே
ஆங்கவற்றி னோடே அழியும் வினை மலந்தான்
நீங்கவற்றே நீங்கா நிலை. 21

7 சகல தரிசனம்

நின்றுநின்று வந்த நிலைதோறும் நீஅறிந்த
தன்றிஅவை தன்னை அகன்றாயே—இன்றிவைதான்
முத்தி படுஞ்சகலம் முன்னம் படுஞ்சகலம்
பெத்தமது என்றுநீ பேசு. 22

அஞ்சு வகையாக ஆறாறும் நீத்ததற்பின்
விஞ்சிவரும் ஆணவத்தின் மேலீடு—வஞ்சமறச்
சாற்றில்அது கேவலமாம் தான்கழித்துப் போந்தநிலை
சாற்றில் அதுசகலந் தான். 23

8 கேவலம்

அன்றிவந்த தத்துவங்கள் எல்லாம் அகன்றிடவே
ஒன்றிநின்ற ஆணவந்தான் ஒன்றுமே—என்றுந்தான்
நீங்கா இருள்விழிபோல் நிற்குமே ஆன்மாவும்
பாங்காக ஆங்கே பதிந்து. 24

பகலிழந்த வான்போல் பரவுமலம் நீயாய்
இகலறவே நின்றாய் இழந்தாய்—அகலறிவு
வாடாத முத்தியினில் வாய்த்தஅருட் கேவலம்நீ
நாடாத கேவலமுன் னுள். 25

9 கேவல தரிசனம்

ஒன்றுந் தெரியா ஒழியா இருளாகி
இன்றளவும் நின்ற திதுவோதான்—ஒன்றாகிச்
செம்பிற் களிம்புபோற் சேர்ந்துநின்ற ஆணவந்தான்
அம்புநிழல் போலென் றறி. 26

கருவி கரணம் கழன்றும் கழலா
இருளின் பெருமையிது என்னே—இருள்தான்
விடிகைக் கிருண்ட மிகுதிபோல் மாசு
மடிகைக் கிருண்டதுகாண் மற்று. 27

10 கேவலாதீதம்

வானில் இரவிவர வல்லிருள்போ மாறுபோல்
ஈன இருள்அகல்வ தெக்காலம்—மானே
அறிந்தாய் இருளென் றறியாமை தன்னைப்
பிறிந்தாயோ இல்லையோ பேசு. 28

இந்த இருள்ஒழிய ஏதும்நான் காண்கிலேன்
இந்த இருள் அகல்வ தெப்படியோ—இந்த
அறியாமை நின்றால் அதனைநீ காணாய்
அறியா தறிந்தனையோ அன்று. 29

11 தன்னுண்மை

அந்த மலமாம் அறியாமை கண்டாயே
அந்த அறிவுநீ ஐயனே—தொந்தஇருள்
போனதே உன்னைவிடப் போக்கித் திரோதைஅரு
ளானதே கண்டாய் அறி. 30

வைத்த அவதரங்கள் எல்லாம் உடன்வந்தும்
அத்தகைமை கண்டும் அறியாயால்—முத்தனாய்ப்
பாச அறிவும் பதியறிவும் அன்றியே
ஆசறவே நின்றவன்நீ யாம். 31

12 சைதன்னிய தரிசனம்

கண்ணில்இருள் போனாலும் கண்தன்னைக் காணாபோல்
எண்ணும்இருள் போனால் எனை அறிய—வொண்ணாதோ
கண்போற் சடமோநீ காட்டியதுங் கண்டறிந்த
ஒண்போதம் நீயென் றுணர். 32

இருட்கும் ஒளிக்கும் இடமாகும் வான்போல்
அருட்கும் மருட்கும் அகமாய்ச்—சுருக்கமிலா
நீசத் தசத்தன்று நேரே சதசத்த
னாய்சத் ததுஅசத்த தாம். 33

அறியும் அறிவுநீ அன்றோ உனக்குச்
செறியுமலம் நின்றதோ செப்பாய்—அறிவுதனைப்
பாராதே பார்த்தறிந்து பாசப் பழக்கமதில்
வாராத தன்றோ வழக்கு. 34

13 ஞானதரிசனம்

அறிந்தறிந்து வந்த அவதரங்கள் தோறுஞ்
செறிந்தறிய நின்றதெது தேரின்—பிறிந்ததனின்
நின்றதறி யாமை நிகழ்த்தியது நீக்கிஉனை
இன்றறிய வைத்ததருள் என். 35

அந்த அருள்உனக்கிங் காதார மாய்அல்லின்
இந்துஎன எறித்திட் டேகமாய்—முந்தி
உனைஉனக்குத் தான்விளக்கி ஓவா துணர்த்தும்
தனை உனக்குக் காட்டுமே தான். 36

எல்லாம்பொய் என்றிங் கிருந்தேனும் நானன்றே
நல்லாய் எனை அறிந்தேன் நானன்றே—சொல்லாடும்
நான்பிரமம் அன்றி நடுவே உணர்த்துதற்கு
வான்பிரமம் உள்ளதோ மற்று. 37

அன்றுமுதல் இன்றளவும் அண்ணல்அறி விப்பதன்றி
இன்றறிவேன் நான்என் றியம்புவதென்—என்றும்
அவத்தை தனில்உணர்த்தி ஆங்கருத்தி இன்றித்
தவத்தில் உணர்த்தினர்ஆர் தான். 38

உன்அறிவை நீயே உணர்வையே யாமாகில்
இந்நெடுநாட் பாசத் தியைபாயே—உன்அறிவை
நீங்கா அறிவாகி நீரும் இரதமும்போல்
ஆங்காண் அரனார் அருள். 39

உன்அறிவுக் குள்ளே உணர்வாய் ஒழியாத
தன்அறிவு தான்உனக்குத் தாரகமாய்ப்—பின்னமற
ஒன்றாய் ஒழியாமல் உள்ளடங்கி உள்ளபடி
நின்றால் அதுஆவை நீ. 40

14 பரைதரிசனம்

இச்சை உயிர்க்கிரங்கல் ஞானம் இசைந்துணர்த்தல்
வைச்ச கிரியை வயங்குத்தல்—நிச்சயமாஞ்
சத்தியிவை மூன்றினையுந் தந்ததொரு சத்திகாண்
முத்தனே பார்நீ முயன்று. 41

கிரியைஅறி விச்சை கிளர்ந்தசத்தி ஏதோ
பெரியபரா சத்தியெனப் பேசாய்—தெரியிலதிங்
சாரும் அறியா அகண்டபரி பூரணமாய்ப்
பேரறிவாய் நிற்கும் பெற. 42

அந்த அறிவும் அறிவன்றோ இப்போது
தந்த அறிவும்அது தானன்றோ—அந்த
அறிவிற் கிளைத்ததுகாண் அவ்வறிவிங் கேதோ
நிறைவிற் கிளைப்பற்ற நேர். 43

அறிவார்க் கறிவித்தங் கல்லாத தாகா
அறிவாய் விகற்பம். அறியா—அறிவேகாண்
கண்பெற்றார் கண்ட கதிரொளிபோல் கண்டதனை
விண்பற்றாய் நில்லதிலே மேல். 44

15 பரையில் வியாத்நம்

விண்ணில் கதிரோன் விளங்கி விரிந்ததுபோல்
கண்ணில் கதிரோன் கலந்ததுபோல்—நண்ணிப்
பரைநிறைவில் நீயும் பதிவையே யாகில்
உரையிறந்திட் டொன்றாவை உற்று. 45

16 பரையில் யோகமும் போகமும்

விண்ணில் விகற்பமற மேவியகால் நின்றதுபோல்
நண்ணும் பரையதனில் நன்னலிபோ—எண்ணிறந்து
நீர்உறங்குந் தன்மைபோல் நிற்கைபரை யோகம்அதில்
சீருறலே போகமெனச் செப்பு. 46

17 சுத்தபராயோகமும் சுத்தபராபோகமும்

நீங்காத பேரறிவின் நீங்காமற் கண்டநீ
நீங்காமல் நின்றபடி நின்றதனின்—நீங்காமல்
நின்றுவிட லன்றேதான் நின்மலன்றன் பேரறிவில்
ஒன்றுபடல் என்றறிநீ உற்று. 47

(முத்திசாக்கிரம்)

எத்திசையும் ஒன்றாய் இறையறிவி லேஅழுந்தல்
சுத்தபரா போக மெனத்துணிநீ—சத்தியமே
அத்தன்மை கண்டால் அதுமுத்தி சாக்கிரமாம்
சித்த மயல்அறவே தேர். 48

18 சாக்கிராதீதம் (முத்தி சொப்பனம்)

நின்ற அறிவறிகை நீங்காமை சாக்கிரமாம்
அன்றி அவிழ்தல் அதீதமாம்—சென்றறிவின்
நீங்காமல் நின்று நெடிது துயில்கொளவே
வாங்கா தறிவாய் வர. 49

19 பரையிலதீதம் (முத்தி சுழுத்தி)

இவ்வறிவு காண்டல் இருள்தீருஞ் சாக்கிரமாம்
அவ்வறிவு காணா ததீதமாம்—இவ்விரண்டும்
பாராமல் நிற்றல் பரையி லதீதமாம்
ஆரா அறிவகன்ற தால். 50

ஈசனறி வாகிஎலாம் இன்று கழன்றகன்றாய்
பாசமிக வைத்ததனிற் பற்றாதே—கூசாமல்
நேராக நீங்கிஅதில் நின்ற சுவடறவே
வாராய் சிவமேல் வர. 51

20 சுத்தாவத்தை (முத்தி துரியம்)

அறிவுடையச் சென்றுங் கதீதமாய் நின்ற
குறியிறந்திட் டொன்றுங் குறியா—நெறியேது
சுத்தவத்தை மைந்தாஉன் தொல்லைமலம் இல்லைஇல்லை
அத்துடனே செல்வதது வாம். 52

21 சுகரூபம்

பைய இருந்து பதைப்பற்ற பின்உனக்குத்
துய்ய சுகப்பிரபை தோன்றுமே—ஐயனே
கண்டாய் சிவபூமி காட்சி யறக்கலந்து
கொண்டாள்வான் கண்டாய் குறித்து. 53

விழுந்த அவதரத்தில் விஞ்சு சுகந்தான்
எழுந்ததிது எங்கே இறைவா—மொழிந்தருளாய்
மாமணியிற் சோதி மலர்ந்த பிரபைபோல்
ஆம் அரன்றன் பாலே அது. 54

துன்பமற்ற இந்தச் சுகப்பிரபை தன்னையே
இன்பசத்தி என்றறிநீ எப்போதும்—அன்புறவே
நின்றதிலே ஆறி நிலாவும் நிலாவும்போல்
மன்றல் தரமணைந்து வாழ். 55

தேனூறும் இன்பச் சிவவடிவம் இப்படியோ
வானோர் காணாத மன்னவனே—ஞானா
இதுவும் ஒருசத்தி இறைவர்க் கதனால்
எதுமுத்தி சொல்லாய் இனி. 56

22 சுகாதீதம் (முத்தி துரியாதீதம்)

இந்தச் சுகத்தில் இனிநீ விழியாமல்
அந்த அறிவின் அயர்ந்ததுபோல்—தொந்தமறப்
போதாய் இதுவே சுகாதீதம் பொய்யற்றோர்க்
காதார மான அருள். 57

ஒன்றுஞ் சுகவடிவச் சொல்லான தற்பிரான்
அன்றி ஒருபொருளும் ஆகாதே—நின்றழுந்திச்
சொல்லரிய இந்தச் சுகந்துய்க் கதீதமாய்
நில்அவன்தா னாமே நிலை. 58

23 சிவப்பேறு

எல்லாம் கழன்ற இடமே சிவமென்று
சொல்லா டுவர்கழன்ற தூயோர்கள்—நல்லாய்கேள்
நின்றபடி தானே நிலையா நிலையதனில்
நின்றுவிடு நேராக நீ. 59

வானகத்தில் வானும் மணத்தில் மணமும்போல்
ஆனசுகப் பேற்றில் அழுந்திஅது—தானாகும்
ஆண்டகுரு நாதா அடியேன் பெருவாழ்வை
மீண்டுசொல உண்டோ விதி. 60

நீயுஞ் சிவமாகி நின்றாயோ நின்றிலையோ
ஆய அடி யேனோ அதிகாரம்—நாயனே
ஒன்றன் றிரண்டன் றிரண்டொன்று தானன்று
நின்றதொரு தன்மை நிலை. 61

சாற்றில் அதற்குவமை தாடலைபோற் சன்மார்க்க
வேற்று விதிபலவும் வேண்டாவே—போற்றிய
நித்தனே சுத்தனே நித்தியா னந்தனே
அத்தனே முத்தனே ஆங்கு. 62

அந்தச் சுகத்துக் கதீத அவத்தை யென்பர்
பந்தமற்ற முத்திப் பயனறியார்—அந்தோ
பிறியாத இன்பப் பெருமானைப் பெற்றும்
அறியாத வாதனையால் ஆங்கு. 63

நின்ற நிலைசிவமாய் நின்றாலே நின்மலனும்
என்றும் பயனாய் இருந்தானே—அன்றே
அவனுக் கிதமே தவனாகி நின்ற
இவனுக் கிதமே தினி. 64

24 பரமானந்த தெரிசனம்

அன்றே தொடங்கி அனைத்துயிரும் தானாகி
ஒன்றாகி நின்றவருக் கின்பூட்டிக்—குன்றாமற்
கொண்டுவிட லன்றோநம் கோமாற் கிதமென்று
[1]பண்டைமறை சொல்லும் பரிந்து. 65

பார்க்கரிய இந்தப் பரம சுகந்தனையே
சேர்ப்பன்உயிர்க் கென்றிறைவா செப்பினையே—மாற்றரிய
ஆனந்தம் ஆருயிர்கட் கண்ணல் அருத்துவது
தான்எங்குப் பெற்றவா சாற்று. 66

பெற்றருந்தி இன்பம் பிறர்க்கும் அருத்தினனோ
உற்றபர மானந்தம் உள்ளதோ—மற்றிதுதான்
என்றுநீ கேட்கில் இறையுருவம் ஆனந்தம்
[2]என்றுரைக்கும் ஆகமநூல் இன்று. 67

ஆனபர மானந்தம் ஆகின்ற எல்லையே
ஊனமிலா உண்மைதனில் ஒன்றுபடல்—ஈனமறத்
தானான போது தணவா தெழுந்தசுகம்
மானே அதுவா மதி. 68

25 பரமானந்த யோகம்

விளைந்தபர மானந்த வெள்ளந் தனிலே
துளைந்துதுளைந் தாடிஅதில் தோன்றா—வளைந்துன்னை
நீர்போல் அமிழ்த்தியதன் நீள்நிழல்போ லேகரந்து
பார்போல் தரிப்பாகும் பார். 69

பாராதே அந்தப் பரம சுகந்தன்னை
நேராகத் தானா நிழல்போலத்—தீராச்
சுபாவம் அதுவாகித் தோன்றிமறை யாதே
அபாவமாய் நில்லாய் அதில். 70

[1]'கண்டுகொள்நீ இந்தக் கருத்து'. [2]'அன்றிவே றொன்றில்லை யாம்'.

26 பரமாநந்த போகம்

நின்றபர மானந்தம் நேரே அனுபவித்தங்
கொன்றுபட உள்ளுருகி ஓவாமல்—என்றும்
மதுவுண்ட வண்டுபோல் மாளாச் சுகத்தைப்
புதிதுண் டிருந்துவிடிப் போது. 71

பருகத் தொலையாப் பரபோகந் தன்னை
உருகிஅடி யேன்அருந்த ஊட்டும்—குருவே
அழியாத இன்பம் அரன்அருந்தான் என்னும்
வழிவந்து சொல்லீர் மகிழ்ந்து. 72

சர்க்கரைதான் ஆர்க்கும் தரும் இரதம் அவ்விரதம்
சர்க்கரைதான் கொள்ளுமோ சாற்றுங்கால்-சர்க்கரைக்கின்
றின்புருவம் அன்றி எழிலுருவம் வேறுண்டோ
இன்புருவ மேஇறைக்கும் என். 73

நாவார் இரதமது நாஅருந்தல் அல்லாதிங்
காவா இரதம் அறியுமோ—ஓவாப்
பரமசுகம் உன்பால் பலிப்பதே அன்றிப்
பரமசுகங் கொள்ளா பயன். 74

இந்தச் சுகம் ஆன்ம லாபம் எனஅறிநீ
அந்தச் சுகம் ஒழிந்திங் காராதே—இந்தச்
சுகமெலாம் அந்தச் சுகமாக்கில் உன்றன்
அகமெலாம் ஆனந்த மாம். 75

27 பரமானந்த மேலீடு

அண்ணலும் ஆனந்தம் அருளும்ஆ னந்தம்உயிர்
எண்ணிலா ஆனந்தம் எவ்வுலகும்—பண்ணி
அளித்தழிப்பா ராகும் அவர்களும்ஆ னந்தம்
களித்ததுவே எப்போதும் காண். 76

எங்குநிறைந் தானந்தம் எல்லாம் அமிழ்த்திமிகப்
பொங்கிக் கரைபுரண்டு பூரணமாய்—எங்கும்
வளைத்த உலகுயிரும் வாய்த்த சுகமாம்
அளத்திற் புகுந்ததுபோல் ஆங்கு. 77

கண்டஇட மெல்லாம் கருணைக் கடலமுதம
மொண்டுகொள வாய்நிறைந்த முத்திதனைப்—பண்டே
திருமால் அயனறியாத் தேசிகனார் பாதம்
தருமாம் அடியேற்கும் தான். 78

28 பரமாநந்த அவசம்

பரமபர மானந்தம் பார்நீழ்மேல் மற்றும்
அரவம்வா ராதே அகலும்—புரணமாய்
ஆங்கே அமிழ்ந்தி அவசமாம் ஆனந்தம்
நீங்கா ததுவாகி நில். 79

உற்றபர மானந்தத் தொன்றாய் அதில்உறங்கி
முற்றுவதே முத்திமுடி வென்றுரைக்கும்—குற்றமிலா
வைதிக சைவம் வழிநூல் புராணமற்றுஞ்
செய்வனநூ லெல்லாம் தெளி. 80

அணுவகை

ஒன்றிரண்டு மூன்றுமலம் உள்ள உயிர் மூவர்க்கும்
சென்றிவன்போல் நேரே சிவமாகி—நின்றநிலை
இவ்வகையே ஆளும் எழிற்குருவாம் ஈசனே
அவ்வகையை நீஇங் கறி. 81

பஞ்சாக்கர தெரிசனம்

அஞ்செழுத்தும் அண்ணல்அருள் ஆன்மாத் திரோதமலம்
மிஞ்சி நமத்துரந்து மெய்யருள்வாத்—தஞ்சச்
சிகாரத்தில் யவ்வைவிடுந் தீதிலா இன்பப்
புகாரில் புகுந்தருந்தப் போய். 82

குருதுதி

பற்றிநின்ற பாசம் பறித்தகல வேவிழித்திட்
டுற்றஉயிர் காட்டி உணர்வுணர்த்தி—மற்றுஞ்
சிவப்பேறு தந்து சிவபோக வாரி
புகப்பே றளித்தவரைப் போற்று. 83

சீடரிலக்கணம்

இரவு பகல்நிழல்போல் இட்டபணி செய்து
குரவர்புகழ் வாயாரக் கூறித்—திருமுன்
விழுந்துவிழி நீர்பொழிய மெய்விதிர்த்து நின்று
தொழுந்தவத்தோர் காணுஞ் சுகர். 84

முத்தனுக்கும் முத்தியின்மை கூறல்

ஆகமுதல் நீங்கி அருளிற் கலந்துசிவ
போகம் விளையப் புணர்ந்தாலும்—வேகத்
தெரிவாய் நிரயத் திருப்பர் குருசொற்
பிரிவார் உலகிற் பிரிந்து. 85

குரு வழிபாடே பொருளெனக் கூறல்

ஆகம் உயிர்பொருள்கொண் டன்றே அருள் அளித்துச்
சோகமெனப் பாவிக்கச் சொன்னுரைத்—தாகத்தோர்
வேண்டு பொழுதெல்லாம் வேண்டுபொருள் வந்ததுபோல்
பூண்டுதொழ லன்றே பொருள். 86

திருமேனியருமை கூறல்

அன்றுமுத லாகவே ஆருயிர்கட் காருயிராய்
நின்றருளும் தம்பிரான் நீங்காமல்—என்றும்
கருவாய்ப் பிறப்பைக் கழற்றினரோ தாமே
குருவாய் அருளாமற் கூறு. 87

குருவே சிவமென்றல்

பாசம் பசுபதியைப் பாரித்துப் பார்த்தனரே
ஆசில் அகலறிவாய் ஆங்ககன்று—பேசரிய
ஆனந்தம் பெற்றூர் அருட்குருவே ஈசனென்பர்
மோனமே முற்றும் முயன்று. 88

குருபணி செய்வாரை வழிபடுதல்

கருவேலை தன்னைக் கடப்பர் உலகில்
மருவாத இன்பத்துள் வைத்த—குருவின்
அடியார் அடியார் அடியார் அடியார்
அடியாரைச் சார்ந்த அவர். 89

யோகம்

சன்மார்க்கம் ஈதாம் **சகமார்க்கம்** சாற்றுங்கால்
பன்மார்க்கம் வாயுப் பகர்கருவி—தன்மார்க்கஞ்
சால ஒடுக்கித் தடுத்து வளியிரண்டும்
மாலறவே நிற்கை மகிழ்ந்து. 90

அந்த மனத்தாலே ஆதாரம் ஆறினையும்
சந்தித் ததிற்பொருள்கள் தான்அறிந்தி—டிந்துவிலே
ஓவா ஒளிவைத் துருதும்அமு துள்நிறைக்கில்
ஓவா ஒளியாம் உரு. 91

நின்ற ஒளியுருவின் நீங்காமல் நிற்கவே
என்றும் அழியாமல் இன்புற்றுக்—கொன்றையந்தார்த்
தாணுவுருப் போலேயின் சாருப் பியத்திலே
மாணவக வாழ்மெய்காண் மற்று. 92

கிரியை

புத்திர மார்க்கம் புகைஒளி மஞ்சனம்பூ
வைத்தமுது தாம்பூலம் மற்றெவையும்—உத்தமமாய்த்
தேடிவைத்துப் பின்னைச் சிவபூசை செய்வதற்கு
நாடவத்திற் செல்லாமல் நாள். 93

சுத்திஐந்துஞ் செய்து துகள்தீரும் மந்திரத்தால்
அத்தமது பத்துமுகம் ஐந்தாக—வைத்துவைத்து
வித்தியா தேகம் விதிப்படியில் தாபித்துப்
பத்தியால் மேனிதனைப் பார். 94

பார்த்ததிரு மேனிப் படிகந் தனில்பரனைக்
கோத்ததிரு மந்திரத்தால் கொண்டுவந்து—பார்த்தருளச்
சொல்லிற் பராக்கறுத்துச் சோதிச் சிவாகமத்தின்
சொல்லிற் படியே தொடங்கு. 95

சோராமல் பூசித்துச் சொன்னபடி நில்இதழித்
தாரார் சமீபத்தில் தான்இருந்து—வாராமல்
தானே பரன் அளிக்குஞ் சங்கரனுர் இம்முத்தி
தானே தரினும் தரும். 96

சரியை

தாதமார்க் கம்சாற்றின் சங்கரனுர் இன்புற்ற
பூசை திருவேடம் போற்றியே—நீதியினுல்
பூங்கா வனஞ்சமைத்துப் பூமாலை புண்ணியற்குப்
பாங்காகச் செய்கை பரிந்து. 97

அலகு திருமெழுக்கிட் டாலயத்தில் அன்பாய்
இலகு திருவிளக்கும் ஏற்றிப்—பலகாலும்
சென்று வணங்கித் திருவடிவா ரஞ்சேர்த்தி
நின்றிடுகை தொண்டர்பணி நேர். 98

கொன்றையந்தார் வேணியற்குக் கோயில் பலசமைத்துப்
பொன்றியவை முற்றும் புதுக்குவித்து—நின்றுர்
அவலோகந் தன்னில் அடையார் அடைவர்
சிவலோகந் தன்னிற் சிறந்து. 99

காப்பொடு நூறு திருவெண்பாக் கொண்ட
துகளறுபோதம் முற்றிற்று.

சித்தாந்த சாரம்

முன்னுரை

தசகாரியங்களை முப்பதவதரத்து வைத்துக் கூறும் சித்தாந்த சாரம் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் அச்சிடப்பட்டது. அப்பதிப்பில் அது ஸ்ரீ பரமமுனிவர் இயற்றியதாகக் காட்டப் பட்டது. அப்பதிப்பு, பிழைகள் நிறைந்திருந்தமையாலும், நூல் சிறந்ததாகக் காணப்பட்டமையாலும் அதனைத் திருத்திப் பதிப்பிக்க எண்ணிச் சீகாழி வித்துவசிரோமணி ப. அ. முத்துத் தாண்டவராயப் பிள்ளை யவர்களை யுசாவியபொழுது அவர்கள் இந்நூலுக்குக் கையெழுத்துப் பிரதி யொன்றனுப்பியதோடு இங்கிருந்து அனுப்பிய 'புரு'பைத் தருமபுரம் ஆதீனம் அடியார் குழாத் தொருவராகிய வித்துவான் சட்டைநாத முனிவரவர்கள் பிரதி, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துப் பிரதி, சீகாழி ஸ்ரீ ச. சதாசிவ முதலியாரவர்கள் பிரதி, தம்மிடத்துள்ள பிரதி என்றிந்நான்கோடும் ஒப்பு நோக்கிப் 'புருப்' திருத்தமா யிருத்தலை யுணர்த்தி யூக்கியும், இம் முத்திநிலை காழிச் சிற்றம் பல நாடிகள், காழித் தத்துவப் பிரகாசர், கமலை ஞானப் பிரகாசர் முதலிய பெரியோர்கள் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறிய நூல்களின் சாரமாகத் தருமபுர ஆதீனத்து ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தென்றும், இப்பரமாசாரியரது சரித்திரம் காசித் திருவருட்பா என்னும் நூலின் முகவுரையுட் காணப்படுவதென்றும் தெரிவித்தும் உதவிபுரிந்தனர்.

தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவ யோகம், சிவபோகம் என்னும் தசகாரியங்கள் உண்மைநெறி விளக்க மென்னும் சித்தாந்த நூலில் விளக்கப்பட்டன. துகளறு போதம், 4 ஆவது முதல் 8 ஆவது செய்யுள்வரை, பூதப்பழிப்பு, பொறியறவுணர்தல், அந்தக்கரணசுத்தி, கலாதி ஞான நிரா கரணம், சுத்ததத்துவதூடணம், தத்துவாதீதம், சகலதெரிசனம், கேவலம், கேவலதெரிசனம், கேவலாதீதம், தன்னுண்மை, சைதந்நிய தெரிசனம், ஞானதெரிசனம், பரைதெரிசனம், பரையில் வியாத்தம், பரையில் யோகம், பரையில் போகம், சுத்தபராயோகம், சாக்கிரம், சாக்கிராதீதம், பரையிலதீதம்,

சுத்தாவத்தை, சுகரூபம், சுகாதீதம், சிவப்பேறு, பரமானந்த தெரிசனம், பரமானந்தயோகம், பரமானந்தபோகம், பரமானந்தமேலீடு, பரமானந்தவவசம் என்னும் முப்பது அவதரங்களைக் கூறிற்று. தத்துவப்பிரகாசம், 243 ஆவது முதல் 302 ஆவது செய்யுள்வரை, பஞ்சபூதப்பழிப்பு, பொறியறவுணர்தல், அந்தக்கரணசுத்தி, கலாதிஞான நிராகரணம், சுத்த தத்துவ தூடணம், தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, கேவலம், கேவலதரிசனம், கேவலாதீதம், ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஞானதரிசனம், ஞாநாதீதம், பரைதரிசனம், பரை யோகம், பரைபோகம், பராதீதம், சாக்கிராதீதம், சுத்தாவத்தை, சுகரூபம், சுகாதீதம், சிவரூபம், பரமானந்ததரிசனம், பரமானந்தயோகம், பரமானந்தபோகம், ஆன்மலாபம், பரமானந்த மேலீடு, உலகப்பழிப்பு என்னும் முப்பதவதரங்களைக் கூறிற்று. சித்தாந்தசாரம் பெரும்பான்மையும் தத்துவப் பிரகாசத்தைத் தழுவி யுரைத்தது.

இனி, 'முப்பது வகைப்படு முத்தி நன்னெறியினைச் செப்புவனமைத்துத் தெசகாரியத்தில்' என்று தொடங்கிய சிவானந்த போத சார மென்னும் சித்தாந்த சாத்திரத்திற்கு உரை யெழுதியவர் அந்நூல் துதளறுபோதம் கூறும் முப்பதவதரத்தையும் முத்திச்சகலம், பூதப்பழிப்பு, பொறியறவுணர்தல், அந்தக்கரண சுத்தி, கலாதிஞான நிராகரணம், சுத்த தத்துவதூடணம், பிராணவாயு நீக்கம், கேவலம், கேவலநிலை, திரோதானசத்தியின் தெரிசனம், இச்சாசத்தியின் தெரிசனம், கிரியாசத்தியின் தெரிசனம், ஞானசத்தியின் தெரிசனம், ஞாநாதீதம், ஆன்ம ரூபம், ஆன்மதெரிசனம், பரைதெரிசனம், பரையில் வியாத்தி, பரையோகம், பரைபோகம், ஆன்மசுத்தி, சுகரூபம், சுகாதீதம், சிவரூபம், சிவதெரிசனம், சிவயோகம், சிற்பரானந்ததெரிசனம், சிற்பரானந்தயோகம், சிவபோகம், உலகப்பழிப்பு எனத் தச காரியத்தில் அடக்கிச் சொல்லுவதாக உரைத்தார். முத்திநெறி முப்பதவதரத்தையும் விளக்கும் இச் சித்தாந்தசாரத்தை ஓதி யுணர விருப்புடையார் மேற்குறித்த மூன்று சித்தாந்த நூல்களையும் உடன்கொண்டு ஓதி யுணரப் புகுவராயின் பெரும் பயனெய்துவர்.

S. அனவரதவிநாயகம் பிள்ளை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

சித்தாந்த சாரம்

காப்பு - வெண்பா

மூவாத முத்திநெறி முப்ப தவதரமுந்
தேவாக மத்தின்வழி செப்பவே—மேவித்
திசைவதனத்[1] தான்றனக்குஞ் சீதரற்கு மெட்டாக்
கசவதனத்[2] தான்சரணங் காப்பு.

நூல்

கண்ணுதலோன் அருள்புரிந்த வேதாக மங்கள்
கருதரிய புராணங்கள் யாவையினும் கருத்து
நண்ணரிய பதிபசுபா சம்தெரித்த லாகும்
நலங்கொள்பதி யேதுஉலக இயல்பே தென்னில்
திண்ணமுறு மாயைதான் சடமாகி அருவாம்
திருந்துருவாய் வரமாட்டா சீவனுஞ்சேர்ந் தறியான்
மண்ணதுதான் கடமாகா குலாலன் வேண்டும்
மற்றதுபோல் இறைவனுளன் மாயைநடந் திடவே. 1

அப்பதிதான் பரஞான[3] ஆனந்த மயமாய்
அசலமாய் நிராமயமாய் அமலமாய் அருளாய்
ஒப்பிலதாய் அருவுருவாய் ரூபா ரூபத்
தொருமுதலாய் அவைகடந்த வொளியாகி வெளியாய்த்
தப்பில்பரி பூரணமாய் அனந்த கோடி
தரும்அண்டப் பரப்பனைத்தும் உள்புறம்பாய்த் தனுவாம்
எப்பொருட்கும் உள்ளீடாய் வாக்குமனங் கடந்த
இன்பாகி அணுவிலணு மகத்தினுக்கு மகத்தாம். 2

பா - ம்—[1]தெரிவதனத். [2]கரிவதனத். [3]பரமான.

இருள்விழிபோல் ஆணவத்தால் அறிவிழந்து பசுவாய்
இந்தடயக் கால்வினைகள் ஈட்டியதற் கேற்ற
உருமருவி நரகசுவர்க் கம்புவியில் சுழன்றே
உடல்பொறிகள் மாறிக்கொண்டு ஊழ்வழியால் ஊட்டும்
திருவருளை யிழந்துஏக தேசியுமாய்ச் சித்தாய்ச்
சிற்றறிவாய் அணுவாகிச் சீவன்உயிர் பிராணன்
புருடன்என்னும் பெயர்பெற்று மலபாகத்து உயிர்கள்
பூதநா யகனருளால் பூரணத்து உற்றிடுமே. 3

ஆணவஞ்செம் பில்செறிந்த களிம்பு போலும்
அழன்றகனல் அடக்கியிடுங் காட்டம் போலும்
பூணுமுயிர்க்கு அநாதியாய் அறிவுதொழில் மறைத்துப்
போதமுற வுயிர்க்குயிராம் பொருளை அறி யாமல்
நீணெறிசேர் உலகியற்கைப் பொய்யினைமெய் யாக்கி
நிறைபுலன்கள் வழிபோகம் புசித்திடவே நிறுத்தி
யேணுயிர்கள் பலவிதத்தால் சத்திகளும் பலவாய்
இரவிகதிர் முன்னிருள்போல் அருள்பெறின்நீங் கிடுமே. 4

அடல்மேவுஞ் சிவனெங்கும் நிறைந்திருப்பான் ஆன்மா
அப்பொருளை விடான்பழமும் இரதமும்போல் என்றீர்
சடமேவு மலமுயிரைத் தடுப்ப தெங்கே
சாதகமாய்த் தேசிகனே சாற்றுக என்றாய்
கடல்போலுஞ் சிவன்கடலில் புனல்போலும் ஆன்மா
கரியமலந் தண்ணீரில் உப்புப் போலும்
திடமேவும் உப்பு அந்தக் கடலுக்கில்லைச்
சிற்றுயிர்க்கே மலம்இறையைச் சேர்ந்தி டாவே. 5

இன்னமும்கேள் ஆகாயத்தே வாயு நிற்கும்
இலங்கியநற் கந்தங்கள் துர்க்கந்தமெல்லாந்
துன்னரிய வாயுவுக்கே யன்றி அந்தச்
சுடர்விசும்பு தனக்குண்டோ தொடர்ந்தஆ ணவத்தின்
மன்னும்அறி யாமையினல் இதாகிதமாங் கன்மம்
மற்றதனல் துக்கசுகம் புசிக்க வேண்டிப்
பின்னுடல்மா யையில்உண்டாம் உண்டாக எல்லாப்
பிணிப்பும் உயிர்க்கே அந்தப் பெருந்தகைபால் உறாவே. 6

அருளில்உயிர் கூடும்நெறி முப்பதவ தரமாம்
அவைபூதப் பழிப்புடனே பொறியறநின் றுணர்தல்
நிரைஅந்தக் கரணசுத்தி கலாதிஞான
நிராகரணம் சுத்ததத்வ தூடணமே பிராணன்
பரவுதத் துவரூபம் தரிசனம்தற் சுத்தி
பணியுறுகே வலம்அந்தக் கேவலத்தைக் காண்டல்
விரிகேவ லாதீதம் ஆன்ம ரூபம்
மிகும்ஆன்ம தரிசனம்பின் ஞானதரிசனமே 7

பகர்ஞானு தீதம் அப்பாற் பரைதரிச னம்சொற்
பரையோகம் பரைபோகம் பரையில்அதீ தந்தான்
தொகுசிவன் நல்தரிசனம் சாக்கிரா தீதம்
சுத்தவத்தை சுகரூபம் துலங்குசுகா தீதம்
திகழ்சிவப்பேறு ஆன்மசுத்தி பரமா னந்த
தெரிசனம் பின்பரமா னந்த யோகம்
அகல்பரமா னந்தபோகம் ஆன்ம லாபம்
ஆனந்த மேவீடு சகப்பழித்த லாமே. 8

பிறந்தபூ தப்பழிப்புப் பகருங் காலை
பிருதிவியப் புத்தேயு வாய்வா காயம்
நிறங்கஒளான்றுக் கையைந்தாய்ப் பரிணமித்தால் உடம்பாய்
நின்றுணும்போ கங்கஎளல்லாம் உடல்ஆன்மா என்றாய்
உறங்கிடுங்கால் அறிவிலேக்காண் ஒருபொறியில் தாக்க*
உற்றறியும் என்றாய்பின் னுயிர்போனால் பிணமாய்ச்
சிறந்துளோர் கட்டையினில் புரட்டிவீழ்த் துருட்டித்
தீக்கொளுவச் சுட்டதென்று திரும்பக்காண் கிலேயே. 9

பொறியைந்தும் உயிரென்றாய் ஒன்றறிந்த தொன்று
புக்கறியா தைந்தையுங்கேட் டுண்டுகண்டுற் றுயிர்க்கும்
அறிவொன்றுண்டு அதுஆன்மா அஞ்சறிவாய் விடுமோ
அவைகரணஞ் செலுத்தியிட அறிந்திடும் என்றறிநீ

பா - ம்—*ஞெருபொறி யொன்றாக.

செறிகரண நான்குஞ்சே தனமென்றாய் சடமாய்ச்
சிந்தித்துப் பற்றிநிச் சயித்தெழுந்தே நான்காய்ப்
பிறியுங்காண் அகரவுக ரம்மகரம் விந்துப்
பெற்றறியும் உன்னறிவில் பிரித்துப் பாரே. 10

கலையாதி ஆன்மாவென் றுரைசெய்தாய் மாயா
காரியமாய்ச் சடமாகிக் கஞ்சுகமா யுயிருக்கு
உலையாத தொழிலும் அறிந் திடவேணு மென்றங்கு
ஓரறிவும் அதிலாசை உறுவதுவாம் உணர்நீ
தலையான சுத்தத் துவம்அறிவென் றுரைத்தாய்
தகுஞான மாய்க்கிரியை தானாய்ஓ ரிரண்டும்
உலையாமல் ஒத்தும்அதிற் கிரியை யேறி
உயர்ஞானம் ஏறியும்பின் வரும்அஞ்சு விதமே. 11

கருவியெல்லாம் நீங்கிடவும்[1] உடலை நீங்காக்
காரணத்தால் ஆன்மாவே ப்ராணவாயு என்றாய்
ஒருவாதுஉச் சுவாசம்நிச் சுவாசமாக
வுடலின்று முறங்கிடுங்கால்[2] உணராத தென்னே
புரிகரண மொடுங்குதலால் அறியா தென்றாய்
பொய்யுடற்கு வேந்தனார் வாயு ஆனால்
அரசனே அமைச்சரின்றிப் பவனி போந்தான்
ஆகும்இது சடமாம்வேறு ஆன்மாவுண் டென்னே. 12

தரையாதி நாதாந்த முப்பத் தாறுந்
தனித்தனியே பகுத்தல்தத் துவரூப மாகும்
நிரையாய வடிவுகுணந் தொழில்க ளெல்லாம்
நினைந்தறிதல் தத்துவத்தின் தரிசனம தாகும்
விரவாதிங் கிவைசடமாம் என்று நீங்கல்
விளங்குதத் துவசுத்தி மேவியதத் துவங்கள்
ஒருவியதே கேவலம் இதுவோகே வலமென்று
உணர்ந்ததுவே கேவலத்தின் தரிசனமென் றுணரே. 13

பா • ம்— [1]மொடுங்கிடவு. [2]முறக்கத்தில்.

கேவலாதீதமது விடிதலுக்காய் இருண்ட
  இளர்குமரி யிருட்டுப்போல் மடிதலுக்கா இருண்ட
தாவதுன தறியாமை அகன்றக்கா லறிவாய்
  ஆன்மரூ பம்பூதம் அல்லைபொறி யல்லை
தாவுகர ணங்கள்அல்லை யென்றுநா முணர்த்தத்
  தனித்தங்கண் நின்றனை இவ் விருளே தென்றாய்
மேவிஉனை இன்றளவும் மறைத்தஆ ணவமே
  வியந்திதுவோ எனக்கண்ட அறிவுகா ணீயே. 14

ஆத்மதரி சனம்உரைக்கில் உன்னறிவு நீயே
  அறிந்துபா ரெனஅவன் நான்அறிந்தஇடம் எல்லாம்
மேற்படநிற் பவன்நானே யிவைகண்டு நீங்க
  வேறுகர்த்தா இலைஉடலை நடத்தலும்யா னென்றான்
சாற்றரிய சிவஞானம் உனையுணர்த்தும் இந்தத்
  தத்துவங்கள் உன்வழித்தன்று இரவிலுன்கைப் பொருளை
வேற்றொருவன் கவரநின்று வெருவிவிழித் திடலால்
  வேறுனக்கேது உனையுணர்த்தும் விமலனருள் தானே. 15

அருளான இச்சாஞா னக்கிரியா சத்தி
  அக்கினியுங் காட்டமும்போல் சுத்தசத் துவத்தைப்
பிரியாதே பிரேரிக்க இனிச்சிவதத் துவங்கள்
  பெருகுமனுப் பதம் வன்னம் புவனம்தத் துவங்கள்
மருவுகலை யெனஆறு அத் துவாக்களாயும்
  மந்த்ரேசர் பதேசர்வன் னேசர்புவ னேசர்
அரியதத்து வேசர் கலேசர்களும் ஆகி*
  அதோமாயை யால்நிறைந்த கலாதிகள் ஏழினையும். 16

ஏழிடமாய் நின்றுநடத் திடச்சுத்த மாயை
  எழில்வாக்கு நான்கினுல் வசனுதி விரிக்கத்
தாவில்சூக் குமபஞ்சாக் கரத்தி னுலே
  தருகரணங் களையுமெழுத் துலவரய ஹவ்வால்

பா - ம்—*லேசுரர்களாகி.

விழ்பொறிபூ தங்களையும் நடத்த இந்த
விரிவெல்லாம் பதங்கள்புவ னங்கள்கலை கலந்து
வாழ்வுபெறத் தனித்தனிநின் றியக்க இந்த
வகையுலகம் தொழிற்பட்டு வருதல்சிவன் றொழிலே. 17

என்றும்அருள் ஆன்மாவை நடத்தல் கேளாய்
இந்திரியங் களையும்அந்தக் கரணங்கள் தமையும்
நின்றறிய உயிருணர்த்த அறிந்துடனாய் நிற்கும்
நெறிபோல வுயிர்ப்போதம் அறிவிக்க வறிதல்
அன்றியே சிவபோத முடனாய்நின் றுணர்தல்
ஆதலால் அருளன்றி நமக்கோர்செய லிலைநாம்
இன்றளவும் நமதுதொழில் என்றதெல்லாம் அருளே
என்றுருகி அவ்வருளைப் பிரியாமல்இருநீ. 18

அறிவுபற்றி நீயிருந்தால் விடியற் காலத்
தருணவுத யம்போல வரவுகதிர் விழுங்கிப்
பிறியுமா போலவொளி மெல்ல மெல்லப்
பெருகுங்காண் மனக்கவலை அற்றுக் காண
வுறுதிரோ தாயிமறைத் துனக்குக் காட்டும்
ஒளிஞான தரிசனமாம் அசபைவிந்து நாதம்
பெறும்ஆதா ரங்கள்பிரா சாதவேதா கமங்கள்
பின்யோகத் தால்ஒளிகள் பெறின்பிறப்பாய் விடுமே. 19

உலவியருளா னுதீதம் சிவஞா னத்தின்
உள்ளொடுங்கி அதன்வசமாய்உன் விகாரம்
பலவுமற இருத்தலாம் பரைதரிச னங்கேள்
பகர்ஞான மிகுந்ததனுட் புக்கவொளி யெங்கும்
நிலவியே பொதுவாக நிறைந்துசெபூங் கதிரோன்
நீடொளிஉச் சிக்காலத்து எங்குமிரந் தரமாய்க்
குலவுதல்போல் புரையறநின் றிடுத லாகும்
கூறியஇப் பரைவியாத் தப்புகலக் கேளே. 20

சாற்றுபரை திரோதைமுதல் அநேகம்அரு வுருவாஞ்
சத்திகளாய்ச் சிவனுக்கு வடிவாகிக் கரணம்
தேற்றுகுணம் இந்திரியந் தொழில்க ளாகிச்
சேர்ந்தசாங் கோபாங்க மாகியிருப் பிடமாய்ப்

போற்றரிய சரீரிக்கிவ் வுலகமாய் அளிக்கும்
பொருளாகிப் பீடலிங்க மாதல்பரை வியாத்தம்
மாற்றரிய பரையில்உறை யாதுநெகி ழாமல்
வசமாகத் தனைமறைய நிற்றல்பரை யோகம். 21

கண்டயோ கப்பயனாய் விளைந்தமணி யோசை
கடலோசை யாழோசை செயகண்டி யோசை
வண்டோசை மதயானை பிளிறோசை நாத
வகையோசை கொம்போசை வந்து தோன்றில்
உண்டான பரைபோகம் பரையிலதீ தந்தான்
ஓசையெலாம் அழியஅதில் உருகி யிருப்பதுவாம்
மண்டுசிவ தரிசனம்இக் கேடுபடா விமல
வளரொளிக்குள் ளொளியாகச்சிவத்தைக்காண்பதுவே. 22

சொன்னபரை யொழியவொரு பொருளுண்டோ இந்தச்
சுடரொளிக்குள் ளோபுறம்போ இதனொடுகூ டிடுமோ
என்னவே திகைத்திடுதல் சாக்கிரா தீதம்
இதில்அவத்தை யைந்துண்டு சுத்தவத்தை யாகும்
மன்னும்ஆ ணவமாதல் சிவவிழப்பு மாயை
வாய்த்த தனு கரண புவனபோக மாகுங்
கன்மமறம் பாவமாய்ச் சுகதுக்கங் காட்டுங்
கருது மாமாயை ஐந்து காரணர்க்கு மெய்யாம். 23

அத்தகு மாயையை நடத்தும் திரோதாயி மறைத்தே
அமர்ந்தூட்டு மலம்ஐந்துங் காட்டும் ஞான
சத்தியிடமாப் பூர்ண போதமாய் நிற்றல்
சாக்கிரம் பூரணபோதம் நிருவிகா ரமதாய்ச்
சுத்தபரை முதலாதல் நின்மலசொற் பனமாம்
தூயபரை போகத்தில் போதமற அழுந்தல்
ஒத்தநின் மலசுழுத்தி பரை அதீதத்தெழுந்த
உயர்பரமா னந்தத்தில் முதலாதல் துரியம். 24

பரமானந்தந் தனிலே சுட்டறநின் றதுவாய்ப்
பார்த்திடல் நின்மலதுரியா தீத மாகும்
அருட்பரைக்கும் சிவனுக்கும் உவமை கூறில்
ஆதித்தன் சிவன்போலும் அதன்கிரணம் பரையாம்

நிரைமனவாக் கிறந்தசிவ மதனிலுறை யாது
நெகிழாது போதமற நின்றவிழ இருத்தல்
அரியசுக ரூபம்அதில் ஆகா யத்தே
அநிலமடங் குதல்போல்உன் போதமற நில்லே. 25

நின்றபோ தவ்வொளிதோன் றிடும்அந்த வொளியின்
நீக்கமற நின்றழுந்தல் சுகாதீத மாகும்
என்றுமது பாவித்தல் பாவகம்விட் டிருத்தல்
இவைஆகா நேரென்று நேர்பெறலு மாகா
வொன்றியுறைத் திடலாகா வுறைப்புவிட லாகா
உயிருமதன் வழித்தென்னில் இரண்டாகும் அதுநாம்
என்றிடில் அஞ்ஞானமாம் எல்லாம்நா மென்றால்
இகல்ஆன்ம வாதமாம் இவையொழிந்து பாரே. 26

தீரஇந்த முறையிருந்தால் சிவம்பிரகா சிக்கும்
சிவப்பேறு இது ஆன்மசுத்தி செப்புங் காலை
ஆருயிர்அஞ் ஞானத்தே கூடிடில்அஞ் ஞானி
அதுதான்நீத் திரையாகும் அவ்வுயிர்சத் தோடே
சார்வுறில்சத் தாகும்அது பரையுணர்சாக் கிரமாம்
சத்தும்அசத் தும்புணர்ந்தால் புருடரூ பமதாம்
சோர்வறஇந் நிலைக்குள்ளே உண்டாம் போதத்தைத்
தோற்றுவியாமல் காணப்பட்டவொளி தொடர்ந்தே. 27

அந்தவொளிக் குள்ளடங்கி அதீதப்பட் டுறங்காது
அடங்கில்நீ கண்டசிவத் தின்பசத்தி யெனலாய்
முந்துசுகா தீதமாம் சுகாதீ தத்தே
முயன்றுபயின் றிடின்சிவப்பே றுறும்அது கண்டால்
வந்திடுங்காண் ஆன்மசுத்தி யிதுசிவப்பே றாகும்
மற்றதுபெற் றேமென்று கருதாதெள் ளளவுஞ்
சிந்தை நினைவற் றெழுது சித்திரமே போலத்
திரையற்ற தெள்ளமுதக் கடல்போலுஞ் சிறந்தே. 28

அன்புருகி யுறையாது நெகிழாது பற்றாது
அணைந்தநினைத் தெரியாதங் கழுந்தின்மகத் தான
இன்பசுக மேபரமா னந்ததரி சனமாம்
இவைதெரிய வுருகினபொன் போல்சலனம் இன்றாம்

பின்புபர மானந்த யோகநிறை நீரில்
 பெருகவிழித் தவர்க்குநிலந் தோன்று மாபோல்
ஒன்றவுரு கியசெம்பிற் கனற்பொறிதோற் றுவபோல்
 உளதறிவிற் செருக்குவர ஆனந்தம் உதிக்கும். 29

நீடுபர மானந்த போகம்உயிர் சிவத்தே
 நிற்கும்நெறி யாணவமும் ஆன்மாவும் போலும்
தாடலை காறலைப்பதத்தின் புணர்ச்சி போலும்
 சாற்றிலொன்றாகாது இரண்டுதானு மாகா
நாடியிரண் டொன்றாகா அதன்வசமாய் இன்ப
 நலம்பெறலாம் நாஇரதம் புசிக்குங் காலை
கூடியநா இரதமோ இரதம்நா வாமோ
 கொண்டிரதம் நாஅருந்தல் போல்ஆன்ம லாபம். 30

அன்றலர்ந்த பூவின்மது நிறைய வாரி
 ஆவலுடன் உண்டவண்டு பூவைஅலை யாமல்
நின்றதிலே யுறைகின்றோம் என்பதற மயங்கும்
 நெறிபோலப் போத விகாரங்கள் நீங்கிச்
சென்றுதெளி வுற்றுஉன்வச மற்றந்தப் பொருளிற்
 சேர்ந்தபோ துணைவிழுங்கும் திரும்பவிடா திதுவே
நின்றபர மானந்த மேலிடாம் இந்த
 நிலைநின்றோர் சாயுச்சிய நிலையி னாரே. 31

சொல்லியஇந் நிலைகலங்கில் அஞ்செழுத்தை விதியால்
 சொருபசுபாவந்தெரிந்து உச்சாரணத்தின் வழியே
புல்லிய ஞானச்சுடரைத் தூண்டிநே யத்தாற்
 பொருந்தியந்த ஞானப்ர காசத்தின் முதிர்வால்
எல்லொளியாம் பரைநிறைவில் விகற்பறவே சிவமாம்
 இந்தநிட்டை அந்தநிட்டை யாம்இதுவு மகன்றுற்
செல்வமெனக் குருலிங்க ஜங்கமத்தைப் பொருளாய்ச்
 சிந்தையில்வைத் துருகளல்லாச் சித்தியும்உண் டாமே. 32

சித்தாந்தசாரம் முற்றிற்று

தோத்திரப் பதிகங்கள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

துண்டிவிநாயகர் துணையடி துணை

தருமபுர ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளிய

காசித் துண்டிவிநாயகர்

திருவருட்பா

காப்பு-வெண்பா

சீர்கொண்ட காசிநகர் சேர்துண்டி ராசனெனும்
பேர்கொண்ட ஐங்கரற்குப் பேசுபுகழ்த்—தார்கொண்ட
நற்றிருப்பாட்டு ஈரைந்து ஞாலமிசைத் தொண்டரெலாங்
கற்றிருப்பார் மேலாம் கதி.

ஓங்கார வடிவான உன்பாத தாமரையும்
உபயபரிபுரமறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்கள் ஒருகோடி நிகரொளியும்
உத்தூளநீற்றி னொளியும்

பாங்கார்கசானனமும் முககரமும் வளர்புயப்
பவளாசலங்கள் நான்கும்
பாசமுடனங்குசம் கொம்பொரிலட்டுகம்
பட்சமொடுவைத்த கரமும்

நீங்காத அருள்மாரி பொழியும் த்ரியம்பகமும்
நிறையுமும் மதமாரியும்
நீள்சடாடவியும் வெண்பிறையும் ஒருதொந்தியும்
நெஞ்சில் ஒருகாலும் மறவேன்

காங்கேயன் மகிழ்தமையனே கங்கைநதி பெருகு
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரியகுண மேருவே அருட்
கருணாநிதிக் கடவுளே. 1

அருளால்உருக்கொண்ட ஆனந்த வெள்ளமே
அனந்த சூரியர் உதயமே
ஆயிரங்கோடி சந்திரர் உதயமேயின்பம்
ஆனமழைபொழி மேகமே

திருவே பெருஞ்செல்வமே காமதேனுவே
சிந்தாமணிக் குவியலே
தேனுவின் பாலுடன் கற்பகப்பூவில் எழு
செந்தேன்கலந்த கடலே

தருவான கற்பகச்சோலையே யெல்லாம்
தரும் பெரிய பதுமநிதியே
சங்கநிதியே உண்ணவுண்ணத் தெவிட்டாத
தண்ணமிர்தின் அதிமதுரமே

கருவூலமேயென்று உனைப்பாடி உருகஅருள்
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரியகுண மேருவே அருட்
கருணாநிதிக்கடவுளே. 2

உன் ஒரு கையிற்கொம்பு வெள்ளியங்கயிலையாம்
ஒரு கனக கிம்புரிக்கொம்
புயர்மேரு கிரியாகுமேனி செவ்வானமாம்
ஓங்குகங்கணம் அனந்தன்

வன்னிரவி சந்திரன் திருநயனம் ஏழெனும்
மகாசலதிகள் மும்மதம்
வளர்சண்ட மாருதம் செவிமாருதம் சக்ர
வாளகிரி நீள் துதிக்கை

பன்னுநான் மறை சிலம்பு ஓங்குகாலாக்கினி
பரந்தநற் கோபாக்கினி
பரிபாகரைக்கொண்டு குற்றேவல் கொள்கின்ற
பரப்பிரம மத்தகஜஙீ

கன்னெஞ்சன் என்மலக்காட்டை முரியாதது என்
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரியகுண மேருவே அருட்
கருணாநிதிக் கடவுளே. 3

குஞ்சரக் கன்றுநீ ஒழியாமல் நிற்கின்ற
கூடம்என் இதயவெளியாங்
குழந்தைவடி வாம்இளைய பன்னிருகை மழகளிறு
கூடவிளை யாடி நிற்க

அஞ்சுதொழில் உனது விளையாட்டு ஆகமதசலம்
அருட்கிரியை ஞானம்இச்சை
ஆக ஐந்தொழில் நடத்தகராதி நாதஒலி
ஆனைஉன் பெருமுழக்காம்

நெஞ்சில் நிறைவாந் திரோதான கோபத்தைநீ
நீக்கியென் தற்போதமாம்
நிறைகவளம் அருள்வாயினால் உண்டுகர்ச்சித்து
நீ மகிழ்வதென்றோ சொலாய்

கஞ்சன் முதலோர்தொழக் கங்கைநதி சூழ்பெரிய
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரியகுண மேருவே அருட்
கருணைநிதிக் கடவுளே. 4

தேவர்கணபதி வித்தியாதரர்கள் கணபதி
சிவயோகமுனி கணபதி
சித்தர் கணபதி பூதர்கணபதி ஞானமே
திகழ் இராக்கதர் கணபதி
கேவலம் இல்அசுரர் கணபதி கருடர் கணபதி
கிளர்தயித்தியர் கணபதி
கின்னரர்கள் கணபதி கிம்புருடர்கணபதி
கெந்தருவர் தம்கணபதி
பாவமறுபோக பூமியர்கள் கணபதி அம்
பரத்தில் வாசிகள் கணபதி
பாசர் கணபதி உடுக்கணபதி இயக்கர் கண
பதிஉரகர்தம் கணபதி
காவல் என்றுரை செய்பதினெண் கணபதிப்பெரிய
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரியகுண மேருவே அருட்
கருணைநிதிக் கடவுளே. 5

இருவருக்கு அரிதாகி எங்கும் நிறைதந்தையாம்
ஏகபரி பூரணர்க்கும்
இந்த்ராதி முப்பத்து முக்கோடி தேவர்க்கும்
எண்ணிலா முனிவருக்கும்

தருமணிக ளொளிவிடும் கணபணுடவி உரக
சயனத்து மாமனுர்க்கும்
சதுரானனர்க்கும் எண்டிசை நாயகர்க்கும் வளர்
சகல புவனங்களுக்கும்

ஒரு பூரணப்பிரமமே என்றுனைத் துதித்
துவப்போடு தங்கள் சென்னி
உபயகரமேற்கொண்டு குட்டியே நற்ருெழில்கள்
ஒன்று செயல்வேண்டுமென்முல்

கருதரியநின்புகழை எளியனேன் அறிவனோ
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரியகுணமேருவே அருட்
கருணை நிதிக்கடவுளே, 6

அண்ணல் உன் அவிமுத்தம் அகலாதிருந்தும்அரு
ளாங் கங்கைநதி படிந்தும்
ஐங்கரத்தெய்வம் உன் அடித்தாமரைப்பூவை
அர்ச்சித் திருந்தும் அடியேன்

மண்ணுதி நாதாந்தமான தேகாதிப்ர
பஞ்சமெல்லாம் மறந்தே
மகோதய மனேலயானந்த வாழ்வடையாமல்
மாளுமெய்ப் பிணியில் உற்றும்

எண்ணுத எண்ணங்கள் எண்ணியும் பகலிலே
இருளின் மூழ்கிக் கிடந்தும்
யான் என்றும் எனதென்றும் உன்னிலையைநாடியும்
ஏங்கியிடர் படல்நீதியோ

கண்ணுளனே உனைக் கண்டு குறைதீர அருள்
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும்பெரிய குணமேருவே அருட்
கருணைநிதிக் கடவுளே. 7

உன்னுருவையும் உனக்கிளையவன துருவையும்
உன்றந்தையருளுருவையும்
உன்னன்னை உருவையும் உன்னடியர் உருவையும்
ஒன்றென்பன் இந்தவுருவை
இன்னம் என்கண்கொண்டு கண்டிடவும் மெய்யடியர்
ஏவல் செய்தே திரியவும்
இணையடிகள் என்சென்னிவைத்திடவும் அருள்பெறவும்
இன்பவாரிதிமூழ்கவும்
அன்னைபிள்ளையை ஆதரிப்பது எனவே என்னை
ஆதரித்து ஏவல் கொளவும்
ஆசைவைத்தேன் இந்த ஆக்கைவிழுமுனம் இந்த
ஆசைதீரப்பெறுவனோ
கன்னெஞ்சன் என்முன்பு நீவருவது எந்நாள்
காசிவாழ்துண்டிராச
கணபதியெனும்பெரிய குணமேருவே அருட்
கருணாநிதிக்கடவுளே. 8

இரவில்லை பகலில்லை இலாபதேசங்களில்லை
இன்பதுன் பங்களில்லை
யானில்லை எனதில்லை இதமில்லை அகிதமில்லை
எண்டிசைகள் காலமில்லை
வரவில்லை போக்கில்லை பாவபுண்ணியம் இல்லை
மரணம் பிறப்புமில்லை
மண்ணாதி ஆசையில்லை மனமானபேயில்லை
மலமாயையில்லை என்று
பரவுபட்டப்பகலெனும்பெரிய உன்வடிவு
பார்த்திருக்கின்ற அடியார்
பாததாமரைபரவி நானும் அவர் போல் உனைப்
பார்க்கவரம் ஒன்று அருளுவாய்
கரதலாமலகம் எனமுத்தியருள் கங்கைசூழ்
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும்பெரிய குணமேருவே அருட்
கருணாநிதிக்கடவுளே. 9

தேகபாரம் பொறுக்கப் படுகுதில்லை யென்
செய்குவேன் தெய்வமே உன்
திருவடித் தாமரையை நம்பினேன் நீ அலால்
திக்குவேறில்லை உலகில்

ஆகம் ஆகாதுசியென்று அருவருத்தபேர்க்கு
அருள்வேன் எனுஞ் சொல் பொய்யோ
ஐயஉனை மறவாத ஆநந்த வாழ்வன்றி
அமரர் வாழ்வும் விரும்பேன்

பாகமேயில்லாத நான்வாரணாசியில்
பரவும் ஒரு மணிகர்ணிகைப்
பாகீரதிக்குளே நாயாகமாக மெய்ப்
பாரம் விடல் அருளளிப்பாய்

காகமாதிய சராசரம் எலாம் கதிபெறும்
காசிவாழ் துண்டிராச
கணபதியெனும் பெரியகுணமேருவே அருட்
கருணாநிதிக்கடவுளே. 10

காசித்துண்டிவிநாயகர் திருவருட்பா முற்றிற்று

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
சிவசண்முகன் துணை

தருமபுர ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
அருளிய

காசிக்கதிர்காமவேலர்

திருவருட்பா

உலகடங்கலும் அருண வெயில் உமிழும்உபயரவி
ஒருகோடி நிகர்மேனியும்
உமைமுலைப்பா லொழுகு கடைவாயும் இளநகையும்
உச்சியுந்திகழ்கொண்டையும்

திலதமும் சுட்டியும் திருநீறும் அழகுபொழி
திருநுதலும் அருண்மாரிசேர்
திருநயனமும் கருணை வதனமும் அம்மைதரு
திருமுலைப்பாற்கிண்ணமும்

இலகுசெங்கைம்மலரும் அஞ்சலெனும் ஒருகரமும்
இருசெவியும் உபயரவியர்
இருகுண்டலங்களும் பாததாமரைகளும்
இலங்கும் குழந்தைவடிவாய்க்

கலகலெனவேசிலம்பு அடியனேன் காணநீ
காசிதனில் ஓடிவருவாய்
கங்கையுமைபாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக் கடவுளே. 1

தற்பரஞ்சோதியே பூரணப்பிரமமே
சதுர்முகப்பிரமாதியோர்
சதுர்மறையும் அடிமுடிகள் காணமலேதேடு
சச்சிதானந்தசிவமே

அற்புதானந்த அருள்அமுதமழைமேகமே
அநந்தகல்யாணகுணமாம்.
அகண்டபர வெளியே என்னுயிருக்குமுயிரே
அருட்கருணைமேருகிரியே
சிற்பரந்தந்த சிந்தாமணிக்குவியலே
செந்தேன்நெடுஞ்சலதியே
தெள்ளமுதமே ஜன்மமாற்றுதற் கடியார்கள்
தேடவரும் அருமருந்தே
கற்பகச்சோலையே என்று அடியனேனுனைக்
கவிமாரி சொரிய அருள்வாய்
கங்கை உமைபாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக்கடவுளே. 2

சகலபுவனம்பணி சதாசிவற்கோர்குடிலை
தான்மொழிந் தருள்குருக்கள்
சதுர்முகப்பிரமாவை முடியினிற் குட்டியே
தான்சிறையிடும் குருக்கள்
அகிலசகதண்டகோடிகள் எலாம்பின்படைத்
தருள்தந்திடும் குருக்கள்
அகத்தியமகாமுனிக்கு அருள்செய்து சடைமுடியில்
அடிவைத்திடும் குருக்கள்
பகருமுப்பத்து முக்கோடி வானவர்மகுட
பந்திபணியும் குருக்கள்
பதினெண்புராணமும் முனிவர் பணிசெய்யப்
பகர்ந்திடுகுருக்கள் இனிநான்
ககனமாருதம் என்ன அத்துவிதமாகக்
கலந்திடச்செய்தல் அரிதோ
கங்கைஉமைபாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக் கடவுளே. 3

திருமகள் உகந்தநெடு மால்சக்கரப்படை
தேவேந்திரன் வச்சிரம்
சிவன்மழுப்படைஊழி அனலோடுகாற்று எனச்
செட்டிநீவிட்டநெடுவேல்

ஒருகணத்தே வடவையும் மதியும் இரவியும்
ஒளிக்க ஒருகோடியாகி
உக்ரப்ரசண்டரவி என ஓடிஅண்டங்கள்
ஓராயிரத்தெட்டினும்
வருசூரபன்மனும் வஞ்ச க்ரவுஞ்சகிரி
வயிறெருடுபெருந் தாரகன்
மார்பைப்பிளந்தது என்றால் அடியனேன்மிக
வருந்தவே நின்றுநோய்செய்
கருமமலையைப்பொடி படுத்தல் அரிதோஉனது
கைவேலினுக்கு அருளுவாய்
கங்கை உமைபாலனே கதிர்காம வேலனே
கந்தசாமிக்கடவுளே. 4

அரிமருக சரவணபவாஎனும் அடியவர்
அச்சந்தவிர்த் தருள்மயில்
ஆயிரத்தெட்டு அண்ட முட்டையெனவேயணைத்து
அசுரரைக் கொன்றிடுமயில்
பெரியநவகண்டமொடு மேருகிரிகுலகிரி
பெருங்கடல்கள் உள்ளடக்கும்
பெருஞ்சக்ரவாளகிரி அரைநொடியினுக்குளே
பிரதட்சணம் செயுமயில்
விரிபணுடைவி உரகமும் கோடியண்டமும்
விழுங்கியே பின்உமிழ்மயில்
வேலன்நீ யேறுமயில் வெகு பராக்கிரமம்எனில்
வினையனேன் மாயைஎன்னும்
கரியபாம்பைப்பொடி படுத்தல் அரிதோஉன்
கலாபமயிலுக்கு அருளுவாய்
கங்கைஉமைபாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக் கடவுளே. 5

தருங்கற்பகாடவியில் இந்த்ராதிவானவர்கள்
தம்அச் சமாங்கங்குலும்
சக்ராயுதக்கடவுள் அச்சமிகுகங்குலும்
சதுர்முகத்தோன் அச்சமாம்

பெருங்கங்குலும் அவுணராங்கங்குலும் துயர்செய்
பெரிய ப்ரபஞ்சத்துளே
பிரியாதகங்குலும் உன் அடியாராஞேர்கள்
பிறவிக்குமூலமான
அருங்கங்குலும் விடியவே கடுங்குரலைவிடும்
அதிபலபராக் கிரமமாம்
அஞ்சிறைச்சேவல்உன் கைத்துவசமாமென்னில்
அடியன் ஆணவ திமிரமாம்
கருங்கங்குல்விடியவே கூவுதற்கு அரிதோசொல்
காலாயுதத் தினுக்குக்
கங்கை உமைபாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக் கடவுளே. 6

ஆருக்குவந்திடு விருந்தோ இது என்றுநீ
அறியாது போலிருந்தால்
அடியேனை அஞ்சலென் பார்கள் ஆர் இங்கு உனக்கு
அடிமைமேல் அன்பில்லையோ
ஊருக்குவந்தவள் ஒருத்திபிள்ளைக்குமுலை
ஊட்டிடுவளோ சொல்லுவாய்
உனக்கடிமையாகியும் உன்புகழ்பாடியும் என்
உயிர்வருந்திடல் நீதியோ
பாருக்குளேகலி யுகத்திலே கண்கண்ட
பரதெய்வமாம் என்றுஉனைப்
பாருளோர் மெச்சுமது மெய்யாகும் இப்போது
பாவியேற்கு அருள்புரிந்தால்
காருக்கும் அதிக வரமழைபொழியும் ஈராறு
கரகமல சர்வஞ்ஞனே
கங்கையுமைபாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக் கடவுளே. 7

அஞ்சுமுகன் உன்பிதா இமயமாமலை உதவும்
அமலையின் அன்னையாகும்
அண்ணன்முன் கயமுகத்து அசுரன் உயிர்வீட்டியருள்
ஐங்கரக் கடவுள்நெடிய

மஞ்சுவண்ண்மாமன் உன் மைத்துனன் மன்மதன்
மலரின் அயன் உன்சிட்டனும்
வானவர்கள்உன் அடியார் ஆயிரத்தெட்டண்ட
மன்னவன் உன்வாகனம்
கொஞ்சம் அடியேனையுன் அடிமையென்று ஒதிடக்
குறுமுனிக்குத் தமிழ் அருள்
குமரகுரு பரசாமி உன்னடியர் அடியர்தாட்
குற்றேவல்செய்ய அருள்வாய்
கஞ்சமலர் முகவள்ளி மணவாள எங்கோன்
கவின்தெய்வ யானைகணவா
கங்கையுமை பாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக் கடவுளே. 8

உன்மலர்ப் பாதத்தின் மகிமையும் மேன்மையும்
உமா பதி புயங்களறியும்
ஓங்குகலை ஞானமும் ஆறுகுணபேதமும்
ஒருநான் முகத்துவேதன்
றன்முடியறிந்திடும் கரபலமும் வீரமும்
தகுசூரன் அங்கை அறியும்
தருகடைக்கண் அருளின் ஞானமும் தீட்சையும்
தமிழ்முனிவன் நோக்கம்அறியும்
மன்மதன்அரு அறியும் நித்தியமும் அழகுமெய்
வாழ்வும் ஆனந்தசுகமும்
மகிழ்வள்ளி தெய்வயானையும் அறிவர்அடியர்உன்
மகிமையெல்லாம் அறிவர்என்
கன்மனமறிந்து உருகமாட்டுமோ அறியக்
கடாட்சம் வைத்தருள்முருகனே
கங்கை உமைபாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக் கடவுளே 9

அடையாள மாம்பரங் குன்றுமுதல் ஆறுபதி
அம்பலம் காசிமலையும்
அணிகோணமாமலை ஆதிகேதீச்சரம்
அருள்சம்பு குண்டம் ஆதி

இடைவிடாதேநின்றந் தோம்ஆகிலும்புவி
யெறும்பு ஆதிகாசிமேவி
யிறந்ததென்ருல் முத்தியெய்தும் என்றருள்செய்த
எந்தைமொழி நம்புதலினுல்

திடமுடைய பத்தியில்லாத எளியேனும்
சிவாநந்த நாதனென்னும்
சிவமகாவாக்கியம் சென்னிமேல் சூட்டலால்
சிவகாசிதனில் உறைதலால்

கடையேனையும் அடிமையாக்கத் தரும்தரும்
கருணாநிதித் தெய்வமே
கங்கையுமைபாலனே கதிர்காமவேலனே
கந்தசாமிக் கடவுளே. 10

கதிர்காமவேலவர் திருவருட்பா முற்றிற்று

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முத்துக்குமாரசுவாமி துணை

தருமபுர ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளிய

புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுவரர்கோயில்

செல்வமுத்துக்குமாரசாமி

திருவருட்பா

மதிவதனம் ஆட இரு காதின்நவ ரத்னமணி
மகரகுண் டலமாட நாள்
மலர்புண்ட ரீகவிழி யாட அருளாடமன
மகிழ்மந்த காசமாடக்

கதிருதயம் ஆயிரம் கோடியென வேயிலகு
காருண்ய மேனி யாடக்
கனவச்ர புயவலயம் ஆடவண் டாடக்
கடப்பமலர் மாலையாட

விதமணி இழைத்தபரி புரமாடு சரணார
விந்தங்களாட நீள் கை
வெற்றிவேல் ஆடமயில் ஆடஎன் கண்முன்நீ
விளையாடவோடி வருவாய்

முதுமறைகள் ஆகம முழங்குபுள் ளூரனே
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குருவே பால
முத்துக் குமார குருவே. 1

பொன்னெடுங் குன்றே அனந்தசந் த்ரோதயம்
போலவரு ஞானவொளியே
பெரியயிருளை நீக்கியிடு மெய்யிரவி உதயமே
பூரணானந்தசுகமே
அன்னையினும் அன்புமிகும் அன்புருவ மேஇருவர்
அறிவரியஒருபிரமமே
அருமருந்தே அமுத சலதியே யடியார்
அறிந்த கருவூலமே என்று
உன்னையே பாடிநின்று ஆடியிரு கண்ணில்நீர்
ஓடரோமஞ் சிலிர்ப்ப
உள்ளங் கரைந்துருக அடியனேன் ஆனந்த
வுல்லாசம் ஆவதென்றோ
முன்னை வினை தீர்த்தருளு மன்னனே புள்ளூரின்
முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக் குமார குருவே. 2

அடியருள மண்டபமும் ஐயர்செஞ் சடிலமும்
அன்னையர்கள் இருவர்வயிறும்
அம்புயா சனன்விழியும் இந்திராதிபர்தலையும்
அருமறை அனந்தமுகமும்
படியுண்ட மால்புயமும் நெடியமயின் முதுகும்
பரங்குன்று பழனிசெந்தூர்ப்
பலதலமும் எந்நேரம் விளையாடும் உனதுபய
பரிபுரபதாம்புயங்கள்
குடிகொண்ட வஞ்சகம் பொய்கபட நாடகம்
கொலைகளவு காமமெல்லாம்
கொள்ளைகொளும் என்னுடைய கள்ள இதயத்திலே
கூசாமல் என்றுவருமோ
முடியினால் அமரர்கள் வணங்குபுள் ளூரனே
முக்கட்குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குருவேபால
முத்துக் குமார குருவே. 3

அன்னைசொற்கு ஒருசெவி ஐயர்சொற்கு ஒருசெவி
அம்மான் துதிக்கு ஒருசெவி
ஆனைசொற்கு ஒருசெவி வீரர் சொற்குஒருசெவி
அயன் துதிக்கு ஒருசெவிவிண்ணோர்
மன்னர்சொற்கு ஒருசெவி வள்ளிசொற்கு ஒருசெவி
வான்வனிதை சொற்கு ஒருசெவி
மறைதுதிக்கு ஒருசெவி அடியர்சொற்கு ஒருசெவி
வல்லசுரர் சொற்கு ஒருசெவி
பன்னிரண்டுங் கொடுத்து என்சொல்கேளாமல்
பராமுகமதா யிருந்தால்
பாவியேன் மெலிவுகுறை எவர்செவியிலேற்றிப்
படுந்துயர் களைந்துகொள்வேன்
முன்னம்மறை நாலும்வந் துன்னு புள்ளூரனே
முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குருவேபால
முத்துக் குமார குருவே. 4

உன்புவனம் என்புவனம் உன்வடிவம் என்வடிவம்
உன்பொறிகள் எனதுபொறிகள்
உன்கரணம் என்கரணம் உன்மொழிகள் என்மொழிகள்
உன்விடயம் என்விடயமென்று
அன்பினுடனின்று எனையுன் அன்பர்பெறும் இன்பவடி
வாகஅருள் ஏகமுதலே
அண்டருறை யண்டநவ கண்டமும் உவந்தருளும்
அம்பிகைத்ரி யம்பகிருந்து
இன்பவமு தேவருக எங்கள்மக னேவருக
எங்களுயிரே வருகஇங்கு
எங்கள்தன மேவருக எங்களரசே வருக
எங்கண்மணி வருகஎனவே
முன்புவந் தவருடன் விளையாடு புள்ளூர
முக்கட்குருக்கள் குருவே
முத்தர்குருவே யோகசித்தர்குருவேபால
முத்துக் குமார குருவே. 5

சந்த்ரன்ஈது என்னவும் பெற்றதாயென்னவும்
தயையொடு குளிர்ந்தமுகமும்
தழைந்ததிருவருண்மழை பொழிந்து மலவெப்பம்
தணிக்குங்க்ருபைப் பார்வையும்
அந்தமிலாச் சச்சிதானந்த மாம்வடிவும்
அழகொழுகுபுன் சிரிப்பும்
அத்தந் தரித்திடுசின் முத்திரையும் நின்றிலகு
அருட் குரவனுகியிங்கே
வந்திருந்து உன்னடியை என்முடியில் வைத்துலக
வாதனை எலாம் இறக்க
மாளாத பேரின்ப வாரியினில் வாழ அருள்
வாலாம்பிகைக்கு மகனே
முந்திரா மன்பணிய வந்துபுள் ளூரில்வாழ்
முக்கட் குருக்கள் குருவே
மூத்தர்குரு வேயோக சித்தர்குருவேபால
முத்துக் குமார குருவே 6

அருவங்கள் நாலன்றி உருவங்கள் நாலன்றி
அருவுருவ மானதன்றி
அண்டபகி ரண்டநவ கண்டங்க ளன்றிமேல்
அழியாத கரணமன்றி
உருவங்கள் அன்றிஆங் குளபோக மன்றிஉயிர்
தங்குமுடலங்கள் அன்றி
உளதன்றி இலதன்றிஉட்புறம்பு அன்றிமேல்
உண்டாகிஅழிவதன்றி
நிருமலநிராதார நிர்க்குணசிதாகாச
நித்யசகசானந்தமாம்
நின்சரணே யேநினைவது அல்லாது என்மனம்
நினைக்குமொருபொருள் வேறிலை
முருகுவிரி சோலைமலர் பெருகு புள்ளூரில்வாழ்
முக்கட்குருக்கள் குருவே
மூத்தர் குருவே யோக சித்தர்குருவேபால
முத்துக் குமார குருவே. 7

உருவங்கள் நாலும்நீ யருவங்கள் நாலும்நீ
உபயமொன்றான தும்நீ
உலகங்கள் எங்கும்வரு கரணங்கள் யாவும்நீ
உருவங்கள் எல்லாமும்நீ
வருபெரிய போகங்கள் யாவும்நீ மண்ணும்நீ
வாரிமுத லொண்புனலும்நீ
வடவைமுத லனலும்நீ வாயும்நீ வானும்நீ
மதியும்நீ மார்த்தாண்டன்நீ
அருவங்க ளாமுயிர்கள் யாவும்நீ இன்பதுன்
பாவதும்நீ என்பதை
அடியன்எந் நேரமுங் கண்டுகண்டுல்லாச
ஆனந்தம் ஆவதென்றோ
முருகசரவணபவா பெரியபுள்ளூரனே
முக்கட்குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக் குமார குருவே. 8

பாகம்வரு நிமிடத்தில் அகிலசக மெல்லாம்
படைத்துத் திதித்தழித்துப்
பரமசக சானந்த சலதிவிளை யாடவிடு
பரமசிவ மாம்உன்னைநான்
ஏகதேசத்தில்அய னைப்புடைத்துப் படைத்
தெதிர்சூர பத்மனைக் கொன்று
இந்த்ராதியோரை ரட்சித்திருந் தாயென்று
இயம்புவது பெரியபுகழோ
மாகமுறை தேவர்க்குமனிதர்க்கு முனிவர்க்கு
மண்ணுண்டை யாம்நீற்றினால்
வறுமையொடு தேகத்தில் வருபிணிகள் எல்லாமும்
மரணசன னங்களாகும்
மோகநோயுந்தவிர அருளுதவு புள்ளூர
முக்கட்குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குருவே பால
முத்துக் குமார குருவே. 9

எள்ளளவில் ஆயிரத் தொன்றளவு பத்திஉன்
இணையடியில் வைத்தபேர்கட்கு
இந்த்ராதி பதமும்உயர் சந்த்ர சூரியர்பதமும்
இமையவர்கள் அரியபதமும்

தெள்ளுபுகழ் நான்முகக் கடவுள் பதமும்நெடிய
செங்கண்மால் பதமும் எல்லாச்
செல்வமும் வருமென்று சொல்லவும் கேட்டும்உன்
திருவடிக் கன்பிலாத

கள்ளமா னிடரையொரு காசும் பெறுதசிக்
கந்தையென் றேவிட்டுநான்
கற்றமெய் யடியவர்கள் குற்றேவல் செய்யக்
கடாட்சம்வைத்து அருள்வேலவா

முள்ளுடைய தாள்முளரி கள்ளுதவு புள்ளூர
முக்கட்குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குருவேபால
முத்துக் குமார குருவே. 10

முத்துக்குமாரசாமி திருவருட்பா முற்றிற்று

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

விசுவேசர் துணை

தருமபுர ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளிய

காசி விசுவநாதர்

திருவருட்பா

சீரார்பெருந்தடங் கண்ணிஒரு பாகமும்
சேயுறையும் நின்கவானும்
திருமுகத்தாமரையின் அழகொழுகு கருணையும்
சிறுநகை நிலாவெறிப்பும்

நீரார்சடாமகுட மும்பிறையும் வெண்பொடி
நிறைந்த செம் பவளவடிவும்
நீண்டசங் கொடுதோடு பூண்ட இரு காதும்மது
நெட்டிதழ் விரிக்கும் இதழித்

தாராருமார்பும் த்ரியம் பகமும் மழுமான்
தரித்தசெங்கர மலர்களும்
சரணம்புயங்களும் தனிவெள்ளை விடையின்மேல்
தமியனேன் காணவருவாய்

காராருமண்டமுகடு ஒன்றி யெங்கும்பரவு
கங்கைநதி சூழ்ந்திலங்கும்
காசிவிசுவேசனும் தேஜோசொருபமே
கருணைநிதித் தெய்வமே. 1

பெற்றதாயும் பிதாவும் பிதாவைப்பெற்ற
பெரியவனும் உரியதாயும்

பிறவிப்பெரும்பிணிக்கு ஒருமருந்தும் பெரிய
பிழைகளெல்லாம் பொறுக்கும்

கொற்றவனும் நற்றவப் பயனும் இகபரமும்
கொடுத்திடும் பெருவள்ளலும்
குறைவற்ற செல்வமும் நிறைவுற்ற மெய்ஞ்ஞான
குருவும் என்குலதெய்வமும்

மற்றுள்ளசித்தியும் சுற்றமும் நீயென்று
வந்தடைந்தேனை அருளாம்
மலர்க்கரங்கொண்டுபர மானந்தஅமுதூட்டி
மதலையெனவே வளர்ப்பாய்

கற்றவர்கள்உள்ளத்தில் உற்றஅருணேசனே
கைலாசகிரி வாசனே
காசிவிசுவேசனும் தேஜோசொரூபமே
கருணாநிதித் தெய்வமே. 2

பொன்னாசை யென்கிற பேய்க்கும் மயல்செய்கின்ற
புவியாசையாம் புலிக்கும்
பூவையர்கள் ஆசையெனும் ஆவியொழியச்செயும்
புலைவேடர்வெங்கணைக்கும்

என்னுவியே ஓர் இலக்காக வைத்தாய்இ
தென்னவிளையாட்டு ஐயனே
ஏழைபங்காளன்நீ என்னென்று சொல்வதுஇங்கு
ஏழையடியேன் தவிரவோ

முன்னாளில் ஒருமதுரை நகரினில் பன்றிக்கு
முலைகொடுத்தவன் அல்லையோ
முருகவேளைப் பெற்ற தந்தைஅலையோ பெரிய
மூதுலகில் அடியார்மனக்

கல்நார்உரித்து உயிரை வாழையின்கனிசெயும்
கருணைப்ரவாகன் அலையோ
காசிவிசுவேசனும் தேஜோசொரூபமே
கருணாநிதித்தெய்வமே. 3

கூற்றின் இடர் மாற்றவே அவிமுத்தம் என்றோது
கோநகரம் வந்தடைந்தேன்
கூட்டைஉயிர் விடுகாலம் நாட்டுமணிகர்ணிகைக்
குலாவுதீரம்சேரவும்

ஏற்றின்புறத்து உன்னிடப்புறம் பிரியாத
இமயாசலம் பயந்த
என்அன்னை முன்னு தன்பிள்ளை விளையாடவும்
இளையவனை மடியில்வைத்தே

ஊற்றெடுக்கும் கருணை முலையமுதம் ஒருகைகொண்டு
ஊட்டிஎனை ஒருபிள்ளையாய்
ஒருகரத்தால் தடவி அருள்நயனம்வைத்தெடுத்து
உத்தரியம் வீசுதென்றற்

காற்றினுல்என் களையை மாற்றிடவும் நான்கண்டு
கண்குளிர நின்கண்வைப்பாய்
காசிவிசு வேசனும் தேஜோசொருபமே
கருணாநிதித்தெய்வமே. 4

பண்டுநான்வாரணு சிப்பதியின் உடல் விட்ட
பறவைமச கம்கழுகுநான்
பன்றிநான் ஒட்டகங் குதிரைநான் மும்மதம்
பாயவரு களியானைநான்

மண்டிரு மலத்தில் புழுத்த புழுநான் நீரில்
வாளைநான் வரியரவுநான்
மரம்நான் எறும்புநான் என்றொருவருக்கொருவர்
மனமகிழ்ந்தே குலாவும்

அண்டர்தொழவே கயிலை அமலநின் வடிவான
அருளுருத்திர நாயன்மார்
அவர்களுடன் எக்காலம் அடியனேன் மனிதனென்று
அகமகிழும்நாள் எந்நாள்

கண்டவிடம் எங்கெங்கு நின்றபரமானந்த
கங்கைநாயக கங்கைசூழ்

காசி விசுவேசனும் தேஜோ சொரூபமே
கருணாநிதித் தெய்வமே, 5

சரியை கிரியா யோக ஞானத்தினுன் முத்தி
சாதிக்கநூல்கள் அந்தத்
தவமேதும் இன்றியே அவமேசெய்தாலும்அத்
தமோமய சராசரங்கள்

நரர்பயிலும் வாரணாசியில் உடலம்விடில்இந்த
நன்மை ஒன்றைக்கொண்டுமே
நால்தடந்தோளும் த்ரியம்பகமும்ஓர்வித்த
நாரிபாகமும் உரகமார்

கிரணசந்திரசடா மகுடமும் பிரமர்தலை
கிண்கிணிகள் என்றுகட்டிக்
கிரீடகோடிகள் வந்து பணிய இந்த்ராதியோர்
கேட்டவரம் உதவுபதமும்

கரதலாமலகம்எனவே பெறத் தரும் உனது
கருணைதனை என்னசொல்வேன்
காசிவிசுவேசனும் தேஜோசொரூபமே
கருணாநிதித்தெய்வமே, 6

இன்னம் எத்தனைநாள் இருக்குமோ காயமென்று
ஏங்குமே நெஞ்சம் ஐயோ
இடர்உடலில் நான்படுவது எந்தை நீயல்லாமல்
இவ்வுலகில் யாவர்அறிவார்

என்னை உன்னடியார் குழாத்துடன் சேர்ப்பதற்கு
இன்னம்எந் நாட்செல்லுமோ
இன்றுவந்தருளுவாய் நாளைவந்தருளுவாய்
என்றுவழி பார்த்திருப்பேன்

அன்னையே என்னைவந்து அஞ்சலென் றுண்டுமெய்
அடியரொடு கூட்டுவாயென்று
அனுதினமும் அழுதழுது மெலிவதல்லாமல் இங்கு
அடியனேன் செய்வதுஎன்றோ

கன்னலே தேனே கனிந்தகனியே பெரிய
கைவல்யமே கங்கைவாழ்
காசி விசுவேசனும் தேஜோசொரூபமே
கருணாநிதித் தெய்வமே. 7

அங்கண்வானத்து அமரர் பிறவிப்பெரும்பிணிக்கு
அருமருந்தெனவும் அயன்மால்
ஆதியோர் அரகரா இந்த நதி யற்புதம்
அகிலத்துள் இல்லையெனவும்

எங்கள்மல திமிரபடலம் கிழித் தோட்டுதற்கு
இரவிசதகோடி யெனவும்
இந்த்ரசாலப்பகட்டாகும் ப்ரபஞ்சமொடு
இரண்டுவித மாயையென்னும்

பங்கமுற்றும் கழுவ வருஞானஆனந்த
பரிசுத்த சலதியெனவும்
பரமகல்யாணகுண பரமசிவசத்தியொடு
பாகீரதிப்பெயர் புனை

கங்கைநதியைப் புவியில் அன்னையென வைத்தநின்
கருணைதனை என்னசொல்வேன்
காசிவிசுவேசனும் தேஜோசொரூபமே
கருணாநிதித்தெய்வமே. 8

சரணம் உன்சரணமல்லால் இங்குவேறில்லை
தங்கிடுஞ் சர்வஜீவ
தயாபரனெனக்கருள்வை என்று உன்னைநம்பிஉன்
சந்நிதியை வந்தடைந்தேன்

மரணகாலந் தனின் மணிகர்ணிகைத் துறையில்
வந்து சேரச்செய்துநீ
மால்வெள்ளைவிடையின்மேல்வேலனுமையவளொடுமுன்
வந்தென் வலச்செவியிலே

பரமவுபதேசம்வைத்து ஆவிபரமானந்த
பரமசலதியில் மூழ்கிடப்

பாழானகாயம் மெய்ப் பாகீரதிப்புனல்
படிந்திட வரம்தந்தருள்
கரணங் கடந்தமுழு முதலே சிதாகாச
கனகசபை நடராஜனே
காசிவிசுவேசனும் தேஜோசொரூபமே
கருணாநிதித் தெய்வமே. 9

மெய்யென்று பெயர்பெற்ற பொய்யான என்னுடலம்
விடுகாலம் நானறியவும்
விமலமணிகர்ணிகைத் துறைவந்து சேரவும்
மெய்க்கங்கை நதிமூழ்கவும்
தூய்யவெண்ணீறு அங்கம் எங்குமே பூசவும்
சுத்தகண்டிகை பூணவும்
தொண்டு செயும்அடியார்கள்தோத்திரம் சொல்லியே
சூழ்ந்துகொண்டே நிற்கவும்
ஐயந்நேரத்தில் உந்தாமல்நிற்கவும்
ஐம்பொறிகள்நெறி நிற்கவும்
அறிவுபர மானந்த சின்மயாகாச நின்
அடியிணைகள் சிந்திக்கவும்
கைகள்தொழ வாய் அஞ்செழுத்து உச்சரிக்கக்
கடாட்சம் வைத்தருள் ஐயனே
காசிவிசுவேசனும் தேஜோசொரூபமே
கருணாநிதித் தெய்வமே, 10

காசிவிசுவநாதர் திருவருட்பா முற்றிற்று

உ

திருச்சிற்றம்பலம்

தருமபுர ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளிய

சிதம்பர நடேசர்

திருவருட்பா

காப்பு

சீர்மருவு தில்லைச் சிதம்பரநாதன் மீது
பேர்மருவு நற்பதிகம் பேசுவதற்கு - ஏர்மருவு
கற்பகவேல் விட்டமலர்க் கையன்முன்னோன் யானைமுகக்
கற்பகவி நாயகன்றுள் காப்பு.

விரித்தசெஞ்சடை ஆட வதனசந்திரன் ஆட
விரிகமல நயனம் ஆட
வெண்முறுவல்நிலவு ஆட நண்ணுதமருகம் ஆட
வீசும்ஒரு செங்கைஆடத்

தரித்தபுலி அதள்ஆட அபயகரம் ஆடஇரு
தங்குதோடு ஊசல் ஆடத்
தாங்குநூல் ஆட மேலோங்குநீர் ஆடஒளிர்
தண்பவள மேனி ஆட

உரித்தகரியுரி ஆட உரக கங்கணம் ஆட
உபயபரிபுரமும் ஆட
ஒருபதம் எடுத்து ஆட ஒருபதம்மிதித்து ஆட
உள்ளேமகிழ்ந்துசற்றே

சிரித்துமலைமங்கை கொண்டாட நின்றுடும் உன்
திருநடனம் என்று காண்பேன்
செகம்பணிதிகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே.

தொண்டர் ஒருநால்வர்வாய்த் தேனெழுகுதண் தமிழ்த்
தொடையல் அணியுஞ்செய்யதாள்
தொன்மறைகள் ஓயாது சந்தித்து வாழ்த்தும்
துணைத்தாள் அளக்கரும்பூ

மண்டலத்தின்பம் அற்றவர் நெஞ்சகத்தினில்
வயங்குதாள் ஏனம்அறியா
வனசமலர் ஒத்ததாள் முயலகன் தலைமீது
வைத்ததாள் அனுதினமும்வந்து

அண்டர் முனிவரர்நிறைந்து அஞ்சலித்துப் போற்றும்
அணிசிலம்பொலி நீடுதாள்
அடியனேன் கண்டு தரிசிக்க எளிதன்றுநின்
அருள்சிறிது கூருமெனிலோ

தெண்டிரைக்கு ஒப்பான ஜனனவெவ் வினையின்று
தீர்ந்துகதியடைவது அரிதோ
செகம்பணிதிகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே 2

தங்குபூதாதி நாதாந்தம் என்று எண்ணவரு
தனுகரண புவனபோகம்
சதுர்விதம் அடங்கலும்கானல் நீராகவும்
சார்வாகர் முதலாகவே

மங்கு பரசமய குருடர்க்கு இருட்டாகவும்
வளர்சைவ சம்பிரதாயம்
வந்தசித்தாந்திக ளெனும்தெரியும் விழியினோர்
மலவிருள் அநந்தகோடி

பங்கமுற்றோடி விடியவும் அவர்இதய
பங்கயம் விகசிக்கவும்
பரையாதி பஞ்ச சத்திகளெனும் கிரணம்
பரப்பியே நடனம் இடும்ஓர்

செங்கதிரவன்நீ உனைப்பரவி என்விழி
தெரிந்து தரிசிப்பது எந்நாள்

செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே. 3

அம்புவியில் அண்டந்தொடுத்து அகிலபுவனங்கள்
ஆவதே உன்னுருவமும்
அங்கங்கு உறுஞ்சரா சரமென்பதே உருவின்
அங்கமும் பொங்குஅபின்ன

சம்பந்தசிற்சத்தி என்கின்ற இச்சையொடு
சாரூப ஞானக்ரியை
தங்கும் உட்கரணமும் மங்காமலெங்குமே
தாவிடும் பசுவர்க்கமும்

நம்பும் புலன்களும் அவைக்குஅறிவு அளித்திட
நண்ணும் ஐந்தொழிலே திரு
நடமுமாய் நீநின்று நாடகஞ் செய்திடின்
நாடுமிடம்வேறு காணேன்

செம்பொன் அம்பலம் என்பது என்னுளமதாகவே
செய்து கொண்டே நடிப்பாய்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே, 4

ஒருகணக்கு இல்லாத ஆன்மவர்க்கங்களுக்
கொருகைத் தலத் தமருகம்
உடல்கரண புவனபோ கங்களை உதிப்பிக்கும்
ஓரபயகரதலம்பின்

பெருகத் திதிக்கும்ஒரு செங்கைத்தலத்து அங்கி
பேர்பெறச் சங்கரிக்கும்
பேதமற ஊன்றும்ஒரு பாதபங்கயம் அகம்
பேசத்திரோபவிக்கும்

அருளென்று தூக்கி ஆடியபாதம் மும்மலங்
களையுமற வேர்பிடுங்கி
அகண்ட பரிபூரண சிதானந்த வாரியை
அளிக்கும் உன்னருளற்புதத்

திருநடன மகிமைதனை ஆர்உள்ள படிகண்டு
தெரிசித்திருக்க வல்லார்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே. 5

பவங்களாகிய பசியினால் வாடி ஓடிப்
பறக்குமென் சிந்தைவண்டு
பரநாத பரவிந்து சிரமாக வரும்என்று
பகர்அபரவிந்து நாதம்

உவந்திடு சதாசிவன் மகேசுரன் உருத்திரன்
உலாவுமலை கடலின்நடுவே
உரகசயனத்தினரி நறைமடை யுடைத்தொழுகும்
ஒருகமலமேல் அயனெனும்

நவந்தருவிதங்கலைகள் வன்னபத மந்த்ரபுவ
நங்கள் பூதாதிவிந்து
நாதமுடிவானது ஒரு போதபரமானந்த
நடுவெளியிலே நடித்துச்

சிவந்தவுன் சரணகமலத் தேனை உண்டுண்டு
தேக்கிட்டிருப்பதெந்நாள்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே. 6

ஆயிரங்கிரணம்விடு பானு பதினாறு பத்
ததிகாரம் வந்திறந்தால்
அம்போருகத்திலுறை பிரமனுக்கோர்பகல்
அங்கவன் கோடிஅழியின்

மாயனுக்கோர்பகல் நூறுநூறாயிரம்
மாலிறந்தால் எமக்கோர்
மாத்திரைப் பேர்தேனும் இல்லையெனவேஉள
மகிழ்ந்து சற்றே நகைத்தும்

தூயநகை யெரியினாற் பிரபஞ்சம் யாவையுஞ்
சுட்டுவெண் சாம்பலாக்கிச்

கட்டசாம்பலை யெடுத்துத் தரித்துச்சருவ
சூலிய மயானத்திலோர்
சேயிழையுடன் தனித்து ஆனந்த நிர்த்தமிடு
தெய்வமிங்கு என்னையாள்வாய்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே. 7

உருவல்ல அருவல்ல உருவருவுமல்ல இங்கு
ஒருவிதத்து அறிவதல்ல
ஒன்றல இரண்டுமல உள்ளல்ல வெளியல்ல
ஒன்றினும் தோய்வதல்ல.
இருளல்ல ஒளியல்ல இலதல்ல உளதல்ல
இன்ப துன்பங்களல்ல
இலகுநற் சித்தல்ல *விலகருநிர்ச்சித்தல்ல
ஈறுமுதலுடையதல்ல
மருளுடன் பகலின்றி இரவின்றி நின்றவர்கள்
மாசற்ற மனவெளியெனும்
மாகனக சபைநடுவிலே என்றும் ஒழியா
மனோலயானந்தமயமாய்த்
தெருளென்று நின்றநின் குஞ்சிதபதத்தையென்
சிந்தைமறவாதுகண்டாய்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே. 8

சத்தி பாதாளத்தின் அப்புறத்தே ஏக
சரணபங்கய முயலகன்
சந்தொடியவே உதைத்து அண்டகோடிகளின்மேல்
சடாடவி யெலாம்விரித்துக்
கைத்தலங்களும் நிறுவி வைத்திடு புயங்களும்
கருணை வளருங்குஞ்சிதக்
கஞ்சமலரடி ஒன்றும் விஞ்செண் திசாமுகங்
களையுங் கடந்துநிற்க

* விலகரும் அசித்தல்ல என்றிருந்ததோ ?

மொய்த்த நூறுயிரங் கோடி சூரியர் சந்த்ரர்
முதலொளி பெலாமழுங்கி
மூழ்கவொரு மேனிஒளி காட்டிநின் றுடுமுன்
முடிவில்நடனம் கொஞ்சமோ

சித்தமாகிய சபையினுள்ளே யடங்கிடும்
தெய்வீக மென்னசொல்வேன்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே. 9

கைத்தல மிரண்டினுஞ் சங்கு சக்ராயுதங்
காட்டியே ரட்சிப்பதும்
கண்டகண்டங்களையெலாம் படைத்தருள் பெரிய
கமலாசனத் துறைவதும்

மத்தகய கும்பமுலை வனிதையர்கள் நடமாட
வண்டுகீதம் பாடவே
மண்டுகற்பகநிழலில் அண்டர்தொழ அரியணையில்
வாழும் இந்திரபதமுமே

எத்தனை யடைந்தாலும் அத்தனையும் வெகுதுயரம்
எனவெறுத்தே எனக்குன்
இணையில் ஆனந்தங்களைக் கண்டிருக்கமேல்
இட்டபித்து இன்னம்இன்னம்

செத்துப் பிறக்கினும் ஒருகாலும் ஒழியாது
திருவுளம் இரங்கி யருள்வாய்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே. 10

உன்னுடைய நடனத்தை உள்ளபடி ஒளியாமல்
ஒருநிமிட மாகிலுங் கண்டு
உத்தமர்கள் பெற்றிடுவர் முத்தியினை என்றென்று
உரைக்கும்மறை யுண்மையானால்

முன்வந்த சனனத்திலே எனக்குக் கண்டு
முடியக் கிடைத்ததனால்
முற்பந்தம் ஓடிவிடும் இப்பந்தம் வாராது
முடியுமுன் இப்பவத்தே

புன்மையறிவோடாகி லும்காண வருகின்ற
பொலிவினன் மேற்பிறப்பு
போனதே போவதற் கேதுசுதாதலால்
புண்ணிய மிகுந்தவிந்தச்

சென்மமன்றோ சென்மம் மெண்பத்து நான்குநூ
றுயிரஞ் சென்மத்தினும்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே, 11

நடேசர் திருவருட்பா முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

குருமூர்த்தி துணை

தருமபுர ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளிய

தக்ஷிணாமூர்த்தி

திருவருட்பா

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முறுவல் நிலவெறிப்பும்
பொலிசடா டவியும்அதில் உறைநிலா மதியும்ஒளி
புனைகுழை இலங்குகாதும்

தேங்குபர மானந்த சின்மயா காயமாம்
சித்திஅருண் முத்திரையுமேல்
சிவானுபவ நீங்கினோர் சேரஅருள் செபமாலை
சிவஞான புத்தகமும்ஓர்

வேங்கையத ளுடையும் சரற்கால மதிகோடி
வெள்ளம்என நிறை வடிவமும்
மேலான தெய்வம்நாம் அன்றிவே றில்லைஇது
மெய்யென்று எடுத்தகனலும்

ஓங்கவட ஆலடியில் உறைகின்ற தெய்வமே
உனையன்றி வேறுநினையேன்
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 1

சீராரும் நின்சரண தேஜோமயானந்த
தெரிசனங் காட்டுபகலே

தேகாதியாகும்ப்ர பஞ்சஇருளாகியே
திண்டாடும் மும்மலப்பேய்
போராடுது என்னுடன் நான்ஏழை அதனுடன்
போராட முடிவதில்லை
புலையாடல்ஒருநாள் இரண்டு நாளோ இது
பொறுக்கவும் படுவதில்லை
ஆரோடுசொல்லியென் குறைஆறுவேன் எனக்கு
அன்னையே அப்பனேஉன்
ஆறுதலையன்றிவே றில்லைநீநழுவவிடின்
அடியேன் அலைந்து போவேன்
ஒராலின்நீழலில் உறைந்துசநகாதியர்க்கு
உள்ளபடிஅருள் தெய்வமே
ஒன்றாகிஆனந்த உருவாகிஎன் னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 2

இரவிசதகோடிகள் இருட்டென்னஒளிவெயில்
எறிக்கும் ப்ரசண்டபானு
எண்ணிலாமதிவடவை என்னவே குளிர்நிலா
எழுகின்ற சந்த்ரோதயம்
அரிபிரமர்இத்திராதி செல்வம்நல்குரவென்னும்
அளவிலாப் பெரியசெல்வம்
அண்டகோடிகளை அணுஎன்றகுணமேருகிரி
அமுதை வேம்பென்ற அமுதம்
பெரியபிரமப்பிரளயம் சிறியதுளிஎன்று
பேசுங் க்ரு பாம்புராசி
பிரபஞ்சமதனிலுள தெய்வம்எல்லாமும்
பிறந்தலையும் என நகைத்தே
உருவினில்அநாதியே உற்ற சித்ரூபியாய்
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகிஆனந்த உருவாகிஎன் னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 3

தந்த்ரகலை அறிவனோ மந்த்ரகலை அறிவனோ
சாரும் உபதேச கலையில்
தந்தகயிலாச பாரம்பரியமாகவரு
சம்ப்ரதாயம் அறிவனோ

அந்தரத்துயர்மலைத் தேனினுக்கோர்முடவன்
ஆசைவைத்தது போலவே
ஐயனே நின்னருளை அடைவதற்காசைவைத்து
அடியன்முகம் வீங்கிநின்றேன்

சந்த்ரசேகர சகள நிட்கள தயாபர
சதாசிவசிதா காயமாம்
சபாநாத சுந்தர ஆனந்த கலியாணகுண
சர்வேசதேவதேவே

உந்துந்தரங்கமெறி கங்காதரா கயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகிஆனந்த வுருவாகிஎன்னுயிர்க்
குயிரான பரமசிவமே 4

பொல்லாத பாவங்கள் கோடானகோடியிப்
புவிமிசையிலோர் வடிவமாம்
புலையனேன்உனை மறந்தனுதினஞ் செய்துவரு
பொல்லாதவினை யெண்ணிலேன்

அல்லாருமலமாயை கருமங்கள் அணுகாத
அகளநிட்பிரபஞ்சமாம்
அகளங்கசுத்தநித் தியானந்தம்அனுபவ
அணுவளவும் வந்ததில்லை

நல்லார்முனணுகாத யமதூதர் கொண்டுபோய்
நரகிலே விடுவரென்று
நடுநடுங்காநின்ற துள்ளம்உனைநம்பினேன்
நம்பினேன் வடகயிலையாய்

உல்லாச பரமகுருநாதனே ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே

ஒன்றாகி ஆனந்த வுருவாகி என்னுயிர்க்
குயிரான பரமசிவமே, 5

பெரியபரமானந்த பரமசுகவாழ்விப்
பிறப்பிலே வருவதன்றிப்
பிரபஞ்ச வாழ்க்கையெல்லாமும் விட்டுதறியே
பெண்ணாசை மண்ணாசையும்
இரணியத்தாசையுஞ் சீயென்று விட்டெறிந்
தேகாந்தமாயிருந்தால்
இவ்வுலகிலிடரேதும் இல்லாமல் வருமின்பம்
யாவர்க்கும் இல்லையென்று
தெரியமறை சொல்லவும் பெரியவர்கள் சொல்லவுந்
தீரத்துறந்திராத
சிறியனிவனென்றோ பராமுகமதாகவே
தேவரீர் நின்றசெய்தி
உரியதுறவுடன் ஞானம் உதவுவதும் நீரன்றி
ஒருதெய்வம் வேறில்லையே
ஒன்றாகி ஆனந்த வுருவாகி என்உயிர்க்
குயிரான பரமசிவமே. 5

சரியைதனில் வல்லனோ கிரியைதனில் வல்லனோ
தருயோக மதில்வல்லனோ
தவமதனில் வல்லனோ உபரதியில் வல்லனோ
தருபத்தி தனில்வல்லனோ
அரிபிரமர்காணா அகண்டபூரணசச்சி
தானந்த சிவஞானமாம்
அதையுணர வல்லனோ ஆகாதபிரபஞ்சம்
அதையுணரும் வல்லமையிலே
பெரியனோ ஆயினும் மேலான அனுபவம்
பெற்றவர்கள் போலிருந்து
பெருங்கபடநாடக நடிப்பேற்கு நின்னருட்
பிரகாசமாகுமோசொல்

உரியபரமானந்த நிர்த்தனேவடகயிலே
உறைகின்ற பரதெய்வமே
ஒன்ருகிஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே 7

மோகந்தரித்தவர்கள் மாதரைக்கூடியே
மோகந்தணிப்பரதுபோல்
முதுபசிதரித்தவர்கள் அன்னம்புசித்துலகில்
முதுபசி தணிப்பரதுபோல்

பாகந்தரித்தவர்கள் சற்குருவினைக்கப்
பயோததி படிந்தேபிர
பஞ்சவெப்பந் தணிப்பார்களென்ருகமம்
பலகலைகள் சொல்லவும்கேட்

டாகந்தரித்தமல வடவையாற் சுடுண்டுஎன்
ஐயனே நின்கடைக்கண்
ஆனந்தஅருண்மழையின் மூழ்கவழி பாராமல்
அவமாக நாள்கழித்தேன்

ஊகங்கொடுத்தருளை அடையும்வழி அருளுவாய்
ஓங்குகுரு பரநாதனே
ஒன்ருகிஆனந்த உருவாகிஎன்உயிர்க்கு
உயிரான பரமசிவமே. 8

பொன்னினை விழுங்குமொரு ரசகுளிகைபோலவும்
பூதவிருள் தனைவிழுங்கும்
பூர்ணசந்த்ரோதயம் போலவும்சந்திரன்
பொன்னொளியை உள்விழுங்கு

மன்னும்ஆயிரகோடி சூரியர்கள்போலவும்
வல்இரும் பினைவிழுங்கு
மண்டுகனல்போலவும் உப்பினைவிழுங்கிடும்
வாரிநீரைப்போலவும்

என்னைநீஉள் விழுங்கிக்கொண்டு இருப்பதுஇனி
எக்காலம் எக்காலமென்று
ஏழையேன் அழுதழுது வாடவும்திருவுள்ளம்
இன்னமும் இரங்கவிலையே
உன்னருள்இரங்குநாள் எந்தநாள்ஆல்அடியில்
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றுகிஆனந்த உருவாகி என்உயிர்க்கு
உயிரான பரமசிவமே. 9

அண்டர்தொழுமிந்த்ராதி வாழ்வையும் விரும்பிடேன்
அட்டசித்தியும் விரும்பேன்
அகிலகலைஞானமும் விரும்பிடேன் உலகுபுகழ்
அரியகீர்த்தியும் விரும்பேன்
பண்டைமலம்எல்லாம் ஒழித்து நின்னருள்பெற்ற
பழையஅடியார்க ளடியார்
பாததாமரைக ளென்றலையின்மேல் வைத்தருட்
பார்வையால் இருள்அகற்றித்
தொண்டுசெய்தரியபர மானந்தவெள்ளந்
துதைந்துவினை யாடிஉலகந்
தோன்றுமல்இறுமாந் திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டினேன்வண்டு
உண்டிடுங்கொன்றையணி அண்டர்நாயக கயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றுகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே, 10

தட்சிணாமூர்த்தி திருவருட்பா முற்றிற்று.